Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU


Tilko Jaffna City Hotel
❖ Banguet Hall
❖ Conference Hall
❖ Restaurant
❖ Luxrious rooms
❖ Swimming Pool
❖ Gymnasium/Spa
70/6, K.K.S Road, Jaffna.
E.Mail - tilkojaffna@gmail.com
Web - www.Cityhoteljaffna.com
T.P - 0212225969
Hotline: 0212229497
(C/2278)

முரசு – 03 திருவள்ளுவர் ஆண்டு 2044 பங்குனி 04 ஞாயிற்றுக்கிழமை (17.03.2013) பக்கங்கள் 20 ஓசை – 168
















# அமெரிக்கத் தீர்மானம் ஆதரிக்கும் இந்தியா?

## பிரேரணையிலும் திருத்தங்கள்

(புதுடில்லி)

இலங்கைக்கு எதிராக ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் அமெரிக்கா சமர்ப்பித்துள்ள பிரேரணையில் மாற்றங்களைச் செய்து இந்தியா தனது ஆதரவை அளிக்குமென அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன. இது தொடர்பாக அந்த ஊடகங்கள் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கைக்கு எதிராக ஐ.நா.வில் அமெரிக்கா சமர்ப்பித்துள்ள தீர்மானத்துக்கு இந்தியா ஆதரவளிக்கும் என்று தெரிகிறது. இது தொடர்பாக காங்கிரஸ் கட்சி மேலிடத் தலைவர்கள் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது. இலங்கை மீதான போர்க்குற்றம் தொடர்பாக ஐ.நா. மனித உரிமை பேரவையில் அமெரிக்கா தீர்மானம் கொண்டுவந்துள்ளது. கடந்த முறை இது போல் அமெரிக்கா ஒரு தீர்மானம் கொண்டு வந்தது. அதில் சில திருத்தங்களுடன் இந்தியா கடைசி நேரத்தில் ஆதரவு தெரிவித்தது. இதையடுத்து தீர்மானம் நிறைவேறியது. ஆனால் திருத்தங்கள் செய்ததால் அந்த தீர்மானத்துக்கு வலு இல்லாமல் நீர்த்து போனது.

இப்போதும் கிட்டத்தட்ட அது போன்ற ஒரு தீர்மானத்தைத்தான் அமெரிக்கா கொண்டுவந்துள்ளது.

இந்த நிலையில் அமெரிக்க தீர்மானத்தின் மீதான இந்தியாவின் நிலையை அறிவிக்க

19 ஆம் பக்கம் பார்க்க

## பௌத்த பிக்குகள் மீது தஞ்சாவூரில் தாக்குதல்

(சென்னை)

இந்தியாவுக்கு சுற்றுலா சென்றிருந்த பௌத்த பிக்குகள் சிலர் தஞ்சாவூரில் வைத்து தாக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

தஞ்சாவூர் பெரிய கோயிலைப் பார்வையிடச் சென்ற அவர்கள் மீது தமிழ் அமைப்பினர்கள் தாக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்போது பிக்குகள் சத்தமிட்டவாறு வெவ்வேறு திசையில் ஓடியதாக உறுதிப்படுத்தப்படாத தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும் தாக்குதலில் இருந்து தப்பிய அவர்கள் அங்குள்ள தொல்பொருள் ஆராய்ச்சி நிலைய அலுவலகத்துக்குள் சென்று தஞ்சம் கோரியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## இறுதி வரைபுத் திட்டத்திற்காக காத்திருக்கிறது அரசாங்கம்

(கொழும்பு)

அமெரிக்கா சமர்ப்பிக்கவுள்ள தீர்மானம் குறித்த இறுதி வரைவுத் திட்டத்திற்காக காத்திருப்பதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னரே வாக்களிப்பது குறித்து ஏனைய நாடுகள் தீர்மானிக்கும் என அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கையின் மனித உரிமை நிலைமைகளைக் கருத்திற் கொள்ளாது வெறும் உள்நோக்கத்துடன் தீர்மானம் நிறைவேற்றப் படக்கூடிய அபாயம் காணப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

தீர்மானம் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் நாட்டுக்கு மக்களுக்கு மிகவும் உசிதமானது எதுவெனக் கவனத்திற்கு கொண்டு அரசாங்கம் தீர்மானம் எடுக்கும் என அவர் தெரிவித்துள்ளார்.

அகில கால மீளாய்வு

19 ஆம் பக்கம் பார்க்க

# தமிழகத்தில் தொடரும் மாணவர் போராட்டம்

(சென்னை)

தமிழகத்தில் மாணவர் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவரும் நோக்கத்தில் கல்லூரிகளுக்கு காலவரையறையற்ற விடுமுறை தமிழக அரசால் அறிவிக்கப்பட்டும் மாணவர்கள் போராட்டம் முழு வீச்சில் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

இலங்கை மீது பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளுக்காக தமிழக மாணவர்கள் கடந்த ஒரு வார காலமாக தொடர் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். சென்னை சட்டக் கல்லூரி மாணவர்கள் 6 ஆவது நாளாக தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களில்

19 ஆம் பக்கம் பார்க்க



# மேற்குலக நாடுகளின் அரசியலில் தாக்கம் செலுத்துகின்றனர் புலிகள்

## பாதுகாப்புச் செயலர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் மேற்குலக நாடுகளின் அரசியலில் தாக்கம் செலுத்தி வருவதாக பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மேற்குலக நாடுகளின் தேர்தல் அரசியலில் விடுதலைப் புலிகளுக்கு செல்வாக்கு இருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

கனடா, பிரித்தானியா, அமெரிக்கா மற்றும் அவுஸ்ரேலியா போன்ற நாடுகளில் இந்த நிலைமை நீடித்து வருதாகத் தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாகவே குறித்த நாடுகள் இலங்கை மீது அழுத்தங்களைப் பிரயோகித்து வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

விடுதலைப் புலிகள் யுத்த ரீதியாக தோற்கடிக்கப்பட்டாலும் பிரசார மற்றும் ஏனைய வழிகளில் தொடர்ந்தும் சில நாடுகளில் வலுவாக இயங்கி வருகின்றார்கள் என்பதனை நினைவில் நிறுத்திக்கொள்ள வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

இந்தத் தருணத்தில் அனைத்து தரப்பினரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டியது மிகவும் அவசியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

யுத்தத்தின் பின்னர் பாரியளவு அபிவிருத்தி ஏற்பட்டுள்ள போதிலும் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உள்ள சிலர் நாட்டுக்கு எதிராக போலிப் பிரசாரங்களை கட்டவிழ்த்துவிடுகின்றனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

19 ஆம் பக்கம் பார்க்க

## காணாமற்போன எவரும் இராணுவ முகாம்களில் இல்லை

### வன்னிக் கட்டளைத் தளபதி கூறுகிறார்

(வவுனியா)

காணாமற்போனவர்களுக்காக சுலோகங்களை ஏந்திப் போராடுவதனாலும் இராணுவத்தினர் மீதும் அரசாங்கத்தின் மீதும் குற்றம் சுமத்துவதனாலும் எவ்வித தீர்வும் கிடைக்கப்போவதில்லை. ஏனெனில் காணாமற்போனவர்கள் எவரும் இராணுவ முகாம்களில் இல்லை என்பதனை இராணுவ உயரதிகாரி என்ற வகையில் என்னால் உறுதியாகக் கூறமுடியும் என வன்னிக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் பொனிபஸ் பெரேரா

19 ஆம் பக்கம் பார்க்க

## நிரந்தர சமாதானம் ஏற்பட ஜெனிவா வழியமைக்க வேண்டும்

### ஆய்வாளர் கருணாகரன் தெரிவிப்பு



இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரங்கள் தொடர்பாக ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையினால் மேற்கொள்ளப்படும் முயற்சிகள் இலங்கையில் ஒரு நிரந்தரமான அமைதியை, அரசியல் தீர்வை கொண்டுவரக்கூடியதாக சமநிலையுடன் இருக்க வேண்டும் என்று செய்தித் துறை ஆய்வாளர்களில் ஒருவரான கருணாகரன்

19 ஆம் பக்கம் பார்க்க

## கடல்சார் பாதுகாப்பை உறுதிப்படுத்த இலங்கை, ஜப்பான் இணக்கம்

இந்தியப் பெருங்கடலில் கடல்சார் பாதுகாப்பு மற்றும் கடலோரக் காவல்படைக் கண்காணிப்புத் தொடர்பான இருதரப்பு ஒத்துழைப்புகளை மேலும் வலுப்படுத்திக் கொள்வதற்கு இலங்கையும் ஜப்பானும் இணங்கியுள்ளன.

டோக்கியோவில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும், ஜப்பானியப் பிரதமர் சின்சோ அபேக்கிற்கும் இடையில் நடந்த சந்திப்பின் போதே இது தொடர்பான இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

அத்துடன் இதுகுறித்த கூட்டறிக்கை ஒன்றும் வெளியிடப்

19 ஆம் பக்கம் பார்க்க



# யாழில் கஜமுத்து; விற்பனை செய்தவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழில் கஜமுத்து விற்பனை செய்ய முற்பட்ட நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

திருகோணமலையைச் சேர்ந்த குறித்த நபர் யாழ். பஸ் நிலையத்தில் சுமார் 8 இலட்சம் பெறுமதியான இரு கஜமுத்துக்களை விற்பனை செய்ய முற்பட்ட வேளையில் யாழ்.விசேட புலனாய்வுப் பிரிவுப் பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வடமாகாண சிரேஸ்ட பொலிஸ்மா அதிபர் காமினி சில்வாவின அறிவுறுத்தலுக்கு அமைய யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் இந்து கருணாரட்ண தலைமையில் சென்ற விசேட புலனாய்வு பிரிவினரால் மேற்படி நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட நபர் இன்று யாழ்.நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்படவுள்ளதாகவும், கஜமுத்து எங்கிருந்து பெறப்பட்டது, இதனுடன் தொடர்புடைய வேறுநபர்கள் உள்ளனரா என்பது தொடர்பான விசாரணை மேற்கொண்டு வருகின்றதாகவும், யாழ் மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் மேலும் கூறினார். (25)

# தனியார் பேருந்து விபத்து; தொலைபேசிக் கம்பங்கள் சேதம்

(பருத்தித்துறை)

மந்திகைப் பகுதியில் இடம்பெற்ற விபத்தொன்றில் ஐந்துக்கும் மேற்பட்ட தொலைபேசிக் கம்பங்கள் சேதமடைந்துள்ளன.

நேற்று மாலை 3.30 மணியளவில் மந்திகை மடத்தடிப்பகுதியில் உள்ள தொலைபேசிக் கம்பத்துடன் யாழ். - பருத்தித்துறை தனியார் பேருந்து ஒன்று மோதி விபத்துக்குள்ளானது. இதனால் தொலைத்தொடர்பு வடங்களில் ஏற்பட்ட விரிவால் 5 இற்கும் மேற்பட்ட கமபங்கள் முறிவடைந்துள்ளதுடன் ஒரு கம்பம் முறிந்து இரண்டு சில்லு உழவு இயந்திரத்தின் மீதும் விழுந்துள்ளது இதனால் உழவு இயந்திரமும் சேதமடைந்துள்ளது.

இதனால் தொலைத்தொடர்பு பரிவர்த்தனை பாதிப்படைந்துள்ளதுடன் சில மணிநேரம் இப்பாதையூடான போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்விபத்து தொடர்பாக பருத்தித்துறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (109)

# துயரக்கடலில் வாழ்ந்த தமிழர்களுக்கு துடுப்பாக இருந்தவர் அமைச்சர் டக்ளஸ்


## – ஆசிரியர் யோகநாதன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ் பேசும் மக்கள் கடந்த மூன்று தசாப்த காலங்களாக யுத்த சூழ்நிலையில் பல்வேறுபட்ட நெருக்கடிகளையும் துயரங்களையும் சந்தித்து துயரக் கடலில் வாழ்ந்து வந்தனர்.

வடமாகாண மக்களுக்கு துடுப்பாக இருந்து அவர்களது அரசியல் உரிமைகளைப் பெற்றுத் தருவதற்காக சதாகாலமும் உழைத்துக் கொண்டிருப்பவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா என இலங்கை போக்குவரத்துச் சபையின் வடபிராந்திய பயிற்சிப் பாடசாலையின் ஆசிரியர் யோகநாதன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திலுள்ள அமைச்சரின் செயலகத்தில் நேற்று இலங்கை மின்சாரசபை மற்றும் வடபிராந்திய போக்குவரத்துச் சபை ஊழியர்களைச் சந்தித்து கலந்துரையாடிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



நேற்றைய சந்திப்பில் இலங்கை மின்சார சபைக்கென பயிலுனர்களாக புதிதாக நியமனம் பெற்றவர்களுடன் வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் தற்காலிக ஊழியர்களும் கலந்து கொண்டனர்.

இதன்போது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கருத்துரையாற்றும்போது,

அரச ஊழியர்கள் தமது கடமைகளை உணர்ந்து மக்கள் பயன் பெறும்வகையில் அதனை முன்னெடுக்க வேண்டும்.

அத்துடன் உயர் அதிகாரிகளுடனும் மக்களுடனும் அன்பாகவும் பண்பாகவும் நடந்து கொள்ளும் அதேவேளை ஒருவருக்கொருவர் மதிப்பளிக்கவும் சமூகத்திற்கு நல்லதையே செய்ய வேண்டுமென்பதையும் கருத்தில் கொண்டு செயலாற்ற வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

அழிவை நோக்கியதானதாக இல்லாமல் ஆக்கத்தை நோக்கியதான எமது செயற்திட்டங்களுக்கு எதிர்காலங்களில் அனைவரும் ஒன்றிணைந்து பங்களிக்கும்போது மேலும் பல்வேறுபட்ட அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படுமென்றும் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி அதனூடாக எமது சமூகத்தை சொந்தக் கால்களில் நிற்கவைப்பதே எமது அரசியல் நோக்கமென்றும் சுட்டிக்காட்டினார்.

அத்துடன் வடபிராந்திய போக்குவரத்துச் சபையில் தற்காலிகமாக பணிபுரியும் பணியாளர்களுக்கு நிரந்தர நியமனம் பெற்றுக்கொடுப்பது தொடர்பிலும் துறைசார்ந்தோரூடாக நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் தெரிவித்தார்.

இதன்போது ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்), ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்) ஆகியோர் உடனிருந்தனர்.

# மகா கும்பாபிஷேகம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை - தம்பாட்டி நுனிபுரம் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்பாள் ஆலயத்தில் நாளை காலை 9.48 முதல் 11.31 வரையான சுபமுகூர்த்தத்தில் புனராவர்த்தன அஷ்டபந்தன நவகுண்ட பஷ பிரதிஸ்டா மகா கும்பாபிஷேகப்பெருவிழா மிகச்சிறப்பாக நடைபெறவுள்ளது.

இவ்கும்பாபிஷேக நிகழ்வு சிவஸ்ரீ நாகேந்திர பாலசுப்பிரமணிய சிவாச்சாரியாரின் தலைமையில் நடைபெறவுள்ளது..

அருளுரையினை ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் கும்பாபிஷேக விழா வர்ணனையை வர்ணனைக் கலாநிதி மதுரகவி காரை எம்.பி அருளானந்தன், வாழ்த்துரையினை சிரேஷ்ட விரிவுரையாளர் க.அருந்தாகரன், சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி நாச்சியார் செல்வநாயகம் வழங்கவுள்ளனர். (60)

# மண்டைதீவின் தென்மேற்கில் மேலும் ஒரு உவர்நீர்த் தடுப்பணை

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவின் தென்மேற்குப் பகுதியில் மேலுமொரு உவர்நீர்த தடுப்பணை நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக அப்பகுதியின் விவசாய சம்மேளனத் தலைவர் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் இந்த உவர் நீர் தடுப்பணை வேலணையில் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

ஏற்கனவே இந்தப் பகுதியின் வடக்குப் புறமாக பிரதான வீதிக்கு கிழக்காகவும், மேற்காகவும் இரண்டு 'கிலோ மீற்றர் நீளமான உவர்நீர்த் தடுப்பணை நிர்மாணப்பணிகள் இந்த வருடம் பூர்த்தியடைந்த நிலையில் எஞ்சியிருந்த இந்த உவர் நீர்த் தடுப்பணை தற்சமயம் புனரமைப்புச் செய்யப்பட்டுவருவதாக அவர் குறிப்பிட்டார்.

இதன் மூலம் மண்டைதீவுப் பகுதியில் இருந்து மழைநீர் முற்றுமுழுதாக கடலில் கலந்து செல்வதனையும், அதேபோல் உவர்நீர், வயல் நிலங்களுக்குள் சேர்வதனையும் தடுக்கக் கூடியதாக இருக்கும். இதன் மூலம் அந்தந்தப் பகுதியில் நிலத்தடி நீரினை நல்ல நிலையில் பாதுகாத்துக்கொள்ள முடியும் என்று தெரிவித்தார். இதனூடாக குடிநீர்ப்பிரச்சினையையும் தீர்த்துக்கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

நிர்மாணிக்கப்பட்ட இந்த உவர் நீர்த்தடுப்பணை மூலம் கடந்த முறை பெய்த மழைநீரை கடலில் முழுவதுமாக கலந்து விடாது தேக்கிவைக்க முடிந்திருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை அல்லைப் பிட்டிப் பகுதியிலும் வடக்குப் புறமாக இவ்வாறு உவர்நீர்த் தடுப்பணை ஒன்றும் நிர்மாணிக்கப்பட்டுவருவதாகவும் நீர்ப்பாசன திணைக்கள வட்டாரங்களில் இருந்து தெரியவந்துள்ளது. (பா)



வடக்கு மாகாண சபையின் பிரதான தலைமை அலுவலகங்களைக்கொண்ட மூன்று மாடிக் கட்டடத்திற்கான நிர்மாணப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இக்கட்டடம் கைதடி ஏ-9 வீதியருகிலேயே அமைக்கப்பட்டு வருகிறது. இக்கட்டடத்தில் அலுவலகங்கள் இயங்கத்தொடங்குமாயின் வடமாகாணத்தில் உள்ள மக்களுக்கான சேவையினை இலகுவான முறையில் பெறக்கூடிய வாய்ப்புக்களால் மக்கள் பெரும் நன்மையடைவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. (80)


**வீடு வாடகைக்கு**

யாழ்ப்பாணம் பிரதான வீதிக்கு அண்மையாக சுண்டிக்குளியில் நிறுவன/அலுவலகப் பாவனைக்குகந்த கட்டடம் வாட்கைக்கு உண்டு. வீடாகவும் பயன்ப்படுத்தலாம்.

தொடர்புகளுக்கு:
071 428 5739, 071 479 7357.

C/169


# துறையூர் ஐயனார் ஆலய வருடாந்த மஹோற்சவம்

(வேலணை)

வேலணை - துறையூர் பூரணை, புட்கலை சமேதர ஹரிகர புத்திர ஐயனார் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று ஆரம்பமாகி தொடர்ந்து பத்து நாட்கள் நடைபெறவுள்ளது.

காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகும் விசேட பூசையுடனான அபிஷேகம் நண்பகல் 12.00 மணி வரை நடைபெறவுள்ளது. தொடர்து மாலை விசேட பூசை 6.00 மணிக்கு ஆரம்பமாகி 8.30 மணி வரை நடைபெறவுள்ளது.

அத்துடன் மாலைப் பூசைக்கு முன்னர் விசேட பஜனைப் பிரார்த்தனை மாலைப் 5.00 மணிக்கு ஆரம்பமாகி பத்து நாட்களும் நடைபெறவுள்ளது. (21)

# வலிகாமம் வலயத்தின் தமிழ்த்தினப் போட்டிகள்


(மருதனார்மடம்)

வலிகாமம் வலய மட்ட தமிழ்த்தினப் போட்டிகள் நடைபெறும் திகதிகள் அறிவிக்கப்பட்டுள்ளன. பிரிவு 1- 5 வரையான சகல எழுத்தாக்கப் போட்டிகளும் எதிர்வரும் 21 ஆம் திகதி வியாழக் கிழமை 1.00 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

மொழித்திறன் போட்டிகள் பிரிவு 1 - 5 வரையான பேச்சுப் போட்டிகள், பாவோதல் பிரவு 1, 2 இற்கான வாசிப்பு, பிரிவு 1 இற்கான ஆக்கத்திறன் வெளிப்பாடு (கதை கூறல்) மேடை நாடகம் - திறந்த போட்டி, விவாதம் - திறந்த போட்டி, தமிழறிவு வினாவிடை - திறந்த போட்டி ஆகியன 08.04.2013 திங்கள் காலை 8 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

கலைத்திறன் போட்டிகளில் இசைவும், அசைவும் - பிரிவு 1, இசை தனிப்பிரிவு 2, 3, 4, 5. இசைக் குழு - பிரிவு 1, நடனம் பிரிவு -2, 3, 4, 5. நடனம் குழு - 1, நாட்டிய நாடகம் - திறந்த போட்டி, நாட்டார் பாடல் - திறந்த போட்டி, வில்லுப்பாட்டு - திறந்த போட்டி என்பன 04.04.2013 செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியளவில் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

போட்டிக்காக கோட்ட மட்டத்தில் வெற்றி பெற்று தகுதி பெற்ற போட்டியாளர்கள் தவறாது பங்குபற்ற நடவடிக்கைகளை பாடசாலைகள் எடுக்கவேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (17)





கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலர் பிரிவில், கிருஸ்ணபுரம் கிராம அலுவலர் பிரிவில் விநாயகபுரம் கிராமத்தின் பொதுநோக்கு மண்டபத்தில் 14.03.2013 வியாழக்கிழமை இலங்கை சமூக பாதுகாப்புச் சபையின் சுயதொழில் ஓய்வூதியத் திட்டம் தொடர்பான கலந்துரையாடல் நடைபெற்ற போது, சபையின் மாவட்ட இணைப்பதிகாரி பா.பிரதீபன் விளக்கமளிப்பதையும், மாவட்ட சமூக சேவைகள் அதிகாரி வே.தபேந்திரன் சக அலுவலர்கள் அருகில் இருப்பதையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் படங்களில் காணலாம். (90)

# சுற்றுவட்டப் பாதை இல்லை கைதடிச் சந்தியில் பெரும் நெருக்கடி



(கைதடி)

கைதடிச் சந்திப் பகுதியில் சுற்றுவட்டப் பாதை அமைக்காததினால் போக்குவரத்து மேற்கொள்ளும் மக்களும், வாகனங்களும் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கவேண்டி உள்ளது.

இச் சந்தியானது மூன்று முக்கியத்துவம் வாய்ந்த வீதிகளைக் கொண்டுள்ளது. அதாவது ஏ-9 வீதியாக யாழ்ப்பாணம் செல்லும் வீதியும், அத்தோடு பிரிந்து மானிப்பாய் செல்லும் வீதியையும் கொண்டு அமைந்துள்ளது.

இச்சந்திப் பகுதியில் வீதிப் புனரமைப்பு வேலைகள் மிகவும் சுறுசுறுப்பாக நடைபெற்றுள்ள வேளையில், இங்கு ஏற்கனவே தற்காலிகமாக அமைக்கப்பட்டிருந்த சுற்றுவட்டம் அகற்றப்பட்டிருந்தது.

இப்பகுதி யாழ்ப்பாணம் ஏ-9 வீதியூடாகச் செல்லும் நெடுந்தூர வாகனங்களும், பாரவூர்திகளுமாக வாகனப் போக்குவரத்துக்கூடிய நிலையில் இந்தச் சந்திப் பகுதியானது இப்போது மக்களுக்கான வசதி வாய்ப்புக்களையும் கொண்டு அமைந்துள்ளது.

இதனால் முக்கியத்துவம் வாய்ந்த இந்த கைதடிச் சந்திப் பகுதியில் வீதிப் புனரமைப்பு வேலைகள் முடிவுற்றிருந்தும் நீண்டகாலமாக இந்த இடத்தில் சுற்றுவட்டம் அமைக்கப்படாது காணப்படுகின்றது.

அத்துடன் இங்கு வீதிப் போக்குவரத்துக் குறியீடுகளும் இன்றி இருப்பதனால் இங்கு போக்குவரத்தை மேற்கொள்ளும் மக்களும் வாகனங்களும் பெரும் பிரச்சினைகளை எதிர்நோக்கவேண்டியுள்ளது.

இதனால் மக்கள் பெரும் பீதியுடனேயே பயணிக்க முடிகின்றது.

எனவே, இவற்றினைக் கவனத்தில் எடுத்து இச் சந்திப் பகுதியில் விரைவாக சுற்றுவட்டப்பாதை அமைப்பதுடன் இதற்கான வீதிக் குறியீடுகளையும் அமைத்துத் தந்துதவுமாறு மக்களால் வேண்டுகோள் விடுக்கப்படுகின்றது. (80)

# சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்



நெடுந்தீவைச் சேர்ந்த யக்கரியாஸ் தேவ தாஸ் அண்மையில் நீதி அமைச்சினால் அகில இலங்கை சமாதான நீதவானாக நியமிக்கப் பட்டு யாழ். மாவட்ட நீதிமன்றில் நீதிபதி எ.எ.ஆனந்தராஜா முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார். இவர் யாழ்ப்பாண பல்கலைக்கழக கலைப் பட்டதாரியும், இந்தியா - மதுரை காமராஜர் பல்லைக்கழகத்தில் அரசறிவியல் பாடத்தில் முதுகலைமாணிப் பட்டத்தையும் பெற்றுள்ளார். தற்சமயம் இவர் கொழும்பு கொட்டாஞ்சேனை தேசிய சேமிப்பு வங்கியில் அதிகாரமளிக்கப்பட்ட மேற்பார்வை உத்தியோகத்தராக கடமையாற்றி வருகின்றார். முன்னர் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, சாவகச்சேரி ஆகிய இடங்களில் உள்ள தேசிய சேமிப்பு வங்கிகளிலும் கடமையாற்றியுள்ளார்.

# கிளிநொச்சியில் இரண்டாம் கட்டமாக செயற்கைக் கை, கால் பொருத்துதல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் மேத்தா பவுண்டேசன் நிறுவனத்தினால் மாற்றுவலுவுள்ளோருக்கான செயற்கைக் கை,கால், பொருத்துதல் தொடர்பான மருத்துவ முகாமின் இரண்டாம் கட்ட நிகழ்வு எதிர்வரும் 23,24,25 ஆம் திகதிகளில் கண்டி வீதியிலுள்ள கருணா நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இவ் வருடம் மாசி மாதம் நடைபெற்ற மருத்துவ முகாமில் செயற்கைக் கை, கால், ஆதார உறுப்புக்கள் போன்றவற்றிற்கு அளவு எடுக்கப்பட்டவர்களுக்கே அவற்றைப் பொருத்துதல், நடைப்பயிற்சி பழக்குதல் ஆகியவற்றிற்கே இம் முறை மருத்துவ முகாம் நடத்தப்பட உள்ளது.

23.03 காலை 8 மணிமுதல் மாலை 4 மணிவரை பாடசாலை மாணவர்களுக்கும்,

24.03 காலை 8 மணிமுதல் மாலை 4 மணி வரையும், 25.03 காலை 8 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை ஏனையவர்களுக்கும் இம் மருத்துவ முகாம் நடைபெறவுள்ளது.

இதில் உரிய பயனாளிகளைக் கலந்துகொண்டு பயன் பெறுமாறு மேத்தா நிறுவன தலைவர் அறிவித்துள்ளார்.

இது தொடர்பான அறிவித்தல் பிரதேச செயலர் அரசாங்க அதிபர் ஆகியோருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. (90)



# பெண்மையைப் போற்றுவோம்

இந்துப்பூகோள பிரபஞ்சத்தில் மட்டுமல்ல கல் தோன்றா, மண் தோன்றா காலத்திலும் இதிகாசங்களிலும் பெண் என்பவள் போற்றுதற்குரியவளாகவே காணப்பட்டாள். பெண் உன்னத நிலையில் மதிக்கப்பட்டாள். பெண் தெங்வங்கள் புகழ்ச்சிக்குரியவையாக காணப்பட்டன.

கால ஓட்டத்தில் இந்த மாற்றங்கள் தலை கீழாக மாறின, பெண் எதிர்மாறாக நடத்தப்பட்டாள். சமூகத்தில் பெண் தனது கௌரவத்தை இழந்தாள். இந்தத் தொடர்கதை இந்த நூற்றாண்டிலும் தொடர்ந்த வண்ணமாகவே உள்ளன.

பெண் என்பவள் தாயாக இருக்கிறாள். மனைவியாக இருக்கின்றாள். சகோதரிகளாக இருக்கின்றார்கள் இவ்வாறு பல பாத்திரங்களில் இருக்கும் பெண்களின் தற்போதைய நிலையை ஆராய வேண்டிய தேவையுள்ளது.

"நல்லதோர் வ்ணை செய்தே அதை நலங்கெட புழுதியில் எறிவதுண்டோ" பாரதியின் பாடலை நினைவுபடுத்துகின்ற அளவிற்கு இன்றைய யாழில், இன்றைய பெண் களின் நிலைப்பாடுகளைப் பார்க்கின்ற போது பல பெண்கள் குடும்ப வன் முறையினால் பாதிக்கப்படுகின்றார்கள்.

குறிப்பாக பார்க்கின்றபோது பெண்கள் குடிப்பழக்கமுடைய கணவனால் பாதிக்கப்படுகின்றார்கள். பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்படுகின்றார்கள். ஒதுக்கி வைக்கப்படுகின்றார்கள். புறக்கணிக்கப்படுகின்றார்கள். இவ்வாறு பல துன்பங்களைச் சந்திக்கும் பெண்கள் பலபேர் உள்ளனர்.

இவ்வாறு ஒருபுறமிருக்க யாழில் 4000 இற்கும் மேற்பட்ட பெண்களை தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்கள் காணப்படுகின்றன. இப்பெண்கள் தமது பிள்ளைகளை வளர்ப்பதற்காக அன்றாடம் பெரும்பாலானோர் கூலி வேலை, தோட்ட வேலைக்குச் செல்கின்றனர். இவர்கள் நாளாந்தம் உழைக்கும் வருமானமானது போதியளவு கிடைப்பதில்லை. அத்துடன் மாலை நேரத்திற்குப் பின்னரே தாம் வந்து அன்றாட வீட்டுவேலைகளை மேற்கொள்கின்றார்கள்.

இந்த விடயம் அவர்களில் நாளாந்த வாழ்வியல் முறையாகக் காணப்படுகின்றது. இவ்வாறான பெண்கள் தமது வாழ்வியலை நோக்கிய பயணத்தை மிகுந்த சவாலுடன் எதிர்கொள்கின்றார்கள்.

இந்த நிலை மாறவேண்டும் எனில் சமூகத்தில் இருக்கக்கூடிய பெற்றோர், இளைஞர், சமூக அமைப்பின் பிரதிநிதிகள் பெண்களின் மனநிலையை மனதளவில் உணரவேண்டும். ஒவ்வொரு தனிமனிதனும் எடுக்கும் சமூக பொறுப்பு மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும். இந்த சமூக மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக கீழ்வரும் விடயங்களை சமூகத்தின் பார்வைக்கும் செயற்பாட்டிற்கும் தருகின்றோம்.

- தனி மனிதன் சமூக பொறுப்புள்ளவனாக செயற்பட வேண்டும்.
- தனி மனிதன் பெண்களை மதிக்கக் கற்றுக்கொள்ளவேண்டும்.
- குடும்பத்தில் உள்ளோர் பெண்களின் தனித்துவங்களை மதிக்கவேண்டும்.
- குடும்பத்தில் உள்ளோர் பெண்களின் ஆற்றல் திறன்களை மேம்படுத்த வேண்டும்.
- சமூகம் பெண்களின் கிராம மட்ட செயற்பாடுகளிற்கு ஒத்துழைப்பு வழங்கப்பட வேண்டும்.

இவ்வாறு செயற்படுவதன் மூலமே பாரதி கண்ட புதுமைப்பெண்ணை உருவாக்க முடியும். அதனுடன் சமூக மாற்றத்தினையும் ஏற்படுத்த முடியும்.

இந்த எண்ணக்கருவிற்கு அமைய யாழ். சமூக செயற்பாட்டு மையமானது நலிவுற்ற பெண்களின் நல்வாழ்வுக்காக செயற்பட்டு வருகின்றது.

அவ்வகையில் நாம் அண்மைக்காலமாக கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் மகளிர் தினத்தினை கொண்டாடுகின்றோம்.

மாற்றம் என்பது காலத்தின் தேவையாகவுள்ளது என்பதை உணர்ந்து பெண்களின் சாதனையை போற்றுவோம். இந்த மாற்றத்திற்காக சமூக ஆர்வலர்கள், பெண் செயற்பாட்டாளர்கள், புத்திஜீவிகள் அனைவரும் கைகோர்த்து பயணிப்போம்.

- யாழ். சமூக செயற்பாட்டு மையம்.

உடலுக்கு எப்படி உடற்பயிற்சியோ அதுபோல மனதுக்குப் பயிற்சி புத்தக வாசிப்பு! - சிக்மண்ட் ஃப்ராய்ட்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## நாம் எங்கிருந்து தொடங்குவது?

பாண்டவர்களின் வனவாசத்தின் போது, ஒரு குளத்தைக் காத்து நிற்கும் யட்சன், தன் கேள்விகளுக்குப் பதில் சொல்லும்படி கேட்க, தங்கள் வீரத்தை நம்பி அவனை அலட்சியப்படுத்தும் வீம, அர்ச்சுன, நகுல, சகாதேவர்களை குளத்தினுள் மூழ்கடித்து விடுகிறான்.

தம்பியர் யாரும் திரும்பி வராததைக் கண்ட தருமன் அக்குளத்திற்கு வருகிறான். யட்சனின் கேள்விகளுக்குப் பதிலைச் சொல்கிறான். அதற்காகத் தருமனை மெச்சிய யட்சன், "உன் தம்பியரில் யாராவது ஒருவனின் உயிரைத் திருப்பித் தரலாம். யார் வேண்டும் கேள்" என்கிறான்.

அப்படியானால் சகாதேவனைப் பிழைக்கச் செய்யுங்கள் என்கிறான் தருமன். "இது என்ன ஆச்சரியம்! உன் சொந்தத் தம்பியரான வீமன், அருச்சுனனை விட்டுவிட்டு சகாதேவனைக் கேட்கிறாயே" என்கிறான் யட்சன்.

"ஆம், எங்கள் தாயான குந்திக்குப் பிறந்தவர்களில் நான் பிழைத்திருக்கிறேன். அதுபோல் மற்ற தாயாரான மாத்ரிக்குப் பிறந்தவர்களில் யாராவது மிஞ்ச வேண்டாமா? அதனால்தான் சகாதேவனைக் கேட்டேன்" என்கிறான். இதுகேட்ட யட்சன் மகிழ்ந்து எல்லோரையும் பிழைக்க வைக்கிறான்.

மற்றவர்களைப் பற்றிச் சிந்திக்கும் இந்த அற உணர்வை நாம் தொலைத்துவிட்டிருப்பதும் நம் அவலங்களுக்குக் காரணம் என்று தோன்றுகிறது. நமது துன்பங்களைப் பற்றியேதான் நாம் யோசிக்கிறோம். அதுமட்டுமல்ல, மற்றவர்களும் நம் துன்பத்தைப் பற்றியே யோசிக்க வேண்டும் என்றே எதிர்பார்க்கிறோம்.

இதனால்தான் நமக்குச் சார்பாகப் பேசாதவர்கள், நம் சார்பு நிலையை எடுக்காதவர்கள் எல்லோரையும் உடனடியாகவே பகையாளிகள் லிஸ்டில் சேர்த்து விடுகிறோம். அவர்களது தேவை என்ன என்றோ அவர்களது பிரச்சினை என்ன என்றோ நாம் கவனத்தில் எடுப்பதில்லை.

ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான தேவையிருக்கும் என்பதை உணர மறுக்கிறோம். அவர்களுக்குத் தேவையிருக்கும்போது அவர்கள் நமக்குச் சார்பாக இருப்பார்கள்; அந்த நிலை மாறுகையில் நம்மைக் கண்டுகொள்ளாமலுமிருப்பார்கள் என்பதை நாம் புரிந்துகொள்ளத் தவறுகிறோம். நம்மைக் கைவிட்டு விட்டதாகக் கோபப்படுகிறோம். எதிரிகளாக்கிக் கொள்கிறோம்.

தவிரவும், குறுகிய நோக்கில் நமது அரசியல் இலாபங்கள் இருக்குமென்றால், அதற்கும் எதிரிகள் எப்போதும் தேவைப்பட்டபடியே இருக்கிறார்கள். இதற்காகவும் எதிரிகளை உருவாக்கியபடியே இருக்கிறோம். இப்போது நம் அரசியல் என்பது ஒருவர் மாற்றி ஒருவரை எதிரியாக்கிக் கொண்டிருத்தல் என்று ஆகிவிட்டது.

ஈழத்தமிழர்கள் இன்று நண்பர்களாகக் கருதிக்கொள்ள யாரிருக்கிறார்கள் என்பதை ஒருகணம் யோசித்துப் பார்ப்பது நல்லது. இந்தப் பரந்த பூவுலகில் இப்போது நம் கடைசி நண்பனாகச் சொல்ல முடிந்திருப்பது யாரை? அமெரிக்காதான் அது என்ற முடிவுக்கு நாம் வந்துவிட்டோமா?

எப்படி இந்த நிலைக்கு வந்து சேர்ந்தோம் என்று நாம் யோசித்துப் பார்க்க மாட்டோமா? சரி, அமெரிக்காதான் நண்பன் என்றால் அந்த நாடு சொல்கிறபடி நம்மால் நடந்து கொள்ள முடியுமா? நமக்கு யார் சொல்லும் நியாயத்தை நாம் சரி என்று எடுத்துக் கொள்வோம்? நம்மைத் தவிர மற்றவர்கள் எல்லோரும் பிழை என்பதுதான் நம்முடைய நியாயமா?

உலகத்தை விட்டுவிடுவோம். நம்முடைய சரியை சரி என்று சொல்லக் கூடிய, இந்த நாட்டிலுள்ள ஏனைய தரப்பு மக்களுடன் நாம் பேசினோமா? நம்முடைய சரியை நிறுவுவதற்கான பயணத்தை நாம் எங்கிருந்து தொடங்குவது? - ஆசிரியர்

# மதவாதம் கட்டு மீறிச்சென்றால் காத்திருக்கிறது சட்ட நடவடிக்கை

(கொழும்பு)

மதவாதக்கொள்கைகள் நாட்டின் சட்ட திட்டங்களை மீறாத வகையில் அமையவேண்டும் என்றும் அவற்றை மீறினால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பொலிஸ்மா அதிபர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

நாட்டினுள் நிலவும் மத ஒத்துழைப்பு மற்றும் சம வாழ்வாதாரம் ஆகியனவற்றை சீர்குலைப்பதற்காக சில தரப்பினர் முயற்சிகளை மேற்கொள்வதாக காவல்துறை மா அதிபர் என்.கே. இலங்கக்கோன் மேலும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கை ஒன்றிலேயே இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சகல இன மக்களினதும், பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக நாட்டினுள் நிலவும் சட்டங்களை உரிய முறையில் முன்னெடுக்க காவல் துறையினர் தயாராக இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.ஏதேனும் ஒரு பிரச்சினை ஏற்படின் சம்பந்தப்பட்டவர்கள் கலந்துரையாடி தீர்வினைப் பெற்றுக் கொள்வதே ஜனநாயக நாடொன்றின் முறைமையாகும்.

நாட்டில் மதவாதக் கொள்கைகள் முன்வைக்கப்படும் பட்சத்தில் அவை நாட்டின் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டதாக அமைய வேண்டும் என்றும் காவல்துறை மா அதிபர் என். கே. இலங்கக்கோன் விடுத்துள்ள அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

# ஹலால் சான்றிதழ் முறமை இருக்கக் கூடாது இலங்கையில்

## என்கிறது ஹெல உறுமய

ஜெனிவா மாநாட்டுக்கு பயந்து, ஹலால் சான்றிதழை பாதுகாக்க இடமளிக்கப் போவதில்லை என்று ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க இதனைத் தெரிவித்துள்ளார்.

ஹலால் சான்றிதழ் முற்றுமுழுதாக இலங்கையில் இருந்து நீக்கப்பட' வேண்டும்.

இதனை விடுத்து எந்தக் காரணத்துக்காகவும் அதனை தக்கவைத்துக் கொள்ள முயற்சிக்கப்படுமாக இருந்தால், அதற்கு எதிராக போராட்டம் நடத்தப்படும் என்று அமைச்சர் எச்சரித்துள்ளார்.

இதேவேளை, நாட்டின் வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ள நிலையில், இதனை மூடிமறைப்பதற்காக அரசாங்கம் ஹலால் பிரச்சினையை தூண்டிவிட்டிருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

அதன் தலைவர் ரணில்விக்ரமசிங்க குருணாகலையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போதே இதனைத் தெரிவித்துள்ளார்.

# நலிவுறும் நிலையில் மாணவர்கள் மதிய உணவு நிறுத்தப்பட்டது ஏன்?

வவுனியா தெற்கு வலய பாடசாலைகள் சிலவற்றில் உலக உணவுத்திட்டத்தின் மூலம் வழங்கப்படும் மதிய போசனம் தற்காலிகமாக வழங்கப்படாமையினால் மாணவர்கள் கற்றலில் ஆர்வம் செலுத்தாதுள்ளதாக அதிபர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் அதிபர்கள் மேலும் தெரிவிக்கையில்,

உலக உணவுத்திட்டத்தினூடாக வழங்கப்படும் மதிய போசன உணவுகள் கடந்த சில வாரங்களாக முடிவடைந்துள்ளமையினால் பாடசாலைகள் சிலவற்றில் மதியபோசனம் வழங்கப்படுவது நிறுத்தப்பட்டுள்ளது.

உணவுப் பொருட்கள் முடிவடைந்துள்ளமை தொடர்பாக உலக திட்ட அதிகாரிகளுக்கும் வலயக் கல்வித் திணைக்கள அதிகாரிகளுக்கும் அறிவுறுத்தியுள்ள போதிலும் இதுவரை உலக உணவுத்திட்ட அதிகாரிகளால் இப்பாடசாலைகளுக்கு தேவையான பொருட்கள் அனுப்பி வைக்கப்படவில்லை.

கிராமப்புறங்களில் கல்வி கற்கும் மாணவர்கள் வறுமை காரணமாக காலை உணவு அருந்தாமல் பாடசாலைக்கு வருகின்ற நிலையில் பாடசாலையில் வழங்கப்படும் மதியபோசனத்தினை உட்கொள்கின்றனர்.இவ்வாறான நிலையில் இம் மதியபோசனமும் வழங்கப்படாமையினால் வகுப்பறைகளில் மாணவர்கள் சோர்வுத்தன்மையுடன் காணப்படுவதோடு கற்றலிலும் ஆர்வமின்றிக் காணப்படுகின்றனர்.

இதேவேளை கடந்த வருடம் அமுல்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு பால் வழங்கும் செயற்றிட்டத்திற்கும் நிதி ,வழங்கப்படாமையினால் இவ்வருட ஆரம்பத்தில் இருந்து பால் வழங்குவது நிறுத்தப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தனர்.

இது தொடர்பில் வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ.அன்டன் சோமராஜாவிடம் கேட்டபோது,

சில பாடசாலைகளில் உணவு வழங்குவதற்கு பொருட்கள் முடிவடைந்துள்ளமையினால் உணவு வழங்கப்படாது இருந்ததாகவும் அவை தொடர்பில் தாம் மாவட்ட செயலகத்திற்கு விடுத்த கோரிக்கையின் பயன[illegible] தற்போது அவர்கள் பாடசாலைகளுக்கு சென்று பார்வையிட்டு வருவதாகத் தெரிவித்தார்.

இதேவேளை, உணவுப் பொருட்கள் கையிருப்பில் இருந்த பாடசாலைகளில் உணவு வழங்கப்படுவதாகவும் ஏனைய பாடசாலைகளுக்கு தற்போது வழங்க நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் தெரிவித்ததுடன் பால் வழங்குவதற்கு கோரிக்கை விடுத்த பாடசாலைகளுக்கு பால் வழங்க மாகாணக் கல்வி அமைச்சு அனுமதி அளித்துள்ளதாகவும் தெரிவித்தார்.


# முதலாம் தவணைப் பரீட்சை 21 ஆம் திகதி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வி வலயப் பாடசாலைகளுக்கான முதலாம் தவணைப் பரீட்சைகள் வலய மட்டத்தில் நடைபெறவுள்ளன. இந்தப் பரீட்சையானது பிரதான பாடங்களுக்கு நடைபெறவுள்ளது. ஏனைய தொகுதிப் பாடங்களுக்கும், ஏனைய வகுப்புக்களுக்குரிய பரீட்சைகளையும் பாடசாலைகள் குழுரீதியாகவோ அல்லது கோட்ட ரீதியாகவோ நடத்துவதற்கு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.உதயகுமாரால் அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

இதன்படி எதிர்வரும் 21 ஆம் திகதி தமிழ், 22 ஆம் திகதி கணிதம், 23 ஆம் திகதி ஆங்கிலம், 25 ஆம் திகதி விஞ்ஞானம், 27 ஆம் திகதி வரலாறு, 28 ஆம் திகதி சமயம் ஆகிய திகதிகளில் பரீட்சை நடைபெறவுள்ளது.

மேலும் இம்முறை பிரதான பாடங்களுக்கான குழுநிலை மதிப்பீட்டுப்பணிகள் நடைபெறவுள்ளமையால் பிரதான பாட ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் அவர்களுக்குரிய விடைத்தாள் பொதிகளுடன் யாழ். கல்வி வலய அலுவலக முகாமைத்துவ மண்டபத்திற்குச் சமுகமளிக்க வேண்டிய கால அட்டவணையும் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அதன்படி 22 ஆம் திகதி தமிழ், 25 ஆம் திகதி கணிதம், 27 ஆம் திகதி ஆங்கிலம், 28 ஆம் திகதி விஞ்ஞானம், ஏப்ரல் முதலாம் திகதி வரலாறு, ஏப்ரல் 2 ஆம் திகதி சமயம் ஆகிய திகதிகளில் சமுகமளிப்பதுடன், மதிப்பீட்டுப் பணிகள் காலை 8.30 மணி முதல் 4.30 மணி வரை நடைபெறவுள்ளது. பாடசாலைகள் தரம் 11 ஆம் மாணவர்களுக்கான பரீட்சையைக் குறித்த திகதிகளில் நடத்துமாறு யாழ். கல்வி வலயப் பணிப்பாளர் பாடசாலைகளுக்கு அறிவித் துள்ளார். (42)




# தலைவர்களின் சுயநல அரசியலால் அந்தகாரத்தில் தமிழ் மக்கள்

**போர்க் குற்றம், மனித உரிமை மீறல்கள், நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை என்பவற்றுக்கு அப்பால் செல்லத் தயாராக இல்லை என்பதை இரண்டு தடவைகளிலும் ஜெனிவா மாநாடு வெளிப்படுத்தி விட்டது. அதாவது இனப் பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் தலையிடுவதற்குச் சர்வதேச சமூகம் தயாராக இல்லை. சர்வதேச சமூகத்தின் நிலைப்பாடு இதுதான் என்பதைத் தெரிந்துகொண்டும் சர்வதேச சமூகம் தீர்வைப் பெற்றுத் தரும் என்று கூட்டமைப்புத் தலைவர்கள் மக்களுக்குப் பொய் கூறுகின்றார்கள். தீர்வுத்திட்ட மொன்றைத் தயாரித்து வெளியிட இயலாத நிலையில் தீர்வு பற்றி மக்களுக்கு எதையாவது கூறினால்தானே பதவிகளைக் காப்பாற்ற முடியும்.**

சங்கர சிவன்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் நிலவும் முரண்பாடுகள் பற்றி ஊடகங்களில் செய்தி வெளியாகின்றது. இந்த முரண்பாடு தமிழ் மக்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைக்கான தீர்வு பற்றிய கொள்கை முரண்பாடல்ல. கூட்டமைப்பை அரசியல் கட்சியாகப் பதிவு செய்வது தொடர்பான முரண்பாடு. கூட்டமைப்பை அரசியல் கட்சியாகப் பதிவு செய்வதைத் தமிழரசுக் கட்சித் தலைவர்கள் விரும்பாததும் இவ்விடயத்தில் மற்றைய கட்சிகள் தமிழரசுக் கட்சித் தலைவர்களை விமர்சிப்பதுமான இந்த முரண்பாடு தனிப்பட்ட அரசியல் அபிலாஷைகளின் வெளிப்பாடேயொழியத் தமிழ் மக்களின் நலன் சார்ந்ததல்ல.

கூட்டமைப்பை அரசியல் கட்சியாகப் பதிவு செய்தால் தமிழரசுக் கட்சியின் மேலாதிக்கம் இல்லாது போய்விடும் என்பது அக்கட்சித் தலைவர்களின் ஆதங்கம். அதனால் இயன்ற வரைக்கும் பதிவை தவிர்ப்பதற்கு அவர்கள் முயற்சிக்கின்றார்கள். தனிக்கட்சியாகப் பதிவு செய்ய வேண்டுமென வலியுறுத்துபவர்கள் மக்கள் மத்தியில் தமிழரசுக் கட்சிக்குள்ள செல்வாக்கைப் பயன்படுத்தியே நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்படுகிறார்கள் என்றும் தனியாகப் பிரிந்து சென்றால் இவர்களுக்கு அரசியல் எதிர்காலம் இல்லாமற் போய்விடுமென்பதாலும் இவர்கள் ஒருபோதும் கூட்டமைப்பை விட்டு வெளியேறப்போவதில்லை என்றும் தமிழரசுத் தலைவர்கள் கருதுவதில் உண்மை இல்லாமலில்லை.

கூட்டமைப்பைத் தனியான அரசியல் கட்சியாகப் பதிவு செய்ய வேண்டும் என்ற கோரிக்கையைத் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருபவர் சுரேஷ் பிரேமச்சந்திரன். தமிழரசுத் தலைவர்கள் பதிவுக்குத் தடையாகச் செயற்பட்டால் மற்றைய கட்சிகள் பிரிந்து சென்று கூட்டமைப்பாகப் பதிவு செய்யப்போவதாக இவர் கூறுவது போலியான மிரட்டல் என்பது தமிழரசுத் தலைவர்களுக்குத் தெரியும். தனது அரசியல் செல்வாக்கு எவ்வளவு என்பது சுரேஷ் பிரேமச்சந்திரனுக்குத் தெரியாததல்ல. நாடாளுமன்றப் பதவியைப் பணயம் வைத்து அரசியல் தற்கொலை செய்வதற்கு அவர் ஒன்றும் முட்டாள் அல்ல. மற்றைய கட்சிகளின் நிலையும் இதுதான்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்போவதாக அளித்த வாக்குறுதியின் அடிப்படையில் மக்களின் வாக்குகளைப் பெற்று நாடாளுமன்றத்துக்குச் சென்ற இத்தலைவர்கள், தங்கள் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கான செயற்பாடுகளை முன்னெடுப்பதை விட்டுத் தனிப்பட்ட பதவிகளைக் காப்பாற்றுவதற்காக ஒருவரோடொருவர் மோதிக் கொள்வதைச் சுயநல அரசியல் என்றே கூற வேண்டும். ஒரு மட்டத்தில் சுயநலத்துக்காக மோதிக்கொள்ளும் இவர்கள் இன்னொரு மட்டத்தில் சுயநலத்துக்காக ஒன்றுபடுவதையும் காண்கிறோம்.

சர்வதேச சமூகம் தீர்வைப் பெற்றுத்தரும் என்று கூறித் தமிழ் மக்களை ஏமாற்றுவதில் இவர்கள் ஒன்றுபடுகின்றார்கள். தமிழ் மக்கள் இன்று பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கின்ற போதிலும் பிரதான பிரச்சினையாக இனப்பிரச்சினையே இருக்கின்றது. இனப்பிரச்சினை தீர்க்கப்படாதிருப்பதே மற்றைய பிரச்சினைகள் தலைதூக்குவதற்கான காரணம். எனவே, தமிழ் மக்களுக்குத் தலைமை தாங்குபவர்கள் இனப்பிரச்சினையின் தீர்வுக்கு முன்னுரிமை அளிக்கவேண்டும். ஆனால், கூட்டமைப்பு இனப்பிரச்சினையின் தீர்வுக்கான திட்டமெதையும் முன்வைக்கவில்லை. இரண்டு காரணங்களால் தீர்வுத் திட்டமொன்றை வெளியிட இயலாத நிலையில் அவர்கள் இருக்கின்றார்கள். தீர்வுக்காக எதையும் கூறாமலிருப்பது மக்களிடமிருந்து தங்களை அந்நியப்படுத்திவிடும் என்ற அச்சத்தில் இலங்கையில் இனப்பிரச்சினை விடயத்தில் சர்வதேச சமூகம் அக்கறையாக இருக்கிறது என்றும் அது தீர்வைப் பெற்றுத் தரும் என்று கூறி மக்களை ஏமாற்றுகின்றார்கள்.

இனப்பிரச்சினைக்கான இறுதித் தீர்வைப் பொறுத்த வரையில் கூட்டமைப்புக்குள் ஒன்றுபட்ட அபிப்பிராயம் இல்லை. ஒரே கட்சிக்குள்ளேயே முரண்பாடு நிலவுகின்றது. தமிழரசுக் கட்சியின் சம்பந்தன் ஐக்கிய இலங்கையில் அரசியல் தீர்வு என்கிறார். அதே கட்சியின் சிறீதரன் தனிநாட்டுக்கான பிரசாரத்தில் ஈடுபடுகின்றார். கூட்டமைப்பினால் தீர்வுத் திட்டமொன்றை வெளி யிட இயலாதிருப்பதற்கு இது ஒரு காரணம். மற்றைய காரணம் புலம்பெயர் அமைப்புகளின் அழுத்தம்.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு வருவதைச் சில புலம்பெயர் அமைப்புகள் விரும்பவில்லை. இங்கே பிரச்சினை இருப்பதைக் காட்டியே மேற்கத்திய நாடுகளில் அவர்கள் வாழ்கின்றார்கள். இலங்கையில் இனப்பிரச்சினை தீராமல் இழுபறி நிலையில் இருப்பது அங்கே அவர்களின் இருப்புக்கு உத்தரவாதம் என்பதால் அரசியல் தீர்வை அவர்கள் விரும்பவில்லை. அரசியல் தீர்வைத் தவிர்க்கும் தந்திரோபாயமாக நடைமுறைச் சாத்தியமற்ற தீர்வை வலியுறுத்துகின்றார்கள். இந்தப் புலம்பெயர் அமைப்புகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குப் பெருமளவில் நிதியுதவி செய்வதால் கூட்டமைப்பின் முடிவுகளில் இந்த அமைப்புகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தீர்வுத் திட்டமொன்றைத் தயாரித்து வெளியிட முடியாமலிருப்பதற்கு இப்புலம் பெயர் அமைப்புகளின் அழுத்தம் பிரதானமான காரணம்.

தீர்வுத் திட்டமொன்றை முன்வைக்காமலும் அரசியல் தீர்வுக்காக அர்த்தமுள்ள முயற்சிகளை மேற்கொள்ளாமலும் இருப்பது தமிழ் மக்களிடமிருந்து தங்களை அந்நியப்படுத்திவிடும் என்பதை உணர்ந்த கூட்டமைப்புத் தலைவர்கள் சர்வதேச சமூகம் அரசியல் தீர்வைப் பெற்றுத்தரும் என்ற நம்பிக்கையை வளர்ப்பதன் மூலம் தங்கள் அரசியல் இருப்பை உறுதிப்படுத்திக் கொள்கின்றார்கள். அரசியல் பதவிகளைக் காப்பாற்றுவதற்காகக் கூட்டமைப்புத் தலைவர்கள் பின்பற்றும் இன்னொரு தந்திரோபாயம் தங்கள் பேச்சுவன்மை மூலம் மக்களை உணர்ச்சிவசப்படுத்தும் வகையில் பிரச்சினைகளைப் பட்டியல் இடுவது பிரச்சினைகளை எடுத்துக் கூறுவதற்குத் தலைவர்கள் தேவையில்லை. தங்களைப் பாதிக்கும் பிரச்சினைகள் எவை என்பது மக்களுக்குத் தெரியும். பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கே தலைவர்கள் தேவை. புலம்பெயர் அமைப்புகளின் தடையை மீற முடியாதிருப்பதால் கூட்டமைப்புத் தலைவர்கள் தீர்வுக்குத் தயாரில்லை.

சர்வதேச சமூகத்தின் செயற்பாட்டு எல்லை எது என்பதை ஜெனிவா மாநாடு வெளிப்படுத்திவிட்டது. இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக ஜெனிவா மாநாட்டில் சென்ற வருடம் அமெரிக்கா சமர்ப்பித்த பிரேரணைக்கும் இந்த வருடப் பிரேரணைக்கும் ஆதரவான மேற்கத்திய நாடுகளே கூட்டமைப்புத் தலைவர்கள் குறிப்பிடும் சர்வதேச சமூகம். போர்க் குற்றம், மனித உரிமை மீறல்கள், நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை என்பவற்றுக்கு அப்பால் செல்லத் தயாராக இல்லை என்பதை இரண்டு தடவைகளிலும் இந்நாடுகள் வெளிப்படுத்திவிட்டன. அதாவது இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் தலையிடுவதற்குச் சர்வதேச சமூகம் தயாராக இல்லை.

சர்வதேச சமூகத்தின் நிலைப்பாடு இதுதான் என்பதைத் தெரிந்துகொண்டும் சர்வதேச சமூகம் "தீர்வைப் பெற்றுத் தரும் என்று கூட்டமைப்புத் தலைவர்கள் மக்களுக்குப் பொய் கூறுகின்றார்கள். தீர்வுத்திட்டமொன்றைத் தயாரித்து வெளியிட இயலாத நிலையில் தீர்வு பற்றி மக்களுக்கு எதையாவது கூறினால்தானே பதவிகளைக் காப்பாற்ற முடியும்.

தீர்வுக்கான திட்டத்துடன் சர்வதேச சமூகம் இலங்கை அரசாங்கத்தின் கதவைத் தட்டுகின்றது என்று கிழக்கு மாகாண சபைத் தேர்தல் பிரசாரத்தின்போது கூறினார்கள். தமிழ் மக்கள் கூட்டமைப்புக்கு ஆதரவாக வாக்களித்தால் அடுத்த கணமே சர்வதேச சமூகம் செயலில் இறங்கும் என்றார்கள். தேர்தலில் பெரும்பாலான தமிழ் மக்கள் கூட்டமைப்புக்கு ஆதரவாக வாக்களித்தார்கள். தேர்தல் முடிந்து நீண்ட காலமாகிவிட்டது. அடுத்த கணம் இன்னும் வரவில்லை. சர்வதேச சமூகத்தின் செயற்பாட்டைக் காணோம்.

இப்போது இன்னொரு பொய். அரசாங்கத்திடம் தீர்வுத் திட்டமொன்றைக் கையளித்திருக்கின்றார்களாம். அந்தத் தீர்வுத் திட்டத்தை மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டுமே. மக்களின் பிரச்சினைகளுக்கு மக்களுக்குத் தெரியாத தீர்வா?

மங்கள முனசிங்கவின் அறிக்கை, சந்திரிகாவின் தீர்வுத் திட்டம், திஸ்ஸ விதாரணவின் அறிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் அரசாங்கம் தீர்வொன்றை முன்வைக்க வேண்டும் என்று கூட்டமைப்புத் தலைவர்கள் பல தடவைகள் கூறினார்கள். தாங்கள் ஒரு தீர்வுத்திட்டத்தைக் கையளித்திருந்தால் ஏன் இப்படிக் கூறவேண்டும்? நாங்கள் கையளித்த திட்டத்தின் அடிப்படையில் தீர்வை முன்வையுங்கள் என்று சொல்லலாமே!

# ரணிலின் இராஜதந்திரம் தோல்வி ஐ.தே.கட்சிக்கு மீட்சி இல்லை



(கொழும்பு)

அரசுடன் புரிந்துணர்வு செய்து கொண்டு தனது கட்சியை நகர்த்திச் செல்லும் ரணிலின் இராஜதந்திரம் தோல்வியடைந்துள்ளது.

அரசாங்கத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி தயாராக உள்ளதாக எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க விடுத்துள்ள அறிவிப்பை பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ நிராகரித்துள்ளார்.

ரணில் விக்ரமசிங்கவிற்கு அரசாங்கத்தின் புரிந்துணர்வு ஒப்பந்தம் தொடர்பிலும் இலங்கை தொடர்பான ஐ.நாவின் நடவடிக்கை குறித்துப் பேசுவதற்கும் எந்த தார்மீக உரிமையும் இல்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

மினுவாங்கொடையில் இடம்பெற்ற நிகழ்வொன்றிலே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் அரசாங்கத்தின் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடாமல் ஜெனிவா சென்று ஜனாதிபதி சார்பாக பேசுவதற்கு தயாராகவுள்ளனர் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி தயார் என அக்கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க கடந்த புதன்கிழமை அறிவிப்பொன்றை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஜெனிவாவில் விசேட விவாதம் இரத்துசெய்ய துடிக்கிறது ரஷ்யா



(கொழும்பு)

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையக கூட்டத்தொடரில் இலங்கை தொடர்பான விசேட விவாதத்தை இரத்துச் செய்வதற்கான அயராத முயற்சியில் இலங்கைக்கு ஆதரவான நாடுகள் சில ஒன்றிணைந்து ஈடுபட்டு வருகின்றன.

இலங்கைக்கு எதிராக அமெரிக்காவினால் ஜெனிவா மனித உரிமை பேரவையில் முன்வைக்கப்பட்டுள்ள யோசனையில், ரஷ்யா, சீனா, கியூபா, பாகிஸ்தான் ஆகிய நாடுகள் தலையிட்டு சில திருத்தங்களை செய்துள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இலங்கை தொடர்பான விசேட விவாதம் மனித உரிமை பேரவையின் அடுத்த கூட்டத்தில் நடத்தப்பட வேண்டும் என்ற யோசனையை நீக்கவேண்டும் என இந்த நாடுகள் கோரியுள்ளதுடன், நல்லிணக்க செயற்பாடுகளை எடுக்க இலங்கை தவறியுள்ளது என்ற வார்த்தையும், இலங்கை அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்கின்றோம் என்ற வார்த்தையும் திருத்தப்பட்டுள்ளன.

# பள்ளி மாணவர்கள் மூவர் கைது

(கொழும்பு)

சிகிரியா மலையிலுள்ள சிங்கத்தின் கால்களில் தமது பெயர்களை எழுதிய பாடசாலை மாணவர்கள் மூவர் சிகிரியா பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மஸ்கெலிய பிரதேசத்தைச் சேர்ந்த தமிழ்ப் பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் மாணவர்கள் சிகிரியாவிற்கான கல்விச் சுற்றுலா ஒன்றை நேற்றுமுன்தினம் மேற்கொண்டிருந்தனர்.

இதன்போதே அவர்கள் சிங்கத்தின் கால்களில் தமது பெயர்களை எழுதியுள்ளனர். இவர்கள் மூவரும் உயர்தரத்தில் கல்வி கற்கும் மாணவர்கள் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

# வெப்பமான காலநிலை நாடுமுழுவதும் நீடிக்கும்

(கொழும்பு)

இந்தவாரம் நாடு முழுவதும் வெப்பமான காலநிலை நீடிக்கும் என்று வானிலை அவதான நிலையம் அறிவித்துள்ளது. அதேவேளை நிலவும் அதிக வெப்பமான காலநிலை காரணமாக சிறுவர்கள் மற்றும் முதியவர்களுக்கு நீர்சத்து குறைவு ஏற்படுவதனால், பல்வேறு நோய் தொற்றுகள் ஏற்பட்டுள்ளன என்று சிறுவர் நோய் தொடர்பான நிபுணர் வைத்தியர் தீபாலி பெரேரா இதனைத் தெரிவித்துள்ளார். இதன்காரணமாக முடிந்த வரையில் நீரினை பருக வேண்டும் என்று வைத்தியர் அறிவுறுத்தியுள்ளார்.

இதற்கிடையில் இந்தக் காலநிலை தொடர்ந்து இரண்டு வாரங்களுக்கு நீடிக்கலாம் என காலநிலை அவதான நிலையத்தின் அதிகாரி சூரியகுமார் தகவல் வழங்கினார். நாட்டில் இன்று பிற்பகலில் பரவலாக மழை பெய்யலாம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# வீடு புகுந்து தாக்குதல் பிக்குகள் ஒன்றுகூடி நாசம்

## வீதிக்கு வந்தது "பைபிள்"

(கொழும்பு)

கொழும்பின் புறநகர் நாவல பகுதியில் நீதியற்ற முறையில் சமய நிகழ்வு இடம்பெற்றதாக கூறி பௌத்த பிக்குகள், வீடு ஒன்றுக்குள் புகுந்து அச்சுறுத்திய சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது. இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

'சிங்கள ராவய' என்ற அமைப்பைச் சேர்ந்த இந்த பௌத்த பிக்குகளே இந்த அச்சுறுத்தலை விடுத்துள்ளனர்.

இதன்போது சிலர் குறித்த வீட்டின் பெண் மீது அவரது பிள்ளையின் முன்னிலையில் தாக்குதலையும் நடத்தியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



இதேவேளை குறித்த வீட்டுக்குச் செல்லும்போது பௌத்த பிககுகளால் தனியார் தொலைக்காட்சி ஒன்றின் வீடியோ பத்திரிகையாளரும் அழைத்துச் செல்லப்பட்டிருந்தார்.

இதன்போது குறித்த வீட்டில் இருந்து புத்தபெருமானின் சிலை அகற்றப்பட்டதும் பைபிளையும் ஒரு பிக்கு வீசியெறிந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

'சிங்கள ராவய' என்ற பௌத்த அமைப்பு ஏற்கனவே மஹரகம பகுதியில் நோ லிமிட் என்ற முஸ்லிம் வர்த்தக நிலையத்துக்குள்ளும் புகுந்து குழப்பம் விளைவிக்க முயற்சித்தமையும் குறிப்பிடத்தக்கது.

# சவுதியில் இலங்கையர்களுக்கு சமூக பாதுகாப்புத் திட்டம்

(கொழும்பு)

சவுதி அரேபியாவில் பணியாற்றும் இலங்கைப் பணியாளர்களுக்கு சர்வதேச சமூகப் பாதுகாப்புத் திட்டம் நேற்று முதல் அமுல்படுத்தப்படுகிறது.

சவுதி அரேபியாவுடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கைக்கு அமைய சர்வதேச சமூகப் பாதுகாப்புத் திட்டம் செயற்படுத்தப்படும் என வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் தலைவர் அமல் சேனாலங்காதிகார தெரிவித்துள்ளார்.

நேற்றுமுதல் நடைமுறைக்கு வரவிருக்கும் சர்வதேச சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், சவுதி அரேபியாவுக்கு வேலைவாய்ப்புப் பெற்றுச் செல்லும் இலங்கையர்களுக்கு அங்குள்ள நிறுவனமொன்றின் மூலம் காப்புறுதி வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் புதிதாக சவுதி அரேபியாவுக்குச் செல்லும் வீட்டுப் பணிப்பெண்கள் மற்றும் வாகன சாரதிகளுக்கு இந்தத் திட்டத்தின் கீழ் காப்புறுதி வழங்கப்படும் என பணியகத்தின் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

சவுதி அரேபியாவுக்கு வேலைவாய்ப்புப் பெற்றுச் செல்பவர்களைப் பாதுகாப்பதற்கும், பெரும் தொகை பணத்தை செலவிட்டு அவர்களை வேலைக்கு அழைப்பவர்வளைப் பாதுகாக்கும் நோக்கிலேயே இந்தத் திட்டம் அமுல்படுத்தப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

# கட்டணக் கழிவு 50 வீதம் மத்தல விமான நிலையத்தில் அறிமுகம்

(கொழும்பு)

மத்தல விமான நிலையத்தைப் பயன்படுத்தவுள்ள உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விமானசேவை நிறுவனங்களுக்கு சுமார் ஒரு வருட காலத்துக்கு 50 சதவீத கட்டணக் கழிவும் ஏனைய மூன்று வருடங்களுக்கு 25 சதவீத கட்டணக் கழிவும் வழங்குவதற்கான ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

அம்பாந்தோட்டை, மத்தல பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டு வரும் ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையம், இன்னும் மூன்று தினங்களில் அதாவது எதிர்வரும் 18 ஆம் திகதி திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்நிலையில், விமான நிலையத்தின் பணிகள் மும்முரமாக இடம்பெற்று வருகின்றன.

டுபாய், சார்ஜா, அமெரிக்கா மற்றும் கட்டுநாயக்காவிலிருந்து புறப்படும் 4 விமானங்கள் எதிர்வரும் 18 ஆம் திகதி, மத்தல விமான நிலையத்தில் தரையிறக்கப்படவுள்ளன.

அதற்கான அனைத்து வேலைகளும் பூர்த்தியாக்கப்பட்டுள்ளன என்று விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் நிறுவனத்தின் பிரதித் தலைவர் கமல் ரத்வத்த தெரிவித்தார்.


எயார் அரேபியா, :.ப்ளை டுபாய், ஸ்ரீலங்கன் விமான சேவை மற்றும் மிஹின் லங்கா ஆகிய விமானசேவை நிறுவனங்கள், மத்தல சர்வதேச விமான நிலையத்தில் தங்களது விமானங்களை தரையிறக்குவதற்கான ஒப்பந்தங்களில் ஈடுபட்டுள்ளன என்றும் ஏனைய நாடுகளினுடைய விமானங்களையும் மத்தலவியில் தரையிறக்குவதற்கான நடவடிக்கைகள் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

எதிர்வரும் 18 ஆம் திகதி மத்தல விமான நிலையத்தில் விமானங்களை தரையிறக்கவும் அங்கிருந்து விமானங்கள் புறப்படுவதற்குமான ஏற்பாடுகள் பூர்த்தியாக்கப்பட்டுள்ளன என்று தெரிவித்த அவர்,

அதற்கான மேற்பார்வைகளை மேற்கொள்வதற்கான விமானப் பயணக் கட்டுப்பாடுக் கோபுரம், விமானப் பயண தகவல் சேவை மத்திய நிலையம் மற்றும் வான்வழி தொலைத் தொடர்பு நிலையத்தினூடாக நாடுகளுடன் தொடர்புகொள்ளல மற்றும் பயிற்சிகள் தொடர்பான நிலையங்கள் என்பனவும் மத்தல விமான நிலையத்தில் காணப்படுகின்றன.

சுமார் 45 மீற்றர் உயரமான நவீனமுறை தொலைத்தொடர்பு உபகரணங்கள் அடங்கிய விமான போக்குவரத்து கட்டுப்பாட்டு மையமொன்றும் மத்தல விமான நிலையத்தில் காணப்படுவதாக கமல் ரத்வத்த மேலும் தெரிவித்தார்.

# மனித உரிமை ஆர்வலர்களைப் பாதுகாக்க அரசு உத்தரவாதம் வழங்காதது ஏன்?



(கொழும்பு)

இலங்கையில் செயற்படும் மனித உரிமை ஆர்வலர்களைப் பாதுகாக்க இலங்கை அரசு உத்தரவாதம் வழங்கத் தவறிவிட்டது என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் குற்றம் சாட்டியுள்ளது.

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை பரிந்துரைகளில் 50 சதவீதமானவற்றை இலங்கை நிராகரித்துள்ளதென மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

ஜெனிவா மனித உரிமை கவுன்ஸில் கூட்டத்தில் நேற்று கருத்து வெளியிட்ட மனித உரிமை கண்காணிப்பக பிரதிநிதி இவ்வாறு தெரிவித்தார். இலங்கை இராணுவம் புரிந்த யுத்தக் குற்றங்களை நிரூபிக்க கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு பரிந்துரைகள் முழுமையானது அல்ல எனவும் ஆனால் தமமால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்ற இலங்கை அரசு தவறியுள்ளதாக மனித உரிமை கண்காணிப்பகம் குறிப்பிட்டுள்ளது.

மனிதஉரிமை ஆர்வலர்களைப் பாதுகாக்க முன்வைக்கப்பட்ட பரிந்துரைகளையும் நிறைவேற்ற இலங்கை அரசு தவறிவிட்டதாக மனிதஉரிமை கண்காணிப்பகம் சுட்டிக்காட்டியுள்ளது.

# கிராமங்களின் கல்வி வளர்ச்சியில் பெற்றோர் பொறுப்பு பிரதானமானது



கிராமங்களின் கல்வி வளர்ச்சியில் பெற்றோர்களின் பொறுப்பு மிக பிரதானமானது அவர்களின் பொறுப்பும் அக்கறையும் கிராமங்களின் கல்வி வளர்ச்சியினை மேலும் விரைவுபடுத்தும் என ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார். கடந்த 14 ஆம் திகதி கிளிநொச்சி புதுமுறிப்பு விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் மாகாண அபிவிருத்திக்கென குறித்தொதுக்கப்பட்ட நிதியிலிருந்து 29 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட விஞ்ஞான ஆய்வு கூடத்தினையும், ஜேர்மன் அபிவிருத்தி நிறுவனம் மூலம் 26 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட ஆசிரியர் விடுதியினையும் திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், யுத்தம் நிறைவுற்று மீள்குடியேறிய ஆரம்ப காலங்களில் எங்கள் மாவட்டங்களில் கற்றலுக்குரிய சாதகமான எந்த நிலைமைகளும் காணப்படவில்லை ஆனால் அதன் பின்னரான மூன்றரை ஆண்டுகளில் அந்த நிலைமைகளில் பெருமளவான மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளோம். இந்த மாற்றத்தோடு கல்வித்தரத்திலும் நல்லமுன்னேற்றகரமான மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும் அவ்வாறான நல்ல மாற்றங்களை சில தனி நபர்களின் முயற்சியினாலும் உழைப்பினாலும் ஏற்படுத்திவிடமுடியாது அது ஒரு கூட்டு முயற்சியிலும் உழைப்பிலுமே தங்கியுள்ளது எனவே இந்த கூட்டு உழைப்புக்கு அனைவரும் கைகோர்த்து நிற்கின்ற போதே கல்வியில் மாற்றங்களை ஏற்படுத்த முடியும் குறிப்பாக கிராமங்களின் கல்வியில் மாற்றங்கள் மிகமிக அவசியமானது என்றார்.

பாடசாலை அதிபர் கண்ணவூரான் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில் கிளிநொச்சி வலயக்கல்விப்பணிப்பாளர் முருகவேல் அயற்பாடசாலைகளின் அதிபர்கள் பாடசாலையின் ஆசிரியர்கள், ஆசிரியர் சங்கத்தினர், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், பெற்றோர்கள் மாணவர்கள் என பலர் கலந்து கொண்டனர்.



கிளிநொச்சி கரைச்சி பொன்நகர் கிராமத்தில் காவேரி கலாமன்றத்தின் வேலைத்திட்டத்தின் கீழ் மாற்றுவலுவுள்ளோருக்கான வளங்கள், வாய்ப்புக்கள் பற்றி மாவட்ட சமூகசேவைகள் அதிகாரி வே.தபேந்திரன் கலந்து கொண்ட போது மங்கல விளக்கேற்றப்படுவதையும், கலந்து கொண்ட மாற்றுவலுவுள்ளோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (90)

# வவுனியாவில் 108 பேருக்கு சுயதொழில் கொடுப்பனவு வழங்கல்

(வவுனியா)

வடமாகாண சமூகசேவைத் திணைக்களத்தினால் வவுனியா பிரதேச செயலகப்பிரிவில் 108 பேருக்கு சுயதொழில் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளதாக மாவட்ட சமூகசேவைகள் உத்தியோகத்தர் எஸ். எஸ். வாசன் தெரிவித்தார்.

சுயதொழில் கடன் பெறவுள்ளவர்களுக்கு முதலாம்கட்டம், இரண்டாம்கட்டம் என இரு கட்டங்களாக இவ் உதவிகள் வழங்கப்படவுள்ளதாக தெரிவித்த அவர் கொடுப்பனவுகளுக்கு பெயர் குறிப்பிடப்பட்டுள்ளவர்கள் வவுனியா பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தர் திருமதி பிறேமா விமலேந்திரனை தொடர்பு கொண்டு கொடுப்பனவுகளை பெற்றுக் கொள்ளுமாறு அவர் தெரிவித்துள்ளார்.

சுயதொழில் கொடுப்பனவுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளவர்களின் பெயர் விபரம் வருமாறு,

1ஆம் கட்டம்

பாலகிருஸ்ணன் குகனேஸ்வரி (பூம்புகார் கல்மடு, வவுனியா), யோகராசா விமலராணி (தேவர்குளம் கூளாங்குளம், வவுனியா), அசோகன் ரூபவேணி (புதுக்குளம், பூவரசன்குளம் வவுனியா), கிருபாகரன் விஜயகுமாரி (30,தாலிக்குளம், பூவரசன்குளம் வவுனியா), சண்முகலிங்கம் திரவியம் (தாஸ்நகர், மகாறம்பைக்குளம், வவுனியா), யோகேஸ்வரன் நகுலேஸ்வரி (நல்ல மேப்பன் வீதி, மகாறம்பைக்குளம்), சந்திரபாலன் கமலேஸ்வரி (67,வியாசர்வீதி, தோணிக்கல் வவுனியா), திசைநாதன் கௌரிமலர் (47, வியாசர்வீதி, தோணிக்கல் வவுனியா), சுண்முகநாதன் திலகவதி (675/7,வியாசர்வீதி, தோணிக்கல் வவுனியா), செல்வராசா பரமேஸ்வரி (கோவில்குஞ்சுக்குளம், பாலமோட்டை வவுனியா), கந்தையா செல்லாயி (353, மறவன்ர்லம், சாஸ்திரிகூழாங்குளம் வவுனியா), இராஜேஸ்வரன் கிருபாதேவி (04, ஊரக்குளம், பாலமோட்டை, வவுனியா),

சுசிகரன் புஸ்பலதா (கோவில்குஞ்சுக்குளம், பாலமேட்டை வவுனியா), நவநீதன் அரசினி (முதர்பனிக்கா, மகிழங்குளம், வவுனியா), கந்தசாமி மாசிலா (கோயில்குஞ்சுக்குளம், பாலமோட்டை, வவுனியா), கந்தசாமி ராணி (கோயில்குஞ்சுக்குளம், பாலமோட்டை, வவுனியா), பரமசிவம் அனோமா (193, தாலிக்குளம் பூவரசங்குளம், வவுனியா),

விக்னேஸ்வரன் இராஜேஸ்வரி (நவ்வி, பாலமோட்டை, வவுனியா), சுந்திரன் அசோகமாலா (கோயில்குஞ்சுக்குளம், பால மோட்டை, வவுனியா), இந்திரகுமார் யோகேஸ் வரி (கோயில்குஞ்சுக்குளம், பாலமோட்டை, வவுனியா).

(தொடரும்....)

## சொத்தழிவுக் கொடுப்பனவு பெறாதவர்கள் விண்ணப்பிக்கவும்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் பொதுமக்கள் அரச உத்தியோகத்தர்களுக்கான சொத்தழிவுக் கொடுப்பனவுக்குரிய விண்ணப்பங்களை புனர்வாழ்வு அதிகார சபைக்கு (றேப்பியா) 31.03.2013 ஆம் திகதி வரை மட்டுமே விண்ணப்பிக்க முடியுமென அரசாங்க அதிபர் திருமதி. ரூபவதி கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

இத் திகதி இனிமேல் கால நீடிப்புச் செய்யப்படமாட்டாது. இதுவரை விண்ணப்பிக்காதோர் இக் கால எல்லைக்குள் விண்ணப்பித்து முடிக்க வேண்டும். பொதுமக்கள் தமது விண்ணப்பங்களை பிரதேச செயலகங்களினூடாக அனுப்பிக் கொள்ளல் வேண்டும். அரசாங்க உத்தியோகத்தர்கள் தமது திணைக்களத் தலைவர்களுக்கு ஊடாக விண்ணப்பித்தல் வேண்டும். (90)

# பொய்யுள்



மூலபாரதி

## அடக்கமில்லை!

கருவி லுருவாகிப் பிறக்க வில்லை
கணமும் பிரிவைக் காண்ப தில்லை;
தெருவில் வாகனம் ஓட்டும் போதும்
தெரியாது காதொடு சேதி பேசும்!

கையடக்க தொலைபேசி காது தேய்த்து
கரமொன்று முடங்கிப் போவ தாலே;
மையமா வீதிகளில் வீழ்ந்து போவதும்
மனதில் யார்க்கு முறைக்க வில்லை!

எல்லா மிப்பான் தோன்று புதுமை
இதுவரை காலமும் உந்தக் கோதாரி;
இல்லாது எவரும் வாழவே இல்லையா
எதுக்கெடு அப்போம் கையி ருக்கும்!

# முரசின் இன்றைய பலன்

(17.03.2013 – ஞாயிற்றுக்கிழமை)

நந்தன வருஷம் பங்குனி 04 ஆம் திகதி. நட்சத்திரம் கார்த்திகை. முன்னிரவு 08.21 வரை. திதி ஷஷ்டி. முழுவதும். இராகுகாலம் 04.49 - 06.19 வரை. சுபநேரம் 09.19 - 10.49 வரை. சித்தம்.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | மனம் மகிழும் நிகழ்வுகள். பணியில் சுறுசுறுப்பு. உழைப்பு துணை நிற்கும். உபரி வருமானம். குடும்பத்தில் கூடுதல் அக்கறை. உறவினர் வருகை. உடல் ஆரோக்கியம். |
| ரிஷபம் | எதிர்பார்த்ததில் ஏமாற்றம் வரும். தொழிலில் போட்டி. தடைகளைத் தாண்ட பெரியவர்கள் துணை. வரவுக்கு ஏற்ப செலவுகள். போக்குவரத்தில் கவனம். உடல்நலம் சீரடையும். |
| மிதுனம் | சுற்றத்தவர் பாராட்டு கிடைக்கும். தாய்வழி உறவினருக்கு உதவி. தொழிலில் இருந்த தடை நீங்கும். எதிர்மறையாக நடந்தவர் வருந்துவர். புத்திரர் வளர்ச்சியில் மகிழ்ச்சி. |
| கடகம் | சிரமமான சூழ்நிலை மாறிவிடும். எண்ணத்திலும், செயலிலும் உற்சாகம். தொழில், சிறக்கும். ஆதாய வரவு. உறவினர்களின் வருகை. வீட்டில் மகிழ்ச்சி. நன்மை வந்து சேரும். |
| சிம்மம் | அன்பு எண்ணம். எதிர்ப்பவரும் நட்பாவர். சக ஊழியர் உதவி. தொழில் வளர்ச்சி திருப்தி. வரவு அதிகரிக்கும். கடன் தீரும். பிள்ளைகளால் அந்தஸ்து. புதுமை படைக்கும் நாள். |
| கன்னி | சமூகத்தில் நன்மதிப்பு. வெகுநாளைய லட்சியம் நிறைவேறும். தொழில் வளர்ச்சி. தாராள பணவரவு. நண்பருடன் விருந்து உபசரிப்பு. உயர்ச்சிக்கான செய்திகள் வரும். நலம். |
| துலாம் | நண்பரால் மகிழ்ச்சி. தொழில் இலக்கு நிறைவேறும். பணவரவு திருப்தி. கூடுதல் சொத்து சேர்க்கை. உடன் பிறந்தவர்கள் உறுதுணை. அரசால் ஆதாயம். யோகம் கூடும் நாள். |
| விருச்சிகம் | செயல்களில் புதிய அணுகுமுறை. தகுதி, திறமை வளர்த்துக் கொள்வீர்கள். தொழிலில் இடர்விலகும். வாழ்வில் உயர புதிய முயற்சி. இல்லறத்துணை ஆதரவு. உற்சாகம். |
| தனுசு | முடியாதிருந்த வேலை முடியும். சந்தோசம் கூடும். தொழில், வியாபாரத்தில் திருப்தி. கூடுதல் பணவரவு. பழைய நண்பர் தொடர்பு. குடும்பத்தில் மங்கல நிகழ்வு. வெற்றிகர நாள். |
| மகரம் | நம்பிக்கை அதிகரிக்கும். நல்ல தீர்ப்பு வந்து சேரும். தொழில் திருப்திகரமான வளர்ச்சி. பணவரவில் முன்னேற்றம். தம்பதியர் அன்யோன்யம். புதிய திட்டங்கள் பலிதமாகும். |
| கும்பம் | சிலர் கோபப்படுத்துவர். பேச்சைக் குறையுங்கள். தொழில் மந்தம். அளவான பணவரவு. கண்களின் பாதுகாப்பில் கவனம். உடல்நலத்திற்கும் சிகிச்சை. புத்திரர் மகிழ்வு தருவர். |
| மீனம் | நிதான நடத்தைக்குப் பலன். நல்லவர்களின் உதவி வரும். தொழிலில் அதிக மூலதனம். பணவரவு திருப்தி. பதவி உயர்வு, சலுகைகள். தாயின் ஆசி. குடும்பத்தில் அனுசரணை. |

# சமநிலையானது வடக்கின் போர்

(யாழ்ப்பாணம்)

வடக்கின் போர் என வர்ணிக்கப்படுகின்ற மூன்று நாள் இனிங்ஸ் கிரிக்கெட் போட்டி வெற்றிதோல்வியின்றி நிறைவடைந்துள்ளது.

யாழ். மத்திய கல்லூரி அணிக்கும், சென். ஜோண்ஸ் கல்லூரி அணிக்கும் இடையில் வரலாற்று முக்கியத்துவம் மிக்க தொடராக இடம்பெற்று வரும் 107ஆவது வடக்கின் போர் மூன்று நாள் இனிங்ஸ் கிரிக்கெட் போட்டி நேற்று யாழ். மத்திய கல்லூரியில் நிறைவடைந்தது.









இதில் முதல் இனிங்ஸிற்காக ஏழு விக்கெட்டுக்களை இழந்து 127 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் இறுதி நாள் ஆட்டத்தை யாழ். மத்திய கல்லூரி அணி. தொடர்ந்தது. இதில் எட்டாவது விக்கெட்டுக்காக இணைந்த அலன்ராஜ், நிரோஜன் இணை ஓட்டங்களைக் குவிப்பதை விட நிதானமாக பந்துகளை தடுத்தலே போதும் என்ற வகையில் ஆடினர். நீண்ட நேரம் நின்ற இந்த ஜோடி ஒரு வகையில் பிரிக்கப்பட்டது. இறுதியில் யாழ். மத்திய கல்லூரி அணி முதல் இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 146 ஓட்டங்களைப் பெற்றது. இதில் அலன்ராஜ் 192 பந்துகளை எதிர்கொண்டு 25, நிரோஜன் 60 பந்துகளை எதிர்கொண்டு 15 ஓட்டங்களைப் பெற்றனர் மற்றும் சௌமிரதன் 28, கலின்ரன் 23 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் லோகதீஸ்வர் 51 ஓட்டங்களைக் கொடுத்து ஐந்து விக்கெட்டுக்களைச் சாய்த்தார். மற்றும் கானாமிர்தன், விந்தாரகன் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

37 ஓட்டங்கள் முன்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிய சென். ஜோண்ஸ் கல்லூரி அணி, ஆறு விக்கெட்டுக்களை இழந்து 143 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது. இதில் கபில்ராஜ் 15, பிரிசங்கர் 20, துவாரகசீலன் 28, அமிர்தயன் 27 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் நிருபன் மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்கு 181 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய யாழ். மத்திய கல்லூரி அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சி அளிக்கும் வகையில் அமைந்தது. ஒரு ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் இரண்டு விக்கெட்டுக்களை இழந்து யாழ். மத்திய கல்லூரி தடுமாறியது. இந்நிலையில் மூன்றாவது விக்கெட்டுக்காக இணைந்த டர்வின், நிரோச் இணை மிகவும் நிதானமாக ஆடியது. 26 ஓவர்கள் களத்தில் நின்ற இந்த இணை 49 ஓட்டங்களைப் பெற்றவேளை பிரிக்கப்பட்டது. மேலும் இரண்டு ஓவர்கள் வீசப்பட்ட நிலையில் போட்டி நிறைவுக்கு வந்தது. இறுதியில் யாழ். மத்திய கல்லூரி அணி இரண்டாவது இனிங்ஸிற்காக நான்கு விக்கெட்டுக்களை இழந்து 58 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் நிரோச் 98 பந்துகளை எதிர்கொண்டு ஆட்டமிழக்காது 21 ஓட்டங்களைப் பெற்றார். மற்றும் டர்வின் 69 பந்துகளை எதிர்கொண்டு 33 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் லோகதீஸ்வர் மூன்று, விந்தாரகன் ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாகவும், போட்டியின் சிறந்த பந்து வீச்சாளராகவும் சென். ஜோண்ஸ் அணியைச் சேர்ந்த லோகதீஸ்வர், சிறந்த களத்தடுப்பாளராக யாழ். மத்திய கல்லூரி அணியைச் சேர்ந்த அலன் டிலான், சிறந்த சகலதுறை வீரராக அதே அணியைச் சேர்ந்த அலன்ராஜ், சிறந்த துடுப்பாட்ட வீரராக சென். ஜோண்ஸ் கல்லூரி அணி கப்டன் அமிர்தயன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தொடர்ந்து சென். ஜோண்ஸ் கல்லூரி அதிபர், அருட்திரு வண ஞானப் பொன்ராசா தலைமையில் பரிசளிப்பு நிகழ்வுகள் நடைபெற்றது.(எஸ்.பி,42,20)



படப்பிடிப்பு : சுரேஷ்

## வடக்கின் போரில் அமைச்சர்

(யாழ்ப்பாணம்)

வடக்கின் போர் என வர்ணிக்கப்படுகின்ற மூன்று நாள் இனிங்ஸ் போட்டியின் இறுதி நாள் ஆட்டத்தை பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பார்த்து மகிழ்ந்தார்.

யாழ். மத்திய கல்லூரி விடுத்த வேண்டுகோளிற்கிணங்கவே அமைச்சர் மேற்படி போட்டியைக் கண்டு மகிழ்ந்தார். இதன்போது யாழ். மத்திய கல்லூரியின் புலம்பெயர் பழைய மாணவர்களால் அமைக்கப்பட்ட உள்ளக விளையாட்டுக்கழகத்தினது விளையாட்டு உபகரண தொகுதிகள் அடங்கிய விற்பனைக் கூடத்தை அமைச்சர் சம்பிரதாய பூர்வமாக திறந்து வைத்தார்.

அத்துடன் பாடசாலை சமூகத்தால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக உள்ளக விளையாட்டு உபகரணத் தொகுதியையும் இதன்போது வழங்கினார்.

# அறிமுக டெஸ்டில் தவான் அமர்க்களம் ஆட்டம் காண்கிறது ஆஸி.



(மொகாலி)

அறிமுக வீரராக களமிறங்கி, அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்திவரும் ஷிகர் தவான், மொகாலி டெஸ்ட் போட்டியில் இந்திய அணிக்கு அமர்க்களமான ஆரம்பத்தைப் பெற்றுக்கொடுத்து வருகின்றார். இந்திய, அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையிலான நான்கு போட்டிகளைக்கொண்ட டெஸ்ட் தொடரின் மூன்றாவது போட்டி மொகாலியில் நடைபெற்று வருகின்றது. இதில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 251 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் மூன்றாம் நாள் ஆட்டத்தை அவுஸ்ரேலிய அணி தொடர்ந்தது. இதில் வேகப்பந்து வீச்சாளர் ஸ்ரார்க் மற்றும் எஸ். ஸ்மித் இந்தியப் பந்து வீச்சாளர்களை புரட்டி எடுத்து ஓட்டங்களை வாரிக்குவித்தனர். இந்த ஜோடியைப் பிரிக்க இந்திய அணி கப்டன் டோனி கடும் முயற்சி மேற்கொண்டார். ஒரு வழியாக 97 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் இசாந் சர்மாவினால் இந்த ஜோடி பிரிக்கப்பட்டது. இதன் பின்னர் அவுஸ்ரேலிய அணியின் விக்கெட்டுக்கள் விரைவாக வீழ்த்தப்பட்டது. இறுதியில் அவுஸ்ரேலிய அணி முதல் இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 408 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சிறப்பான முறையில் ஆடிய வேகப்பந்து வீச்சாளர் ஸ்ரார்க் 144 பந்துகளை எதிர்கொண்டு 14 பவுண்டரிகள் அடங்கலாக 99 ஓட்டங்களைப் பெற்று ஒரு ஓட்டத்தால் சதத்தைத் தவறவிட்டார். மற்றும் எஸ். ஸ்மித் 92, கோபன் 86, வோனர் 71 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் இசாந் சர்மா, ஜடேஜா தலா மூன்று, அஸ்வின், ஓஜா தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர். பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக களமிறங்கிய இந்திய அணி ஆரம்பம் முதலே அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகின்றது. அறிமுகப் போட்டியில் களமிறங்க ஷிகர் தவான் அனுபவ வீரரைப் போன்று இலாவகரமாக அவுஸ்ரேலிய அணிப் பந்து வீச்சாளர்களை பந்தாடி தனது கன்னிச் சதத்தைப் பதிவாக்கினார். இறுதியில் நேற்றைய மூன்றாம் நாள் ஆட்டம் நிறுத்தப்பட்ட வேளை, இந்திய அணி விக்கெட் இழப்பின்றி 283 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. இதில் தவான் 168 பந்துகளை எதிர்கொண்டு 33 பவுண்டரிகள், இரண்டு சிக்ஸர்கள் அடங்கலாக 185, முரளி விஜய் 181 பந்துகளை எதிர்கொண்டு 10 பவுண்டரிகள், இரண்டு சிக்ஸர்கள் அடங்கலாக 83 ஓட்டங்களைப் பெற்றுள்ளனர். இன்று போட்டியின் நான்காம் நாளாகும்.

# ஹேரத் மாயாஜாலம் சுருண்டது பங்களாதேஷ்

(கொழும்பு)

இலங்கை அணிக்கெதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் பங்களாதேஷ் அணி 240 ஓட்டங்களுக்குள் சுருண்டது.

இலங்கை, பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இறுதிப் போட்டி நேற்று ஆர். பிரேமதாச விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் களத்தடுப்பைத்தீர்மானித்தது. இதற்கமைய முதல் இனிங்ஸிற்காக ஆடிய பங்களாதேஷ் அணி, ரங்கண ஹேரத்தின் சுழற்பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் வேகமாக விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இறுதியில் பங்களாதேஷ் அணி முதல் இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 240 ஓட்டங்களைப் பெற்றது. இதில் எம். ஹக் 64, நசீர் உசைன் 48, ஹசி 32 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ரங்கண ஹேரத் ஐந்து, குலசேகர மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக ஆடிவரும் இலங்கை அணி நேற்றைய முதல் நாள் ஆட்டம் நிறுத்தப்பட்டவேளை, ஒரு விக்கெட்டை இழந்து 18 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. ஆட்டமிழக்காது சங்கக்கார மூன்று, கருணாரட்ன 12 ஓட்டங்களுடன் உள்ளனர். இன்று போட்டியின் இரண்டாம் நாளாகும்.

முதல் டெஸ்ட் போட்டி வெற்றி தோல்வியின்றி நிறைவடைந்தமை குறிப்பிடத்தக்கது.

## விரக்தி; விபரீதத்தை விளைவிக்குமா?



காதலி கொலை வழக்கில் சிக்கியுள்ள மாற்றுத் திறனாளி தடகள வீரர் ஆஸ்கர் பிஸ்டோரியஸ், தற்கொலை செய்து கொள்ளும் முடிவில் உள்ளார்.

தென்னாபிரிக்காவின் மாற்றுத் திறனாளி வீரர் ஆஸ்கர் பிஸ்டோரியஸ். பரா ஒலிம்பிக்கில் 6 தங்கம் வென்றுள்ளார். கடந்த காதலர் தினத்தன்று (பிப். 14), தனது காதலி ஸ்டீன்கேம்ப்பை, தனது வீட்டில் வைத்து சுட்டுக் கொன்றார். இதில் கைது செய்யப்பட்ட பிஸ்டோரியஸ், தற்போது பிணையில் வெளி வந்துள்ளார்.

பிஸ்டோரியசின் இப்போதைய நிலை குறித்து, விரைவில் ஆவணப் படம் ஒன்று வெளியாகவுள்ளது. இது குறித்து பிஸ்டோரியஸ் நண்பர் மைக் அஜ்ஜீ கூறியதாவது,

தனது காதலி மரணத்துக்குப் பின், பிஸ்டோரியஸ் மிகவும் மனம் உடைந்து போய் விட்டார். வழக்கை நடத்துவதற்கு பணம் இல்லாமல் தவிக்கிறார். இதற்காக ஆசையாக வளர்த்த பந்தய குதிரைகளை விற்றுவிட்டார்.

எப்போதும் ஸ்டீன் கேம்ப் குறித்து பேசிக் கொண்டே உள்ளார். தனது காதலி மற்றும் குடும்பத்துக்காக பிரார்த்தனை செய்யுமாறு எங்களிடம் கூறுகிறார். அவரது பேச்சில் தன்னம்பிக்கை இல்லாமல் உள்ளது. நடை பிணமாக நடமாடுகிறார். இது எங்கு போய் முடியும் எனத் தெரியவில்லை.

இதுகுறித்து அவரிடம்பேசியும் பலன் இல்லை. மொத்தத்தில் வாழ்க்கையே முடிந்து போனதாக நினைக்கும் பிஸ்டோரியஸ், தற்கொலை செய்து கொள்ளும் முடிவில் உள்ளார். இது மிகவும் வருத்தம் தருகிறது எனத் தெரிவித்தார்.

## தோல்வியைத் தவிர்க்க நியூசிலாந்து போராட்டம்



(வெலிங்ரன்)

இங்கிலாந்து அணிக்கெதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் தோல்வியைத் தவிர்க்க நியூசிலாந்து அணி போராடி வருகின்றது.

நியூசிலாந்து, இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவது போட்டி நியூசிலாந்தின் வெலிங்ரனில் நடைபெற்று வருகின்றது.

முதல் இனிங்ஸிற்காக மூன்று விக்கெட்டுக்களை இழந்து 66 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் மூன்றாம் நாள் ஆட்டத்தை நியூசிலாந்து அணி தொடர்ந்தது. இங்கிலாந்து வேகப்பந்து வீச்சாளர்களை எதிர்கொள்ள முடியாமல் திண்டாடிய நியூசிலாந்து அணி விரைவாக விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இருப்பினும் கப்டன் மக்கலம், வைட்லிங் ஆகியோர் நிதானமாக ஆடி ஓட்டங்களைக் குவிக்க முற்பட்டனர். இருப்பினும் இவர்களால் அரைச் சதத்தைக் கடக்க முடிந்ததே தவிர அணிக்கு அது பலமாக அமையவில்லை. இறுதியில் நியூசிலாந்து அணி முதல் இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 254 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கப்டன் மக்கலம் 69, வைட்லிங் 60, வில்லியம்ஸன் 42 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ட்ரொட் ஆறு, ஸ்ரீபன் பின், அண்டர்சன் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

நியூசிலாந்து அணி 211 ஓட்டங்கள் பின்னிலையில் இருந்தமையால் இங்கிலாந்து அணியால் மீண்டும் துடுப்பாட அழைக்கப்பட்டது. இந்த நிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடி வரும் நியூசிலாந்து அணி நேற்றைய மூன்றாம் நாள் ஆட்டம் நிறுத்தப்பட்ட வேளை, ஒரு விக்கெட்டை இழந்து 77 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. ஏழு விக்கெட்டுக்களை கைவசமுள்ள நிலையில் இனிங்ஸ் தோல்வியைத் தவிர்க்க நியூசிலாந்து அணி 134 ஓட்டங்களைப் பெறவேண்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இன்று போட்டியின் நான்காம் நாளாகும். இங்கிலாந்து முதல் இனிங்ஸ் 465.

## மேலும் ஒரு வருடம் நீடிப்பு

(மும்பை)

இந்திய அணியின் பயிற்சியாளர் டங்கன் பிளட்சரின் பதவிக் காலம் ஒரு ஆண்டு நீட்டிக்கப்படுகிறது.

கடந்த 2011இல் சிம்பாப்வேயின் டங்கன் பிளட்சர் இந்திய அணிக்கு பயிற்சியாளராக நியமிக்கப்பட்டார். இவரது பயிற்சியின் கீழ் இந்திய அணி 10 டெஸ்டில் தோற்றது. இதையடுத்து இவரை நீக்க வேண்டுமென கோரிக்கை எழுந்தது. இவரது பதவிக் காலம் இம்மாதத்துடன் முடியும் நிலையில், இவருக்கு இன்னும் ஒரு ஆண்டு நீட்டிப்பு அளித்து இந்திய கிரிக்கெட் சபை (பி.சி.சி.ஐ.) அதிர்ச்சி அளித்துள்ளது.

இது குறித்து பி.சி.சி.ஐ. சிரேஷ்ட அதிகாரி ஒருவர் கூறுகையில், பயிற்சியாளராக கடந்த இரண்டு ஆண்டாக பிளட்சர் உள்ளார். அடுத்து தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் இந்தியா பங்கேற்கிறது. இந்நிலையில், புதிய பயிற்சியாளரை நியமிப்பது சரியாக அமையாது. எனவே, பிளட்சரே நீடிப்பார் என்றார்.


இதேவேளை, பயிற்சியாளர் நீடிப்புக்



குறித்து இந்திய அணியின் முன்னாள் கப்டன் கவாஸ்கர் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்.

பிளட்சர் ஒரு இந்தியராக இருந்தால், இவரின் பதவிக்காலத்தை நீட்டித்திருப்பார்களா என சந்தேகம் எழுகிறது. கடந்த காலங்களை திரும்பிப் பார்த்தால், இவர் சிறப்பாக செயற்படவில்லை என்பது தெரியும். ஆனாலும், இவருக்கு வாழ்த்துத் தெரிவித்துக் கொள்கிறேன். இவர் எதிர்காலத்தில் சிறப்பாக செயற்படுவார் என நம்புகிறேன் என கவாஸ்கர் தெரிவித்துள்ளார்.

## அரையிறுதியில் நடால்



(நியூயோர்க்)

இண்டியன் வெல்ஸ் பி.என்.பி.பாரிபா ஓப்பன் ரென்னிஸ் போட்டியின் ஆண்கள் ஒற்றையர் பிரிவு அரையிறுதியில் விளையாட ரபேல் நடால் (ஸ்பெயின்) தகுதி பெற்றார்.

காலிறுதிப் போட்டியில் நட்சத்திர வீரர் ரோஜர் பெடரருடன் (சுவிஸ்) நேற்று முன்தினம் மோதிய நடால் 6,4, 6,2 என்ற நேர் செட்களில் வென்று அரையிறுதிக்கு முன்னேறினார். இருவரும் இதுவரை நேருக்கு நேர் மோதியுள்ள ஆட்டங்களில் நடால் 19 போட்டிகளில் வெற்றிபெற்று முன்னிலை வகிப்பது குறிப்பிடத்தக்கது.

போட்டியின் பின் கருத்துத் தெரிவித்த பெடரர், காயத்திலிருந்து நடால் மீண்டு முழு உடற்தகுதி பெற்றுவிட்டார். இந்த ஆட்டம் அவரின் உடற்தகுதியை நிரூபிக்கும் வகையில் அமைந்தது. அவர் சிறந்த வீரர் என்பதில் சந்தேகமில்லை எனத் தெரிவித்தார்.

மற்றொரு காலிறுதிப் போட்டியில் தோமஸ் பெர்டிச் (செக்.) 6,4, 6,4 என்ற நேர் செட்களில் தென்னாபிரிக்காவின் கெவின் ஆண்டர்சனை வீழ்த்தினார்.

## முதல் வெளிநாட்டவர்

(மெல்பேர்ன்)

மேற்கிந்தியத்தீவுகளில் நடைபெறவுள்ள கரீபிய பிரிமியர் லீக் (சி.பி.எல்.,) தொடரில் முதல் ஒப்பந்தம் செய்யப்பட்ட வெளிநாட்டு வீரர் என்ற பெருமையை முன்னாள் அவுஸ்ரேலிய கப்டன் பொண்டிங் பெற்றுள்ளார்.

பொண்டிங் ஐ.பி.எல்., தொடரில் மும்பை இந்தியன்ஸ் அணியின் கப்டனாக நியமிக்கப்பட்டுள்ளார். இங்கிலாந்தின் கவுன்டி போட்டிகளிலும் பங்கேற்கிறார். தற்போது மேற்கிந்தியத்தீவில் முதன் முதலாக நடக்கவுள்ள சி.பி.எல்., தொடரில் பங்கேற்க ஒப்பந்தம் செய்யப்பட்டார். வரும் ஜூலை 29 முதல் ஒகஸ்ட் 26 வரை நடக்கவுள்ள இத்தொடரில் ஒப்பந்தம் செய்யப்பட்ட முதல் வெளிநாட்டு வீரர் பொண்டிங் தான். இதில், ஆன்டிகுவா அண்டு பார்புடா, பார்படாஸ், கயானா, ஜமைக்கா, டிரினிடாட் அண்டு டுபாகோ என, மொத்தம் 6 அணிகள் பங்கேற்கின்றன. பொண்டிங் எந்த அணியில் விளையாடுவார் என்பது, வரும் மே மாதம் தான் முடிவாகும்.

## அரையிறுதியில் சாய்னா

(பசல்)

சுவிஸ் ஓப்பன் பட்மின்ரன் தொடரின் அரையிறுதிக்கு இந்தியாவின் சாய்னா நேவல் முன்னேறினார்.

சுவிட்சர்லாந்தில் உள்ள பசல் நகரில், ஏழாவது சுவிஸ் ஓப்பன் பட்மின்ரன் தொடர் நடைபெற்று வருகின்றது. இதன் பெண்கள் ஒற்றையர் பிரிவு காலிறுதியில் சாய்னா, சீன தைபேவின் யிங் டாயைச் சந்தித்தார். இதன் தொடக்கம் முதலே, சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய சாய்னா முதல் செட்டை 21-11 என கைப்பற்றினார். இரண்டாவது செட்டிலும் அசத்திய இவர் 21-12 என வென்றார். முடிவில் சய்னா 21-11, 21-12 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று, அரையிறுதிக்கு முன்னேறினார்.



## பழி தீர்த்தது பாகிஸ்தான்

(சென்சூரியன்)

மொகமட் இர்பானின் சிறப்பான பந்து வீச்சின் மூலம் இரண்டாவது ஒரு நாள் போட்டியில் பாகிஸ்தான் அணி அபாரமான வெற்றிபெற்றது. தென்னாபிரிக்க, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரின் இரண்டாவது போட்டி நேற்று முன்தினம் தென்னாபிரிக்காவின் சென்சூரியனில் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் ஆடிய தென்னாபிரிக்க அணி, மொகமட் இர்பானின் பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இருப்பினும் ரொபின் பீற்றர்சன், பெஹாடின் ஆகியோர் ஓரளவு தாக்குப் பிடித்து ஆடினர். இறுதியில் தென்னாபிரிக்க அணி 43.2 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 191 ஓட்டங்களைப் பெற்றது. இதில் பெஹாடின் 58, ரொபின் பீற்றர்சன் 44, டுபிளசர், அம்லா, மைக்லாரன் தலா 17 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் மொகமட் இர்பான் நான்கு, யுனைட்கான், சயிட் அஜ்மல், மொகமட் ஹபீஸ் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு 192 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய பாகிஸ்தான் அணி, 39.2 ஓவர்கள் நிறைவில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் கப்டன் மிஸ்பா உல் ஹக் 57, மலிக் 38 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றனர். மற்றும் ஹபீஸ், யூனிஸ்கான் 32 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ரொபின் பீற்றர்சன் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர். இப்போட்டியின் ஆட்டநாயகனாக மொகமட் இர்பான் தெரிவானார். இதன் மூலம் ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரில் இரு அணிகளும் ஒவ்வொரு வெற்றிகளைப் பதிவாக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## காலிறுதியில் நியூகேசில் யுனைடட்



(நியூகேசில்)

அன்சி மக்காச்சாலா அணிக்கு எதிரான ஐரோப்பிய லீக் கால்பந்து போட்டியில் வெற்றி பெற்ற நியூகேசில் யுனைடட் அணி காலிறுதிக்கு தகுதி பெற்றது.

இங்கிலாந்தில் நடந்த ஐரோப்பிய லீக் கால்பந்து தொடரின் இரண்டாவது சுற்று லீக் போட்டியில், நியூகேசில் யுனைடட், அன்சி மக்காச்சாலா அணிகள் மோதின. போட்டியின் முதல் பாதியில் இரு அணி வீரர்களும் கோல் ஏதும் அடிக்கவில்லை. பின் இரண்டாவது பாதியின் கடைசி நிமிடத்தில் கிடைத்த வாய்ப்பில் நியூகேசில் யுனைடட் அணி வீரர் டெம்பா சிசீ (90ஆவது நிமிடத்தில்) ஒரு கோல் அடித்து, அணியின் வெற்றியை உறுதி செய்தார். முடிவில், நியூகேசில் யுனைடட் அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று காலிறுதிக்கு தகுதி பெற்றது.

ஏனைய போட்டிகளில் செல்சி, டாட்டன்ஹாம் லாசியோ அணிகள் வெற்றி பெற்று காலிறுதிக்கு முன்னேறியது.

# வி. உருத்திரகுமாரன் குழுவினரின் அபாயகரமான போக்கு!


**- வானவில் 26 இதழிலிருந்து.**

அண்மையில் அமெரிக்காவில் நடைபெற்ற "நாடு கடந்த தமிழீழ அரசாங்க"த்தின் நிகழ்வொன்றில் பேசிய அதன் "பிரதமர்" விசுவநாதன் உருத்திரகுமாரன், இலங்கைத் தமிழர்களின் எதிர்கால வாழ்வுக்கு கேடு விளைவிக்கக்கூடிய சில அபாயகரமான கருத்துக்களைக் கூறியுள்ளார். அந்த நிகழ்வில் பேசிய உருத்திரகுமாரன், அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா வருங்காலத்தில் அமெரிக்காவின் நடவடிக்கைகள் ஆசியாவை மையமாக வைத்தே இருக்கும் எனக் கூறியுள்ளதாகவும், எனவே இலங்கைத் தமிழர்களும் அவரது பாதையில் பயணித்தால் தமது விடுதலையை வென்றெடுக்க ஏதவாக இருக்கும் எனவும் கருத்துப்படக் கூறியுள்ளார்.

அத்துடன் அமெரிக்காவிலுள்ள பல புத்திஜீவிகள், ஆசியாவில் சீனாவின் செல்வாக்கு அதிகரித்துச் செல்வதாகச் சுட்டிக்காட்டி ஊடகங்களில் கட்டுரைகள் எழுதுவதுடன், அதைத் தடுக்க அமெரிக்கா நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோருவதாகவும் கூறிய உருத்திரகுமாரன், அவர்களின் கோரிக்கைக்கு இசைவாக இலங்கைத் தமிழர்களும் சீனாவுக்கு எதிராகச் செயற்பட வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளார். அப்படிச் செய்வதன் மூலம் அமெரிக்காவும், இலங்கைத் தமிழர்களும் ஒரே நேர்கோட்டில் பயணிக்க முடியும் எனவும் திருவாய் மலர்ந்துள்ளார்.

உருத்திரகுமாரன் இங்கு சொல்ல வரும் விடயத்தை சுருக்கமாக இப்படிக் கூறலாம். அதாவது இலங்கைத் தமிழர்கள் தமது விடுதலையைப் பெறுவதற்கு சர்வ வல்லமை பொருந்திய அமெரிக்க ஏகாதிபத்தியத்தில் நம்பிக்கை வைத்து அதனுடன் இணைந்து செயற்பட வேண்டும்.

அடுத்ததாக விரைவில் உலகின் முதலாவது பொருளாதார சக்தியாக வர இருக்கும் சோசலிச சீனாவின் செல்வாக்கைத் தடுப்பதற்கு அமெரிக்கா ஆசியாவில் வகுத்துச் செயல்படும் மூலோபாய, தந்திரோபாயத் திட்டங்களுடன் இலங்கைத் தமிழர்கள் கைகோர்க்க வேண்டும். இவைதான் அவரது பேச்சின் சாராம்சம்.




உருத்திரகுமாரனின் இந்த உரை குறித்து ஆச்சரியப்படுவதற்கு ஏதுமில்லை. ஏனெனில் சுதந்திர இலங்கையில் தமிழர்களுக்கு முதன்முதலில் தலைமைதாங்கிய ஜீ.ஜீ. பொன்னம்பலம் முதல், பின்னர் வந்த எஸ்.ஜே. வி.செல்வநாயகம், அ.அமிர்தலிங்கம், வே.பிரபாகரன் உட்பட, இப்பொழுது தலைமைதாங்கிக் கொண்டிருக்கும் இரா.சம்பந்தன் வரை, அந்நிய ஏகாதிபத்தியத்தின் விசுவாசிகளாகவும், சோசலிஸத்தின் பரம வைரிகளாகவும் இருந்து வருவது இரகசியமான விடயமல்ல. இதில் இந்த உருத்திரகுமாரன் எப்படி விதிவிலக்காக இருக்க முடியும்?

உலகில் கடந்த நூற்றாண்டில் வெற்றி பெற்ற அத்தனை தேசிய விடுதலைப் போராட்டங்களும், மக்கள் புரட்சிகளும், ஏகதிபத்தியத்தையும், உள்நாட்டுப் பிற்போக்கையும் எதிர்த்தே வெற்றி பெற்றன. ஏனெனில் நாடுகள் காலனி ஆட்சிக்கு உட்பட்டதற்கும், தேசிய இனங்கள் ஒடுக்குமுறைக்கு உள்ளானதற்கும், மக்கள் சுரண்டலுக்கும் அடக்குமுறைக்கும் உள்ளானதற்கும் அடிப்படைக் காரணம், ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பே என்பதை, அந்தப் போராட்டங்களுக்குத் தலைமை தாங்கியவர்கள் நன்கு அறிந்திருந்தனர்.

எமது மிகப்பெரிய அண்டை நாடான இந்தியா அகிம்சை வழியிலும், ஆயுதப் போராட்ட வழியிலும் பிரித்தானிய ஏகாதிபத்தியத்துக்கு எதிராகப் போராடியே சுதந்திரம் பெற்றது. சீனா யப்பானிய ஏகாதிபத்தியத்துக்கு எதிராக ஆயுதம் ஏந்திப் போராடியே விடுதலை பெற்றது. வியட்நாம் பிரெஞ்சு - அமெரிக்க ஏகாதிபத்தியங்களுக்கு எதிராகப் போராடியே வெற்றி பெற்றது. இப்படி சுதந்திரம் பெற்ற ஒவ்வொரு நாட்டைப் பற்றியும் அடுக்கிக் கொண்டே போகலாம்.

ஆனால் உலக மக்களின் இந்தப் பொதுப் போக்கிற்கு எதிராக, இலங்கைத் தமிழர்கள் மட்டும், ஏகாதிபத்திய விசுவாசத்திலேயே தமது அரசியலை காலங்காலமாக நடாத்தி வருகிறார்கள். "சுற்றிச் சுற்றி சுப்பற்றை கொல்லைக்குள்ளே" என்பது போல, அதைத்தான் உருத்திரகுமாரனும் இப்பொழுது செய்ய ஆரம்பித்திருக்கிறார். இந்த ஏகாதிபத்திய சார்பு வழிமுறை தோல்விக்கு மேல் தோல்வியைத்தான் தழுவி வந்திருக்கிறது என்பதை இவர்களில் யாருமே எண்ணிப் பார்க்கத் தயாரில்லை. உலக அனுபவத்திலிருந்தோ அல்லது தனது சொந்த அனுபவத்திலிருந்தோ பாடம் படிக்காத ஒரு இனம் இருக்குமானால், அது தமிழினம் மட்டும்தான்.

சரி, இலங்கைத் தமிழர்களின் விடுதலையைப் பெறுவதற்கு அமெரிக்காவின் தயவைப் பெறுவதுதான் ஒரே-வழி என்ற உருத்திரகுமாரனின் கையறு நிலையை ஒரு கற்பனைக் கதையாக ஏற்றுக் கொண்டாலும், ஆசியாவில் சீனாவுக்கு எதிரான அமெரிக்க நடவடிக்கையுடன் இலங்கைத் தமிழர்கள் ஏன் இணைந்து கொள்ள வேண்டும் என்பதற்கு அவர் சொல்லப் போகும் காரணம் என்ன?

ஆசியாவில் மட்டுமின்றி, உலகிலேயே சனத்தொகையும், தொன்மையான நாகரீகமும் கொண்ட இரு நாடுகள் சீனாவும் இந்தியாவும். அவை இன்று பொருளாதாரத்திலும் மிக முன்னேறி வரும் நாடுகளாக உள்ளன. அவற்றின் இந்த வளர்ச்சியை மேற்கத்தைய ஏகாதிபத்திய சக்திகள் விரும்பவில்லை. சோசலிஸ சீனாவை அழிப்பது மட்டும் அவற்றின் நோக்கம் அல்ல. முதலாளித்துவ இந்தியா பலம் பெறுவதையும் தடுத்து நிறுத்துவதே அவற்றின் நோக்கம். ஏகாதிபத்தியத்தின் முக்கியமான ஒரு குணாம்சம், அது தனக்கு விரோதமான சோசலிஸ அமைப்பை மட்டும் அல்ல, தனக்குப் போட்டியாக இன்னொரு முதலாளித்துவ நாடு வளர்வதையும் விரும்புவதில்லை. நடந்து முடிந்த இரண்டு உலகப் போர்களும் இதற்கு உதாரணங்கள்.

அப்படியிருக்க, எமது இரண்டு பெரிய அயல்நாடுகளான இந்தியாவுடனும், சீனாவுடனும் நட்பாக இருந்து இலங்கைத் தமிழர்களின் பிரச்சினை தீர்வதற்கு அவர்களது தார்மீக உதவியைப் பெறுவதை விடுத்து, அவைகளை எதிர்த்து மேற்கத்தைய நாடுகளில் தொங்குவது இலங்கைத் தமிழர்களுக்குப் பேரழிவைத்தான் தரும்.

இந்த விடயத்தில் எமது "எதிரிகளான" சிங்களவர்களிடமிருந்தாவது இலங்கைத் தமிழர்கள் பாடம் படித்ததாகத் தெரியவில்லை. அவர்கள் மிகவும் புத்திசாலித்தனமாக, இந்தியாவுடனும் சீனாவுடனும் தமது உறவுகளைச் சிறப்பாகப் பேணி நன்மை பெற்று வருகின்றனர். அதைச் செய்ய வேண்டிய நாம் எங்கோ நிற்கிறோம்.

# காருகுறிச்சியின் ஆர்வங்கள்!



நான் முதலில் சந்தித்த அருணாசலம் தூய கதராடை அணிந்தவர். எந்தவிதமான கெட்ட பழக்கங்களும் இல்லாதவர். கெட்ட பழக்கங்களையும் வழக்கங்களையும் அறவே வெறுத்தவர். இந்தக் குணத்தைக் கண்டு நாங்கள் அவரை மிகவும் மதித்தோம். "உங்களால் எப்படி இந்த மாதிரியான வைராக்கியத்தோடு இருக்க முடிகிறது?" என்று கேட்போம்.

"நாயனம் வாசிப்பவர்களைப் பற்றி, குடிகாரர்கள், நடத்தை மோசமானவர்கள் என்று அபிப்பிராயம் இருக்கிறது. அதை மாற்ற வேண்டும். இதுதான் என் இலட்சியம்" என்பார்.

அவருடைய குரு பக்தி அபாரமானது. அவருடைய சகலையும் என்னுடைய சங்கீத உபாத்தியாயருமான குருமலை நாதஸ்வரம் பொன்னுசாமி பிள்ளைக்கு அப்பொழுது தலைக்குழந்தை ஆண் பிறந்தது. அருணாசலத்தைப் பெயர் வைக்கும்படி கேட்டுக் கொண்டார்கள். குழந்தைக்கு, "பாலசுப்ரமணியம்" என்று பெயர் சூட்டினார். பிறகு "இது என்னுடைய குரு ராஜரத்னம் பிள்ளையின் சொந்தப் பெயர்" என்று சொன்னார். ராஜரத்னம் பிள்ளைக்கு இப்படி ஒரு பெயர் இருப்பது அன்றுதான் தெரிய வந்தது எங்களுக்கு!

அருணாசலம் பிரபலமாவதற்கு முன் அடிக்கடி எங்கள் ஊருக்கு வருவார். அவருக்குக் கல்யாணம் ஆகும்போது 18 வயசு இருக்கலாம். எங்கள் ஊரில்தான் கல்யாணம் செய்துகொண்டார். எங்கள் ஊர்ப் பெண்ணைக் கல்யாணம் செய்துகொண்டதிலிருந்து அவருக்கு "யோகம்" தொடங்கிவிட்டதாய் இங்கே பேசிக் கொள்வார்கள்.

சிறிய வயதிலேயே அவர் ரொம்ப ஜோராகப் பாடுவார். எப்போதும் ஏதாவது ஒரு ராகத்தை அவரை அறியாமலேயே முனகிக் கொண்டிருப்பார். அது கேட்க மனோரம்மியமாய் இருக்கும். அப்பொழுது பெண்களே ஆசைப்படும்படியாக அவ்வளவு கூந்தல் தலைமுடி வைத்திருந்தார்!

கச்சேரிக்குப் புறப்படுவதற்கு முன்னால் அவர் தன்னை அலங்கரித்துக் கொள்வதை அருகில் உட்கார்ந்து சுவாரஸ்யமாகப் பார்த்துக் கொண்டே இருப்போம்! தடவை தடவையாய் பவுடர் பூசிக் கொள்வது. கடுக்கன், மோதிரங்கள், சங்கிலியைத் துடைத்துப் போட்டுக் கொள்வது, பொட்டு வைத்துக் கொள்வது, வாசனைத் திரவியங்களைப் பூசிக் கொள்வது, ஒரு குஷியில் எங்கள் மீதும் பூசிவிடுவார். நாங்கள் மறுத்தாலும் விடமாட்டார்!

அவருக்குக் கோபம் வந்து நான் ஒருநாள் கூடப் பார்த்ததில்லை. நான் எதிர்த்து ஏதாவது சொன்னாலும் ஆனந்தமாகச் சிரித்துக் கொண்டே கேட்டுக் கொண்டிருப்பார். சிரிப்பு ஒன்றுதான் பதில். தமிழ் பேசும்போது கனமான இங்கிலீஷ் வார்த்தைகளைப் போட்டுப் பேசுவார். உச்சரிப்பும் பிரயோகமும் சுத்தமாக இருக்கும்! அப்படிப் பேசுவதில் அவருக்கு ஒரு மோகம்!

கோவில்பட்டிக்கு அவர் குடி வந்த புதிதில் ஒரு நாள் அவர் வீட்டிற்குப் போயிருந்தபோது அவருடைய அலுமாரியில் ஏராளமான புத்தகங்கள் இருப்பதைப் பார்த்தேன். அவ்வளவும் இலக்கியத் தரம் வாய்ந்த நாவல்கள், சிறுகதைகள்! எனக்கு பெரிய ஆச்சரியம். எனக்குத் தெரிந்தவரை தமிழ்நாட்டில் நாதஸ்வரம் வாசிப்பவர்களில் சிறந்த இலக்கியப் படைப்புகளை உட்கார்ந்து படிக்க, நான் பார்த்ததுமில்லை, கேள்விப்பட்டதுமில்லை!

ஒருதடவை அவர் மார்க்ஸிம் கார்க்கி எழுதிய "அன்னை"யை மிகவும் அனுபவித்துப் படித்துக் கொண்டிருப்பதைக் கண்டேன்.

சங்கீத உலகில் பிரபல்யம் அதிகம் ஆவதற்கு முன் அவர் இசை ஒன்றில்தான் குருவைப் பின்பற்றி வந்தார். பிரபல்யம் அதிகம் ஆன உடனே, "எல்லா விஷயங்களிலுமே" குருவைப் பின்பற்றி நடக்க ஆரம்பித்துவிட்டார்! உடம்பை ஜாக்கிரதையாக வைத்திருந்தால் நாம் இன்றும் அவரது கானாம்ருத மழையில் சொட்டச் சொட்ட நனைந்து ஆனந்தப்பட்டுக் கொண்டிருப்போம். நாம் அதற்குக் கொடுத்துவைக்கவில்லை.

அவர் மறைந்துவிட்டார் என்று சொன்னாலும் இன்றும் அவர் இருப்பதாகவே படுகிறது எனக்கு. எங்கோ தூரப் பயணம் போயிருக்கிறார். திரும்பவும் வருவார். இப்படித் தோன்றுகிறது எனக்கு!


**(கி.ராஜநாராயணனின் 'கி.ரா. கட்டுரைகள்' நூலில் இருந்து)**

5-(2)

# பத்தாண்டுகளின் பத்து இயக்குனர்கள்

சார்லஸ்


## சான் – வூக் பார்க்



2002 - 2005 ஆண்டுகளுக்கு இடையில் "சான்-வூக் பார்க்" எடுத்த மூன்று படங்களும் "பழிக்குப் பழி" என்பதையே பொதுவான உள்ளடக்கமாகக் கொண்டிருக்கின்றன. இப்போது "vengeance trilogy" என்றே பொதுவாக அறியப்படும் அந்தப் படங்கள், "sympathy for mr vengeance", "old boy" மற்றும் "lady vengeance". இவற்றுள் ஆகச் சிறந்ததும் இயக்குநருக்கு நல்ல பெயர் எடுத்துக்கொடுத்ததும் "old boy" தான்.

மிக அரிதாகவே அமையக்கூடிய கச்சிதம் "old boy" இற்கு கூடிவந்திருக்கிறது. முதல் ஃப்ரேமிலிருந்து இறுதி ஃப்ரேம் வரை மிக நேர்த்தியாக செதுக்கப்பட்டிருக்கிறது. முதல் முறை பார்ப்பவர்களுக்கு சில விஷயங்கள் ஏன் நடக்கிறதென்று புரியாமலும், விலகிச் செல்வது போன்றும் தோன்றலாம் ஆனால் எல்லாமே இறுதியில் கோர்க்கப்பட்டு முழுமையான சித்திரமாக ஆகிவிடுகிறது. இந்த முழுமையையும் நேர்த்தியையும் அந்த இயக்குனராலேயே மறுமுறை செய்ய முடியுமா என்பது சந்தேகமே. இந்தப் படத்தின் கதை எப்போதுமே எனக்குப் பிடித்ததில்லை, ஆனால் இயக்கமும், திரைக்கதையின் வடிவமும் ஒவ்வொருமுறையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியிருக்கின்றன. மையப் பாத்திரத்தில் நடித்திருக்கும் மின் - சிக் சோய் சந்தேகமில்லாமல் ஆசியாவின் மிகச் சிறந்த நடிகர்களில் ஒருவர்.

ஒருவன் தனியறை ஒன்றில் 15 வருடங்களாக அடைத்து வைக்கப்பட்டிருக்கிறான். யார் அவனை கடத்திவந்து அடைத்தார்கள், என்ன காரணத்திற்காக, என்று அவனுக்குச் சுத்தமாகத் தெரியவேயில்லை. வேளா வேளைக்கு உணவு மட்டும் வருகிறது. வாரத்தில் ஓர் நாள் மயக்கப் புகை அறைக்குள் அனுப்பப்படுகிறது. அவன்




மயங்கிய பின் சிலர் வந்து, அவனுக்கு ஷேவ் செய்து, உடைமாற்றி, அறையை சுத்தமும் செய்கிறார்கள். ஒரு பெண் வந்து அவனுக்கு ஹிப்னோடிஸம் செய்து உரையாடுகிறாள்.

மற்ற சமயங்களில் அவன் ரி.வி மூலமே வெளியுலகைப் பார்த்தபடி அமர்ந்திருக்கிறான். தொலைக்காட்சியே அவனுக்கு கடிகாரம், கலண்டர், உரையாடுவதற்கு நண்பன், உறவுகொள்வதற்குக் காதலி எல்லாமே. தொலைக்காட்சி செய்தியிலேயே அவன் தன் மனைவி கொல்லப்பட்டதையும், அந்தக் கொலைப் பழி தன் மீதே விழுந்துவிட்டதையும், தன் மகள் அநாதையாகிவிட்டதையும் அறிகிறான். இந்த தனிமைச் சிறை தனக்கு யாரோ அளிக்கும் தண்டனை என்பது மட்டும் அவனுக்குத் தெரிகிறது. தன் மேல் யாருக்கெல்லாம் பகையிருக்கிறது என்று அவன் ஒரு பட்டியல் தயாரிக்கிறான். தப்பித்து வெளியேறியதும் அந்த ஆளைத் தேடிக் கண்டுபிடித்து, துண்டு துண்டாக வெட்டவேண்டும் என்கிற பழியுணர்ச்சியை நினைத்தபடியே அவன் ஒவ்வொரு நொடியும் வாழ்கிறான்.

15 ஆண்டுகளுக்குப் பிறகு, திடீரென்று ஒருநாள் அவன் விடுவிக்கப்படுகிறான். அவனுக்கு நிறைய பணமும் செல்போனும் கொடுக்கப்படுகிறது. தனது மகளை ஒருபுறம் தேடி, அவள் வெளிநாடு சென்றுவிட்டதாக அறிகிறான். மறுபுறம் பழிதீர்ப்பதற்காகத் தனது எதிரியைத் தேடுகிறான். இதற்கிடையில் ஒரு இளம்பெண்ணைச் சந்திக்கிறான். அவள் அவனுக்கு உதவுகிறாள். இருவருக்குள்ளும் இயல்பான ஒரு நெருக்கமும் உறவும் ஏற்படுகிறது. இறுதியில் அவன் தான் தேடும் எதிரி யார் என்பதையும், என்ன காரணத்திற்காக அவன் தன்னை அடைத்துவைத்தான் என்பதையும் கண்டறியும் போது, ஒரு பேரதிர்ச்சி அவனுக்குக் காத்திருக்கிறது. உண்மையில் அவனை 15 ஆண்டுகள் அடைத்துவைத்தது பெரும் தண்டனை அல்ல, வெளியில் விட்ட பிறகுதான் உச்சகட்டமான தண்டனை அளிக்கப்பட்டிருக்கிறது.

அவன் இளமையில் ஒரு பள்ளியிலிருந்து மாற்றலாகி வேறு ஊருக்குச் செல்வதற்கு முன்னால், அங்கு படிக்கும் ஒரு பெண்ணுக்கும் அவளுடைய தம்பிக்கும் இடையே வரம்புமீறிய உறவு இருப்பதைக் கண்டறிகிறான். ஊரைவிட்டுப் புறப்படும்போது அந்த ரகசியத்தை ஒரே ஒருவனிடம் மட்டும் சொல்கிறான். அதன் பிறகு அது ஒரு காட்டுத் தீ போலப் பரவுகிறது, பல வதந்திகளைக் கிளை பரப்புகிறது, அவள் தன் சொந்த சகோதரன் மூலம் கர்ப்பமாகிவிட்டதாகப் பள்ளியில் எல்லாரும் பேசுகிறார்கள். அதை அந்தப் பெண்ணே நம்ப ஆரம்பித்து, அவள் வயிறு வீங்க



ஆரம்பிக்கிறது. அவன் போகிறபோக்கில் சொன்ன ஒரு சொல் அவளைக் கர்ப்பமாக்கிவிட்டது. அவள் தற்கொலை செய்துகொள்கிறாள். ஆனால் இது எதுவுமே தெரியாமல் அவன் வேறு ஊரில் படித்து வளர்ந்தான். இறந்த பெண்ணின் சகோதரன்தான் அவனை இப்போது பழிவாங்கியிருக்கிறான்.

அவனை அடைத்துவைத்தது மட்டுமல்ல, அவனுடைய மகளை வளர்த்ததும் எதிரிதான். அவன் வெளியில் வந்தபின்பு சந்தித்து உறவுகொண்ட அந்த இளம்பெண் உண்மையில் அவனுடைய சொந்த மகளேதான். இத்தனை ஆண்டுகளாக எதிரி அவளுக்கும் அவ்னுக்கும் தனித்தனியே ஹிப்னோடிஸம் செய்யவைத்து, அவர்களுக்குள் திட்டமிட்டு காதல் ஏற்படும்படிச் செய்திருக்கிறான். எதிரியைப் பழிவாங்க வந்த நாயகன், இந்த உண்மை தெரிந்தபின்பு அவனிடமே மண்டியிட்டுக் கெஞ்சுகிறான், இந்த உண்மை தன் மகளுக்குத் தெரியக்கூடாது என்று வேண்டுகிறான். தான் சொல்லிய சொல்லே எல்லாவற்றுக்கும் காரணம் என்பதனால் தன் நாக்கையே அறுத்துக்கொள்கிறான். அதன்பின் எதிரி அவன் மகளுக்கு உண்மை தெரிவதைத் தடுத்துவிடுகிறான். அதன் பிறகு நாயகன் தனக்குத் தானே ஹிப்னோடிஸம் செய்யவைத்து, உண்மையை அறிந்த தன்னுடைய ஒரு பாகத்தை அழித்துவிட்டு, ஏதும் தெரியாதவனாக அந்த இளம்பெண்ணுடன் வாழ ஆரம்பிக்கிறான் என்பதோடு படம் நிறைவடைகிறது.

இந்த முடிவு எப்போதும் என்னை அச்சத்தில் ஆழ்த்துவதாகவும், ஏற்றுக் கொள்ள முடியாததாகவுமே இருக்கிறது. இரத்த உறவே ஆனாலும் அது வெறுமொரு நினைவுதான், நம்மைத் தடுப்பது கலாசாரம் உருவாக்கிய கற்பிதங்கள்தான், அதை எளிதில் தாண்டிச் சென்றுவிடமுடியும், பந்தங்களை உருமாற்றிக்கொள்ள முடியும் என்று இந்தப் படம் சொல்கிறது. அந்த குரூர யதார்த்தம் நம்மை செவிட்டில் அறைந்து உலுக்குகிறது. (ரோமன் பொலன்ஸ்கி-யின் "சைனா டவுன்" படத்திலும் இதையே நான் உணர்ந்தேன்) உறவுகளுக்கு எந்த அர்த்தமும் இல்லை என்றானால் நம்முடைய வாழ்வும் அர்த்தமிழந்து போய்விடுமல்லவா? கதையைத் தாண்டி, இயக்குநரின் கலைநேர்த்தியும் புதுமையான அணுகுமுறைகளும் இந்தப் படத்தை, எனக்கு எப்போதும் பிடித்த படங்களில் ஒன்றாக வைத்திருக்கிறது.


(தொடரும்)

## வாடிகன் "பாபா"



போப்பாண்டவரின் வாடிகன் நகரில் பேச்சு வழக்கிற்கு இத்தாலி மொழியையும், சடங்குகளுக்கு லத்தீன் மொழியையும், வெளிநாடுகளுக்கு கடிதம் எழுத, பிரெஞ்ச் மொழியையும் பயன்படுத்துகின்றனர். போப்பாண்டவ்ரை சுருக்கமாக, "போப்" என்கிறோம். போப் என்பது, "பாபா" என்ற லத்தீன் மொழியிலிருந்து உருவானது. இதற்கு, "தந்தை" என்று பொருள்.

## எந்த மதம் உயர்ந்தது?



சீனப் பேரரசர் தைமூர் தன் அமைச்சர் லு-சின்னிடம், "நம் நாட்டில் புத்த மதம், தாவோ மதம், கன்பூஷியஸ் மதம் என்று மூன்று மதங்கள் உள்ளன. இவற்றில் எது சிறந்தது?" என்று கேட்டார்.

"அரசே, புத்த மதம் பொன் போன்றது. தாவோ மதம் வெள்ளி போன்றது. கன்பூஷிய மதம், தானியம் போன்றது." என்றார் அமைச்சர்.

"அப்படியானால் கன்பூஷிய மதம் மிகவும் தாழ்ந்தது என்கிறாயா?" என்று கேட்டார் அரசர்.

"அரசே.. பொன்னும் வெள்ளியும் கிடைப்பதற்கு அரியவை. விலைமதிப்புள்ளவை. ஆனால் அவை இரண்டும் இல்லாமல் கூட மனிதனால் வாழமுடியும். ஆனால் தானியங்கள் இல்லாமல் மனிதனால் ஒரு நாளாவது உயிர் வாழமுடியுமா?" என்று கேட்டார் அமைச்சர்.

"அருமையான விளக்கம்..." என்று அமைச்சரை அரசர் பாராட்டினார்.

# நவீன ஸ்மார்ட் தொலைக்காட்சியை அறிமுகப்படுத்தியது LG




இலத்திரனியல் உற்பத்தியில் முன்னணி வகிக்கும் நிறுவனங்களில் ஒன்றான LG ஆனது MT93 IPS எனும் 27 அங்குல அளவுடைய ஸ்மார்ட் தொலைக்காட்சிகளை அறிமுகப்படுத்தியுள்ளது. 3D காட்சி மற்றும் Magic Remote ஆகிய தொழில்நுட்பங்களை உள்ளடக்கிய குறித்த தொலைக்காட்சியில் பிரபல சமூகவலைத்தளமான பேஸ்புக், Netflix மற்றும் Hulu Plus போன்ற சேவைகளையும் பெற முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் இதன் HD திரையானது 1920 x 1080 Pixel Resolution உடையதாகக் காணப்படுவதோடு இத்தொலைக்காட்சியானது வயர்லெஸ் தொழில்நுட்பத்தினையும் கொண்டுள்ளதாக: வடிவமைக்கப்பட்டுள்ளது.

# கணனியிலிருந்து தவறிய கோப்புக்களை சுலபமாக மீட்பதற்கு...



கணனியில் சேமிக்கப்பட்டுள்ள முக்கியமான கோப்புக்கள் தவறுதலாக அழிந்து விடுவதனால் சங்கடங்களுக்கு உள்ளாக வேண்டிய நிலையை எதிர்நோக்க வேண்டியிருக்கும். எனினும் இவ்வாறான சந்தர்ப்பங்களில் கைகொடுப்பதற்காக பல்வேறு Recovery மென்பொருட்கள் காணப்படுகின்றன. இவற்றில் சொற்ப அளவே இலவசமாகக் கிடைக்கக் கூடியதாக இருப்பதுடன் அவ்வாறு இலவசமாகக் கிடைக்கும் மென்பொருட்கள் துல்லியமாக கோப்புக்களை மீட்டுத்தரும் என்பதற்கு எந்த விதமான உத்தரவாதமும் இல்லை. ஆனால் uFlysoftஇக் குறைபாடுகளை நிவர்த்தி செய்கின்றதுடன்; jpeg, png, gif, bmp, tiff, psd,tga, eps போன்ற ஏராளமான புகைப்படக் கோப்பு வகைகள் உட்பட avi, flv, mp4, mov, wmv, 3pg, mpg போன்ற வீடியோ கோப்புக்கள் மற்றும் mp3, wma, wav, ogg, flac போன்ற ஓடியோக் கோப்புக்களையும் துல்லியமாக மீட்டுத்தருகின்றது.




# Facebook வழங்கும் புதிய News Feed வசதியை பெறுவதற்கு...



சமூக வலைத்தளங்கள் தங்களுக்குள் இருக்கும் போட்டியால் பயனர்களை கவர புதிய வசதிகளை அவ்வப்போது வழங்கி வருகின்றன. கூகுள் பிளஸ் சமீபத்தில் புதிய கவர் போட்டோ வெளியிட்டது. அதே போல கடந்தவாரம் பேஸ்புக் புதிய News Feed-ஐ வெளியிட்டுள்ளது. இது விரைவில் அனைத்து பயனர்களுக்கும் கிடைக்கப் போகிறது. அனைவருக்கும் கிடைக்கும் முன்பே நீங்கள் இதைப் பயன்படுத்த விரும்பினால் Newsfeed என்ற இணைப்பில் சென்று "Join Waiting List" என்பதை கிளிக் செய்யுங்கள். இதன் மூலம் உங்களுக்கு இந்த வசதி எப்போது கிடைக்கும் என்று உறுதியாய் சொல்ல முடியாது, ஆனால் விரைவில் கிடைக்க வாய்ப்புள்ளது


# கூகுளின் ரீடர் சேவை விரைவில் முடிவுக்கு வருகின்றது...



தேடுபொறி மூலம் தனது பயணத்தை தொடங்கிய கூகுள் நிறுவனம் இதுவரை பல்வேறு வசதிகளை தந்துள்ளது. மேலும் பல நிறுவனங்களையும் கையகப்படுத்தியுள்ளது. கூகுள் தனது சேவைகளில் சிலவற்றை அவ்வப்போது "Spring Cleaning" என்ற பெயரில் நிறுத்திவிடும். கடந்த வருடம் கூட Google Talk Chatback, iGoogle, Google Video போன்றவற்றை நிறுத்தப்போவதாக அறிவித்தது. தற்போது மேலும் சில வசதிகளை நிறுத்தப் போவதாக அறிவித்துள்ளது. அதில் முக்கியமான ஒன்று கூகுள் ரீடர் (Google Reader).

கடந்த 2005ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட கூகுள் ரீடர் நமக்கு விருப்பமான தளங்களை ஒரே இடத்தில் படிப்பதற்கு பயன்படுகிறது. கூகுள் ரீடரை அதிகமானவர்கள் பயன்படுத்தியிருந்தாலும், அதன் பயன்பாடு கடந்த சில வருடங்களாகவே குறைந்துவிட்டது என்றும், அதனால் அதனை மூடப்போவதாகவும் கூகுள் தெரிவித்துள்ளது. வரும் யூலை ஒன்று முதல் கூகுள் ரீடர் இயங்காது. கூகுள் ரீடரில் உள்ள தகவல்களை தரவிறக்கம் செய்துகொள்ள Google Reader என்ற முகவரிக்கு செல்லவும். கூகுள் ரீடருடன் சேர்த்து Apps Script, Google Building Maker, Google Cloud Connect, Google Voice App for Blackberry, Snapseed Desktop for Macintosh and Windows மற்றும் இன்னும் சில சேவைகளை மூடப்போவதாக கூகுள் அறிவித்துள்ளது.

# PDF கோப்புக்களை பிரித்து இணைப்பதற்கு...



பைல்களைச் சிக்கலின்றி பிறர் அறிந்து கொள்ளும் முறையில் அமைக்க பி.டி.எப். போர்மட்டில் அமைந்துள்ள பைல்கள் உதவுகின்றன. எழுத்து வகைகள் இல்லாதபோது, எந்த வகை சிஸ்டத்திலும் இயக்கிப் படிக்க இவை உதவுகின்றன. போர்ட்டபிள் டொகுமெண்ட் பைல் என அழைக்கப்படும் இவை கம்ப்யூட்டர் பயனாளர்கள் அனைவரும் விரும்பும் ஒரு வகை ஆகும். சில வேளைகளில் நாம் ஒன்றுக்கு மேற்பட்ட பி.டி.எப். பைல்களை இணைக்க விரும்புவோம். அல்லது ஒவ்வொரு பைலில் இருந்தும் சில பகுதிகளை எடுத்து புதிய பைலாக அமைக்க விரும்புவோம். இதற்கு நமக்கு அதன் சோர்ஸ் எனப்படும் மூல பைல் தேவைப்படும். அவை இல்லாத போது, பிரிவுகளை இணைக்க இயலாமல், ஒவ்வொன்றையும் புதிய பைல் போன்று டைப் செய்திட முயற்சிப்போம். இந்தச் சிக்கலைத் தீர்க்க GiosPSM என்னும் புரோகிராம் நமக்கு உதவுகிறது.

GiosPSM (GiosPdf Splitter and Merger) என்பது. பி.டி.எப். பைல்களைக் கையாள ஓப்பன் சோர்ஸ் முறையில் அமைக்கப்பட்ட புரோகிராம் இது. இது 145 கேபி அளவிலான சிறிய எக்ஸிகியூட்டபிள் பைல். போர்ட்டபிள் வகையாக இதனைப் பயன்படுத்தலாம். இந்த புரோகிராமினை இயக்கிவிட்டு, பி.டி.எப். பைல்களை ட்ராக் அண்ட் ட்ரொப் முறையில், இழுத்துச் சென்று இந்த புரோகிராமின் லிஸ்ட்டில் விட்டுவிடலாம். எத்தனை பி.டி.எப். பைல்களை வேண்டுமானாலும், மொத்தமாகப் பட்டியலிட்டு இணைத்து ஒரு பைலாக மாற்றலாம். குறிப்பிட்ட பக்கங்களை மட்டும் ஒவ்வொரு பைலிலும் தேர்ந்தெடுத்து இணைக்க விரும்பினாலும், இந்த புரோகிராம் அதற்கான வழிகளைத் தருகிறது.

இதனை இலவசமாக டவுண்லோட் செய்திட http://www.paologios.com/products/?type=bin என்ற முகவரியில் உள்ள தளத்திற்குச் செல்லவும்.

இதேபோல இன்னொரு பைலும் நமக்கு இணையத்தில் கிடைக்கிறது. அதன் பெயர் Adolix Split and Merge PDF: பி.டி.எப். பைல்களை இணைக்கவும் பிரிக்கவும் இந்த பைல் உதவுகிறது. இதன் இயக்க எளிமை அனைவருக்கும் பிடித்திருக்கிறது. இதனை http://www.adolix.com/ என்ற தளத்தில் பெறலாம்.


# விண்டோஸில் File Extension - களை மாற்றுவது எப்படி?

சில நேரங்களில் நமக்கு நாம் பயன்படுத்தும் ஒரு குறிப்பிட்ட File ஒன்றின் Extension -ஐ மாற்ற வேண்டி வரும். உதாரணமாக ஜிமெயிலில் நம்மால் .exe போன்ற File களை இணைத்து மின்னஞ்சல் செய்ய முடியாது. அப்போது Extension -ஐ மாற்றி நாம் மின்னஞ்சலில் Attach செய்ய முடியும்.


இதே போல பல சமயங்களில் File Extension மாற்ற வேண்டி வரும். எப்படி மாற்றுவது என்று பார்ப்போம்.

**Windows XP Users:**

1. ஏதேனும் ஒரு Folder ஒன்றை ஓபன் செய்து கொள்ளுங்கள். இப்போது Menu வில் Tools என்பதை கிளிக் செய்து Folder Options என்பதை கிளிக் செய்யுங்கள்.





2. இப்போது வரும் சிறிய விண்டோவில் View Tab - இல் Hide Extensions For Known File Types என்பதை Uncheck செய்து விடுங்கள்.




ஏற்கனவே Uncheck ஆகி இருந்தால் அப்படியே விட்டு விடுங்கள்.

3. இப்போது குறிப்பிட்ட File ஐ Rename செய்யும் போது Extension என்ன உள்ளதோ அதை உங்கள் விருப்பத்திற்கு மாற்றிக் கொள்ளுங்கள்.





**Windows 7 Users:**

Organize>> Folder and Search options>> View( in the pop up window) இதில் Hide Extensions For Known File Types என்பதை Uncheck செய்ய வேண்டும்.

**Windows 8 Users:**

View >> File Name Extensions என்பதை Check செய்ய வேண்டும். கவனிக்க இதில் Enable செய்ய வேண்டும்.



அவ்வளவே. இதே போல எந்த File க்கு வேண்டும் என்றாலும் மாற்றலாம். தேவைப்படும் போது மீண்டும் ஒரிஜினல் Format இற்கு மாற்றிக் கொள்ளலாம்.

தெரியும் File Extension ஐ மறைக்க மேலே சொல்லி உள்ளபடி வந்து இப்போது முன்பு இருந்ததை போல மாற்றி விட வேண்டும்.

# வடக்கில் ஆசிரியர் வெற்றிடம் நிரப்ப நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண பாடசாலைகளில் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், தகவல் தொழில்நுட்பம் ஆகிய பாடங்களுக்கு ஆசிரியர்கள் பற்றாக்குறையாக உள்ளதாகவும், இதில் வன்னிப்பிரதேச பாடசாலைகளிலேயே அதிகளவான பற்றாக்குறை நிலவுவதனையும், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வடமாகாண ஆளுநரிடம் தெரியப்படுத்தியபோது, வழங்கப்படும் பட்டதாரிகள் நியமனங்களில் அவை பூரணப்படுத்தப்படும் என ஆளுநர் தெரிவித்ததாக சங்கத்தின் பொதுச் செயலாளர் அறியத்தந்துள்ளார்.

இது தவிர உயர்தர மற்றும் இடைநிலை வகுப்புகளில் தாய்மொழி கற்பிக்கும் ஆசிரியர்களுக்குப் பற்றாக்குறை இருப்பதனைச் சுட்டிக்காட்டி ஆரம்பக்கல்வி பட்டாதாரி ஆசிரியர் நியமனம் கிடைக்கப்பெற்றவர்களில் பெரும்பாலானவர்கள் தமிழ் சிறப்புப்பட்டங்களோடு விசேட சித்திகளையும் கொண்டுள்ளனர். அவர்களை நியமனபாட வகுதி மாற்றத்தின்மூலம் தமிழ் பாடத்துறைகளுக்குப் பயன்படுத்தலாம் என்ற ஆலோசனை ஏற்றுக்கொள்ளப்பட்டு, அத்துறைசார் ஆசிரியர்களுக்கு வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் திரு.சி.சத்தியசீலன் அவர்கள் நியமன பாடவகுதிகளை மாற்றிஅமைத்து தமிழ் மொழி கற்பிக்கும் ஆசிரியர்களின் பற்றாக்குறையினை நீக்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளார்.

பல்கலைக்கழகத்தில் தமிழ் சிறப்புப்பட்டம், தமிழ் விசேடசித்தி, தமிழ்முதுமாணிப் பட்டங்களைப் பெற்றவர்கள் நியமனபாடவகுதி மாற்றத்திற்காக தமது விண்ணப்பங்களை அமைச்சுச் செயலாளரிடம் கையளித்து தமது தமிழ்மொழிசார் நியமனத்தை உறுதிசெய்துகொள்ளுமாறு பொதுச் செயலாளர் கேட்டுள்ளார்.

அத்தோடு பற்றாக்குறையாக உள்ள ஏனைய பாடங்களுக்கான மாற்றொழுங்கினையும் கல்வி அமைச்சுச் செயலாளர் துரித கதியில் செய்யவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இதன் மூலம் பற்றாக்குறையாக உள்ள பாடஆசிரியர்களின் பரம்பல் சீர்செய்ய வாய்ப்புகள் உள்ளன எனவும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

## ஒரு லட்சம் பரிசு

(குருநகர்)

கடந்த செவ்வாய்கிழமை அதிஷ்டம்பார்க்கப்பட்ட அபிவிருத்தி அதிஸ்ட கணனி இலக்கம் 7574-1.47 ஒருலட்சம் ரூபா வெல்லப்பட்டுள்ளது.

யாழ். முகவர் கனகலிங்கம் திலகவதி ஊடாக விற்பனை செய்யப்பட்ட அதிஸ்டலாபச் சீட்டிற்கே மேற்படி பரிசுதொகை கிடைக்கப் பெற்றுள்ளது.

(68)

# ஜனசக்தி மோட்டார் கிளினிக்முகாம் யாழ். மக்களுக்கு சிறந்த வாய்ப்பு




ஜனசக்தி இன்சூரன்ஸ் பி.எல்.சி. நிறுவனத்தின் மூலம் யாழ்ப்பாண பகுதியைச் சேர்ந்த வாகன உரிமையாளர்களுக்கு அனுகூலம் வழங்கும் வகையில் இலவச மோட்டார் கிளினிக் நிகழ்வு நேற்றும் நேற்று முன்தினமும் காலை 9 மணி முதல் மாலை 5 மணிவரை யாழ்ப்பாணம் மாநகர சபை பழைய வளாகத்தில் மிகவும் சிறப்புற இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் அனைத்து வாகனங்களினதும் கோளாறுகள் இலவசமாக பரிசோதனைகளின் மூலம் இனங்காணப்பட்டு, அவற்றின் நிலைமைகள் குறித்து வாகன உரிமையாளர்களுக்கு தரச் சான்றிதழ் வழங்கப்பட்டது.

இந்தப் பரிசோதனை நடவடிககைகளுக்காக ஜனசக்தி நிறுவனம் மோட்டார் வாகன் ஆய்வு மற்றும் பயிற்சி நிறுவனத்தின் அனுபவம் வாய்ந்த தொழில் நுட்பவியலாளர்கள் மற்றும் பொறியியலாள்கள் ஆகியோரை ஈடுபடுத்தியிருந்ததுடன், அவர்களின் ஆலோசனைகள் நேரடியாக வாகன உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தமை குறித்து ஜனசக்தி இன்சூரன்ஸ்பி.எல்.சி. நிறுவனத்தின்சிரேஷ்டவர்த்தக நாம முகாமையாளர் கௌஷலா அமரசேகர கருத்து தெரிவிக்கையில், "ஜனசக்தி நிறுவனத்தின் மூலம் நாம் ஏற்பாடு செய்யும் மூன்றாவது மோட்டார் கிளினிக் நிகழ்வாக இது அமைந்துள்ளது இதற்கு முன்னர் நாம் அனுராதபுரம்மற்றும் கண்டி ஆகிய பகுதிகளில் இந்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தோம். இந்த சேவையின் மூலம் எந்த நபரும் பயனடைய முடியும். இதற்காக பயனாளி ஒருவர் ஜனசக்தி நிறுவனத்தின் காப்புறுதியொன்றை கொண்டிருக்க வேண்டிய அவசியமில்லை. இந்தப் பரிசோதனை நடவடிக்கைகளை பிரத்தியேகமாகமேற்கொள்வதென்றால் சுமார் 10,000 ரூபா வரை செலவாகும். ஆயினும் நாம் சமூக பொறுப்புணர்வு நடவடிக்கையாக இலவலமாக வழங்குகிறோம். இதற்காக நாம். மோட்டார் வாகன ஆய்வு மற்றும் பயிற்சி நிறுவனத்துடன் உடன்படிக்கையை ஏற்படுத்தியுள்ளோம்" என்றார்.

யாழ்ப்பாண பகுதி தற்போது அபிவிருத்தியடைந்து வருகிறது. இதன் காரணமாகவே நாம். இந்தப் பகுதியை மோட்டார் கிளினிக் சேவைகளுககாக தெரிவு செய்திருந்தோம். என அவர் இதன்போது தெரிவித்திருந்தார்.

இந்த வாகன பரிசோதனைகளில் எஞ்சின் மற்றும் கியர் கட்டுப்பாட்டு அமைப்பு, எயார் கண்டிஷன் கட்டுப்பாட்டு அமைப்பு, பொடி மற்றும் ச்செரி பரிசோதனை. வாகன பெயின்ட் மற்றம் பொ(B)டியின் தரம், டயர் மற்றும் சஸ்பென்சன் அமைப்பு மற்றும் பற்றரி தரப்பரிசோதனை போன்ற பரிசோதனைகள் இலவசமாக மேற்கொள்ளப்பட்டன.

ஜனசக்தி நிறுவனத்தின் வாடிக்கையாளர்கள் அல்லாத எந்தவொரு வாகன உரிமையாளரும் இந்த வாகன பரிசோதனை முகாம் நிகழ்வில் பங்குபற்றி தமது வாகனங்களின் நிலை குறித்து அறிந்து கொள்வதற்கான வாய்ப்பாக அமைந்திருந்ததுடன் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற முதலாவது மோட்டார் கிளினிக் நிகழ்வு இதுவென்பது குறிப்பிடத்தக்கது. (பா,இ)



# பதிவிறக்கப் பெட்டகம்

எனக்கு முன்னால் நடக்காதே, என்னால் பின்பற்ற முடியாது. எனக்குப் பின்னால் நடக்காதே, என்னால் வழிநடத்த முடியாது. என்னுடன் நடந்து என் நண்பனாக மட்டும் இரு.
**– அல்பேர் காம்யூ**

வாழ்க்கை எவ்வளவு மலிவானதாக இருந்தாலும் அழகானதாகவே இருக்கிறது. **– ஜெயகாந்தன்**

யாரும் கேட்காத போதுதான் சிறந்த எண்ணங்கள் எனக்குத் தோன்றுகின்றன. **– ஸீக்ஃபரீட் லென்ஸ்**

ஒருவன் தன்னைப் பற்றி மிகையாக நினைத்துக் கொண்டிருப்பதாகப் பிறர் கருதக்கூடாது. **– பெர்டோல்ட் ப்ரெக்ட்**

எப்பவுமே முயற்சி என்பது, தெரிந்த வெளிச்சத்திலிருந்து தெரியாத இருட்டுக்குள் குதிக்கிற சங்கதிதான்.
**– ஸ்ரீலால் சுக்ல**

அறியாமை உள்ள மனிதன் தனக்குப் புரியாததை எல்லாம் பாராட்டிக் கொண்டிருப்பான். **– சீசர் லெம்ப்ரோசா**

சாவென்றால் எனக்குப் பயம் இல்லை. அது வரும்போது நான் அங்கே இருக்க விரும்பவில்லை, அவ்வளவுதான்.
**– வூடி அலன்**

நீங்கள் தேடுவது யாராக இருந்தாலும் அது நான் அல்ல.
**– பிரெக்ட்**

தோல்வி என்பது மேலும் புத்திசாலித்தனமாக நம் வேலையைத் துவக்குவதற்கான மற்றொரு வாய்ப்பு.
**– ஹென்றி ஃபோர்ட்**

புகைபிடிப்பது எடை குறைய உதவும்... ஒவ்வொரு நுரையீரலாக. **– மோர்கன்**

சிரித்தால் உலகம் கூட சிரிக்கும். குறட்டை விட்டால் தனியாகத்தான் தூங்க வேண்டும். **– வில்லியம்**

இந்தப் பிரபஞ்சத்தில் புத்திசாலியான உயிர்கள் இருக்கின்றன என்பதன் நிரூபணம், யாரும் நம்மை இதுவரை தொடர்பு கொள்ளவில்லை என்பதுதான். **– கேட்ஸ்**

தேவையான வயது வருமுன்னர் உங்கள் குழந்தைகளை வண்டியோட்ட அனுமதிக்காதீர்கள். இல்லையென்றால் அவர்களால் எப்போதுமே வண்டியோட்ட முடியாது. **– கான்ட்**

கோழைகள் சாதிக்கக்கூடிய ஒரே சாகசச் செயல் திருமணம் செய்துகொள்வதுதான். **– வோல்டேர்**

உன்னை அளவின்றிப் புகழுகிறவன் ஏற்கனவே உன்னை ஏமாற்றிவிட்டான் அல்லது இனி ஏமாற்றப்போகிறான்.
**– யரரோ**

இந்திய கிரிக்கெட் அணி தேர்வுக்குழுத் தலைவர் கிருஷ்ண மாச்சாரி ஸ்ரீகாந்த் பேசும் போது அவரது மூளை வேலை செய்வதை நிறுத்தி விடும். மூளை வேலை செய்யும் போது அவர் பேச மாட்டார். ஆனால் சிக்கல் அவர் பொதுவாக பேசுவதை நிறுத்தவே மாட்டார் என்பது. **– ஆர்.அபிலாஷ்**

கனிந்து, புகைந்து தீப்பிழம்புடன் சம்பந்தப்பட்ட ஒன்று வெடித்து முடிக்கும் வரை, குறிவைத்து செயல்படுகிறவர்களை நினைக்க எனக்கு கவலை அளிக்கிறது.
**– குண்டெர் கிராஸ்**

ஆயிரம் தெய்வங்களின் மீது நம்பிக்கை வைத்து, உன் மீது நம்பிக்கை வைக்காமற் போனால் உன்னைவிட நாத்திகன் உலகத்தில் வேறு யாருமில்லை. **– விவேகானந்தர்**

தன்னையே மறுக்கும் உரிமையை எனக்கு நல்கியதால் எனது ஆண்டவனிடம் நான் அன்பு செய்ய முடிகிறது.
**– புனுவல்**

நாயைப் பலரும் விரும்புவதற்குக் காரணம், அது தன் நாக்கை ஆட்டாமல் வாலை ஆட்டுவதுதான். **– இப்ஸன்**

உணர்ச்சி அரியணையில் அமர்ந்திருக்கும் போது அறிவு வெளியே போய் விடும். **– எம்.ஹென்றி**

கோபம் என்பது முட்டாள்தனத்தில் தொடங்கி வருத்தப்படுவதில் முடிகிறது. **– பிதாகொரஸ்**

# முஸ்லிம்களை சாக்கடைக்குள் தள்ளுவதா

## போர்க்கொடி தூக்குகிறது உலமாசபை



(கொழும்பு)

உள்நாட்டு மக்களுக்கு ஹறாமும், வெளிநாட்டினருக்கு ஹலாலும் என்ற உலமா சபையின் முடிவை வாபஸ் பெற அல்லது ஹலால் சான்றிதழ் வழங்குவதை முற்றாக நிறுத்த முடியாவிட்டால் தற்போதைய ஜம்இய்யத்துல் உலமா சபையின் நிர்வாகத்தினர் உடனடியாக ராஜினாமா செய்ய வேண்டும் என முஸ்லிம் மக்கள்கட்சி தலைவரும் கல்முனை ஜம்இய்யத்துல் உலமா சபை உப தலைவருமான முபாறக் மௌலவி கோரியுள்ளார்.

இது பற்றி அவர் தெரிவித்துள்ளதாவது,

இந்த நாட்டின் முஸ்லிம்களுக்கு இல்லாத ஹலால் சான்றிதழை வெளிநாடுகளுக்கு வழங்க வேண்டிய அவசியம் இல்லை. இதன் மூலம் ஜம்இய்யத்துல் உலமா பற்றிய தப்பபிப்பிராயமே தொடரும்.

ஜம்இய்யத்துல் உலமாவை கைவிட்ட அரசாங்கத்தின் வேண்டுதலுக்கு துணைபோக வேண்டிய தேவை உலமா சபைக்கு இல்லை. இந்நாட்டு முஸ்லிம்களை சாக்கடைக்குள் தள்ளிவிட்டு வெளிநாட்டினரை சுத்தப்படுத்தும் முயற்சியில் உலமா சபை இறங்கியுள்ளமை கவலைக்குரியதாகும்.

இத்தகைய செயற்பாடுகளால் முஸ்லிம் சமுகம் வெட்கித்து தலைகுனிந்த நிலையில் உள்ளது என்பதை ஜம்இய்யதுல் உலமாவின் அங்கத்தவன் என்ற வகையில் நாம் உரிமையுடன் வெளிக்காட்ட வேண்டியுள்ளது.

வெளிநாட்டு பொருட்களுக்கு இலவசமாக ஹலால் சான்றிதழ் வழங்கும் முறையானது ஜம்இய்யத்துல் உலமாவை அரசாங்கத்தின் ஆயுள் கைதியாகவே வைத்திருக்கும் நிலைக்கே இட்டுச்செல்லும். ஏற்கனவே ஜம்இய்யத்துல் உலமா அரசின் எடுப்பார் கைப்பிள்ளை என்ற நிலையில் உள்ளதான தோற்றமே உள்ளது.


இது இப்படியே போனால் நமது மூதாதையர்கள் பாடுபட்டு கட்டிக்காத்த உலமா சபையின் கௌரவம் முஸ்லிம்களிடம் இல்லாது போய்விடும் நிலை ஏற்படும்.

உலமாசபை அழுத்தம் மற்றும் நிர்ப்பந்தம் காரணமாக இந்த முடிவுக்கு வந்ததாக கூறப்படுவதை நம்மால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. மாறாக உலமா சபையின் தற்போதைய நிர்வாகிகளுக்கே அழுத்தங்கள் ஏற்பட்டுள்ளன என்பதே முக்கியமானதாகும். இந்த நிலையில் அவர்கள் தமது பதவிகளிலிருந்து ராஜினாமா செய்வதன் மூலம் இத்தகைய அழுத்தங்களிலிருந்து விலகிக்கொள்ள முடிவதோடு ஜம்இய்யத்துல் உலமாவையும் பாதுகாக்க முடியும்.

அதன் பின் நாடு பூராவுமுள்ள உலமா சபையின் பிராந்திய தலைவர்கள், செயலாளர்கள், உபதலைவர்களை அழைத்து ஜனநாயக முறையிலானதாய்ச் சபையின் புதிய நிர்வாகத்தை தெரிவு செய்து அவர்கள் ஹலால் முறையை மீண்டும் நமது நாட்டில் கொண்டு வர வேண்டும் அல்லது முற்றாக அதனை நிறுத்த வேண்டும் என கோருகின்றோம் என முபாறக் மௌலவி தெரிவித்துள்ளார்.

# மரக்கறிவிலை தெரியவேண்டுமா

## அழுத்துங்கள் தொலைபேசியை



(கொழும்பு)

மரக்கறிகளின் சில்லறை விலைகளை தொலைபேசிகள் மூலம் அறிந்து கொள்ளும் வசதிகளை கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சு ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. இதன்படி 1977 என்ற விசேட இலக்கங்களுக்கு அழைப்பை ஏற்படுத்துவதன் மூலம் மக்கள் இந்த சேவையைப் பெற்றுக் கொள்ள முடியும்.

நேற்றுமுன்தினம் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த சேவையின் மூலமாக நாட்டிலுள்ள சகல வியாபார நிலையங்களிலுமுள்ள மரக்கறிகளின் விலைகளை அறிந்து கொள்ள முடியும். இதன் மூலமாக கொள்முதல் மற்றும் விற்பனை விலைகளை 24 மணிநேரமும் பெற்றுக் கொள்ள முடியும்.

# சீதைக்கு ஆலயம்

## உதவுகிறது இந்தியா



இலங்கையில் மற்றுமொரு சீதைக்கான ஆலயத்தை நிர்மாணிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. த ஹிந்து பத்திரிகை இந்த செய்தியை வெளியிட்டுள்ளது. இராமாயணத்தில் கூறப்படும் சீதை அக்னி பரீட்சைக்கு உட்படுத்தப்பட்ட நுவரெலியா மாவட்டத்தில் இந்த ஆலயம் நிர்மாணிக்கப்படவுள்ளது.

இந்திய அரசாங்கம் இதற்கான உதவிகளை வழங்கவுள்ளது. எனினும் இந்தத் திட்டம் கடந்த வருடமே ஆலோசிக்கப்பட்ட போதும், அது நீண்டகாலம் கிடப்பில் இருந்தது. தற்போது மீண்டும் இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

# அந்த குழந்தையின் சொந்தங்கள் எங்கே?



(கொழும்பு)

அட்டாளைச்சேனை, 12ஆம் பிரிவு பம்பியடி வீதியில், பிறந்து ஒருநாள் கூட நிறைவடையாத பெண் குழந்தை ஒன்று வீதியில் வீசப்பட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளது. இந்தப் பெண் குழந்தை நேற்று முன்தினம் இரவு பிறந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அக்கரைப்பற்று பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து நேற்றுக் காலை 6.30 மணியளவில் குழந்தை மீட்கப்பட்டுள்ளது. குழந்தை தற்போது அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

# வடக்கில் காணி அபகரிப்பைத்தடுக்க

## சர்வதேச உதவி கோருகிறார் கூட்டமைப்பு எம்.பி



(வவுனியா)

வடக்கில் மும்முரமாக இடம் பெற்றுவரும் காணி சுவீகரிப்பையும் அத்துமீறல்களையும் தடுத்து நிறுத்துமாறு சர்வதேசத்திடம் முறையீடு செய்கிறார், கூட்டமைப்பின் எம்.பி.சிவசக்தி ஆனந்தன் இது தொடர்பாக அவர் நேற்றுமுன்தினம் ஊடகங்களுக்கு விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, யுத்தம் ஓய்வுக்கு வந்து நான்கு வருடங்களுக்குள் மீள்குடியேற்றம் செய்யப்படாது ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் உறவினர், நண்பர் வீடுகளில் தங்கியுள்ளனர்.

மீள்குடியேறியோருக்கான காணி அனுமதி முறையாக வழங்கப்படாமல் அவர்களது வதிவிடங்களைவிட்டு அகற்றும் நடவடிக்கைகள் வடக்கில் தொடர்ந்தும் இடம் பெற்று வருகின்றன.

அதன்படி, முல்லைத்தீவு மாவட்ட மருதிமேற்பற்று பிரதேச செயலாளர் பிரிவின் கீழுள்ள ஆறு கிராம அலுவலர் பிரிவுகளுக்குட்பட்ட 76 கிரர்மங்களை, வெலிஓயா பிரதேச செயலாளர் பிரிவுடன் இணைக்கும் நடவடிக்கைகள் தீவிரமாக முன்னெடுக்கப்படுகின்றன.

மீள்குடியேற்றம் அபிவிருத்தி மற்றும் பாதுகாப்புக்கான ஜனாதிபதியின் செயலணியின் செயலாளரால் பொது நிர்வாக அமைச்சின் செயலாளருக்கு அனுப்பப்பட்ட 05.02.2013 திகதிய கடிதத்தில்,

கொக்கிளாயில் 254 குடும்பங்களைச் சேர்ந்த 960 பேர் வசிப்பதாகவும் கரைத்துறைப்பற்றுக்குட்பட்ட இக்கிராமம் முல்லைத்தீவிலிருந்து 37 கிலோமீற்றருக்கு அப்பாலுள்ளதோடு உரிய கிராம சேவையாளர் வாரத்தில் ஒரு நாள் வந்து அலுவல வேலைகளை மேற்கொள்வதாகவும் அவர் ஒரு தமிழர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளதோடு, கொக்கிளாயிற்கு அருகில் சிங்களக் கிராமங்கள் பலவுள்ளதால் இங்கு மாற்றங்கள் செய்யப்படவேண்டியுள்ளதோடு, இதனை வெலிஓயா பிரதேச செயலாளர் பிரிவுடன் இணைத்து சிங்கள கிராம சேவையாளர் ஒருவரை பணிக்கமர்த்துவதற்கு ஏதுவாக விபரமாகப் பதில் அனுப்புமாறும் வெலிஓயா பிரதேச செயலாளர் கேட்கப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 'காவிய நாயகன்' திருப்பாடுகளின் நாடகம்

யாழ்.திருமறைக் கலாமன்றம் தயாரித்து வழங்கும் மாபெரும் அரங்க ஆற்றுகை நிகழ்வான 'காவிய நாயகன்' திருப்பாடுகளின் நாடகம் எதிர்வரும் 21ஆம் திகதி வியாழக்கிழமை முதல் 24ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை நான்கு நாட்களுக்கு 238, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக்கலாமன்ற அரங்கில் நடைபெறவுள்ளது.

தினமும் மாலை 6.45 மணிக்கு ஆரம்பமாகவுள்ள 'காவிய நாயகன்' நாடக ஆற்றுகை வெள்ளிக்கிழமை மட்டும் மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டுகளை போலவே பிரமாண்டமான அரங்க அமைப்பு, காட்சியமைப்பு, ஒலி - ஒளி போன்றவற்றுடன் அரங்கிலும், அரங்கப் பின்னணியிலுமாக இருநூறுக்கும் அதிகமான கலைஞர்கள் இவ்வாற்றுகையில் பங்கேற்கின்றார்கள்.

பல்லாயிரக்கணக்கான பார்வையாளர்களை ஈர்க்கின்ற படைப்பாக அமைகின்ற இவ்வாற்றுகைக்கான ஏற்பாடுகள் துரிதமாக இடம்பெற்று வருகின்றன. திருமறைக்கலாமன்ற இயக்குநர் நீ.மரியசேவியர் அடிகளாரின் எழுத்துருவில் உருவாகிய 'காவிய நாயகன்' ஆற்றுகைக்கான நெறியாள்கையை திருமறைக் கலாமன்றத்தின் பிரதி இயக்குநர் யோ.யோண்சன் ராஜ்குமார் மேற்கொண்டுள்ளார்.

"மனிதம்" என்ற தேடலுக்கு பதில் தரும் வகையில் இறைமகன் இயேசுவின் வாழ்க்கை அமைந்துள்ளது. அவர் வாழ்வின் ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும், கட்டத்தையும், சவாலையும் எவ்வாறு அணுகி மனிதத்தின் உச்சமாகவும், எடுத்துக்காட்டாகவும் விளங்கினார் 'என்பதைக் கூற முனைகின்றது. காவிய நாயகன் ஆற்றுகை.

நீ மரியசேவியர் அடிகள் தமிழ் மரபுக்குரியதான வகையில் முதன் முதலாக திருப்பாடுகளின் நாடகத்துக்குரிய எழுத்துருக்களை எழுதி 1963ஆம் ஆண்டிலிருந்து இப்படைப்புக்களை அரங்கேற்றி வருகின்றார்.

அவர் இப்பணியை ஆரம்பித்து இவ்வாண்டுடன் 50 ஆண்டுகள் நிறைவு பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (27)

## புதிய உப அஞ்சல் அலுவலகம் தாளையடியில் இன்று திறப்பு

வடமராட்சி தாளையடி உப அஞ்சல் அலுவலக புதிய கட்டடத் திறப்பு விழா இன்று காலை 10.00 மணிக்கு இடம் பெறவுள்ளது. பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் 7மில்லியன் ரூபா செலவில் சகல வசதிகளுடனும் அமைக்கப்பட்டுள்ளது.


அரச பொதுக்காணியில் அமைக்கப்பட்டுள்ள இந்தக் கட்டடத்தை பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா திறந்து வைக்கவுள்ளார். (70)

# க.பொ.த. (சாதாரணதர) மாணவர்களுக்கான அலகு ரீதியான குறிப்புகள்

## English

ஆசிரியர் : S.T. ஜனார்த்தனன் (B.sc)

From Forest to paper



**1) The Pictures show the process of making paper, Match the pictures with the process. Write the correct Number in the cage, One i done for you.**

a) Wood chips are usually cooked in a chemical solution inside a closed tank. The chemical mixture changes the wood chips into pulp. [ ]

b) Logs are debarked in a spinning drum. As the bark is removed the logs are cut into small sections. [ ]

c) A lumber company cuts trees into logs. The logs are taken to a mill. Where they will be made into paper. [ ]

d) The logs sections are cut into pieces or chips by chipping machine. [ ]

e) Water is squeezed out of the wood pulp. Then rollers dry and dress the pulp into their sheets of paper. [ ]

f) The wood pulp is washed. Unwanted material such as knots and cinders are screened out. [ ]

**02) Match the right word with their meaning on the left and write them in the boxes. Glossy /Elaborate / Controversial / Frugality / Legendry.**

a) Carefully worked out [ ]

b) Having various opinions [ ]

d) Extremely beautiful [ ]

c) Some Africans lived in a very thrift Situation [ ]

**03) The notice given is about a lost of brief case for which the details are seen**

> Lost Brown plastic brief case having three compartments and containing a text book ; exercise books notes and NIC card two pens red and blue. If found please contact S.M.James peter.
>
> 111, Bonjean Road, Colombo -13

a) Write a similar one for the wrist watch you lost in your school playground.

.....................................................................

.....................................................................

.....................................................................

.....................................................................

**04) Some headings of some forms are issued at the G.P.O for various uses are seen underneath. Read them and write down the correct number for the purpose stated.**

1. DEPARTMENT OF TELECOMMUNICATION T D / 1
   This form is for inland and indian telegram only
2. APPLICATION FOR INLAND TELEGRAPH MONEY ORDER P.O.C 0/3
3. APPLICATION FOR INLAND ORDINARY MONEY ORDER P.O.C /1
4. SRI LANKA TELEGRAPHS
   FOREIGN TELEGRAM
   PREFIX ...................... CODE..................................
5. APPLICATION FOR A LICENCE TO POSSESS AND OPERATE WIRELESS APPARATUS FOR THE PURPOSE OF BROADCAST IN AND FOR A TELEVISION STLISTENING.
6. APPLICATION FOR TRANSFER OF BROADCAST RECEIVING SET LICENCE

1. Mr. Shegar wants to send money urgently to his son at Peredeniya campus. Which form will he have to use?

2. Mohan bought a colour T.V. set which form will the post - master give him?

3. You want to send a telegram to Colombo. Write down the number of the form the post - master will give you?

4. You want to send a telegram to your brother in Paris. Which form will the Post master give you? Write down the number.

5. You have sold your Radio set to a friend which form will you use to transfer the licence?

**05) You want to go to the library with a friend of yours, In the absence of none at home. write a note to your mother for leaving. Include the following.**

:- The time of your departure. ........................................

:- With whom you are going. ........................................

:- Where and the time you would return home. ........................................

**06) a) Write in the oval shapes the word their refers, pertaining to science and technology**

1) A ship specially military one that can stay under water ( )

2) A system that allows people to send messages to each other thrugh compute. ( )

3) A scientific instrument that makes small things look bigger ( )

b) Who are these people connected with these things

1) Sewing ..........................................................

2) Crimes ..........................................................

3) Plants ..........................................................

### PART - II

**07) Read the following poem and answer the questions given below.**

The Town Child

I live in the town in a street
It is crowded with traffic and feet.
There are buses and motors, and trams
I wish there were meadows and lambs.
The houses all wait in a row
There is smoke everywhere
That I go
I don't like the noises I hear
I) wish there were woods in the poem, which rhyme.

a) Lambs b) row

II) What are vehicles mentioned in the first verse ..............................

III) Where does the child like to live? ..............................

IV) Write down the line in the poem. which says that there are lots of people in a town ..................................

V) Write down the two things that town child hate ..................................

08) Read the Passage and answer the question

our National flag is the Lion Flag. It has an emblem of an artistic lion on a red background. It has four colours. yellow, green and orange. The lion is holding a sword in its right paw and is facing the left to wards the flag pole. In the four corners of the flag there are four bo - leaves. The emblem of the lion is in yellow colour. There are two stripes of green and orange in the lion flag.

They are on the left of the flag. They mean the rights of the rights of the minority races in Sri Lanka. When the flag is hoisted in all state buildings on national days it reminds people of the spirit of the nation. It is one of the oldes flags ; in the world. There are rules regarding the use of the national flag laid down by the government. Every citizen of Sri Lanka must stand up in respect when the National flag is hoisted. So do the visitors to this country.

1) What do the stripes stand for?

..........................................................................................

2) When is the flag hoisted?

..........................................................................................

3) What should every citizen do, when it is hoisted?

..........................................................................................

4) Give a suitable title for this?

..........................................................................................

5) How do we respect the flag?

..........................................................................................

**09) Given below are same sentences, which show positive and negative aspect of tourism, insert A for positive, B for negative. in the boxes.**

a) Tourism is a big foreign exchange earner ☐

b) Children tend to imitate certain unsuitable behavior patterns of tourists ☐

c) Tourism promotes some things change the local cultural traditions to suit tourist needs ☐

d) Tourism promotes good understanding between countries. ☐

e) Tourist can have a damaging effect on our culture. ☐

**10) Under line the correct answer in the brackets. First one is not underlined.**

1) The establishment is re - opened (active, passive, complex)

2) I met my principal **while I was coming to school**
(Main sentence, clause, phrase)


3) He asked **whether my father is retired**
(Direct speech, reported speech, phrase)

4) Some of today's children **grow up** lazy and confused,
(adverbial clause, pharasal verb, Noun)

5) **Dishonest** children always have bad behavior (prefix, noun, suffix)

**11) Attend to any one of the Following**

a) Your are asked to give a speech in english to the students of year 9, 10 & 11 in your School. The Topic is 'Road Safety' write the speeh you would give.




Or

b) Write a short description of " my idea of peace in a country".

Some information about the :- Country and its people, Why peace is necessary to develop the country, How you hope to achieve, it the results you hope to again.

**My idea of peace in a country.**

It's pleasure for me to be at this community center today to speak few words about " my idea of peace in a country". Citizens upbringing of a country falls on their shoulders. If we want to prosper we must be united.

That unity will show the way to peace. As a matter of fact, if one community is against the other then there will be no progress. In such an atmosphere no man will take the leadership to work for the progress the country. Instead they will always try to find ways of looking after only their community. At present all the developed countries have gained tat position by hard work. If there is no peace can we get together and work "No" There will be all the time and the money have been spent for nothing.

Village is the best place to implement that lets forget our past and be honest and will work together by setting an example to the others. As the second step we can be united with the neighboring villages and it can be spread to town. As villagers we must help each other to fulfill their needs. For example ; during the harveresting period all the villagers can get together and help each other. When there are volunteers you need not spend for labour. The volunteers too will be bene fited by acting in way we live peacefully.

Finally I would like stay my idea of peace in a country is that all the people should be happy and be united.

Wishing Your Success. W'll mett again in the Spoken Classes on saturday & sunday 2002.

Thank you. Bala Master.

## மரக்கறி வகைகள் சிலவற்றின் ஆங்கில, சிங்களச் சொற்கள்

| தமிழில் | ஆங்கிலத்தில் | சிங்களத்தில் |
|---|---|---|
| பாகற்காய் | Bitter gourd | கரவில |
| கோவா | Cabbage | (G)கோவா |
| லீக்ஸ் | Leeks | லீக்ஸ் |
| கரட் | Carrot | கரட் |
| பீற்றூட் | Beetroot | பீற்றூட் |
| பூசணிக்காய் | Pumpkin | வட்ட(க்)கா |
| வெண்டிக்காய் | Ladies finger | பண்ட(க்)கா |
| புடலங்காய் | Snake gourd | ப(த்)தோல |
| பீர்க்கங்காய் | Ribbed gourd | வ(ட்)டகொளு |
| கத்தரிக்காய் | Brinjal | வம்(B)பட்டு |
| வாழைக்காய் | Green plantain | அளுகெசேல் |

## பழ வகைகள் சிலவற்றின் ஆங்கில, சிங்களச் சொற்கள்

| தமிழில் | ஆங்கிலத்தில் | சிங்களத்தில் |
|---|---|---|
| மாம்பழம் | Mngo fruit | அ(ம்)ப கெடி |
| பலாப்பழம் | Jack Fruit | வரகா |
| விளாம்பழம் | Woodapple | திவுள் |
| கொய்யாப்பழம் | Guava Fruit | பேர |
| றம்புட்டான் | Rambuttan | ற(ம்)புட்டான் |
| அன்னாசி | Pineapple | அன்னாசி |
| திராட்சை | Grapes | மிதி |
| தோடை | Orange | தொடம் |

# கல்லூரிகளுக்கு காலவரையற்ற விடுமுறை

## தமிழக அரசு அதிரடி நடவடிக்கை



இலங்கையின் போர்க்குற்றத்தினை மையமாகக் கொண்டு மாணவர்கள் நடத்தும் போராட்டத்தினை எதிர்க்கும் வகையில் தமிழக அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு காலவரையற்ற விடுமுறை அறிவித்துள்ளதாக ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

கடந்த ஒரு வாரத்திற்கும் மேலாக ஐ.நா.மனித உரிமை ஆணையத்தில் இலங்கையின் போர்க்குற்றம் குறித்து இந்தியா தனித் தீர்மானம் கொண்டுவர வேண்டும். உட்பட்டபல கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழகம் முழுவதும் உண்ணாவிரதம், போராட்டம், ஆர்ப்பாட்டம், கொடும்பாவி எரிப்பு உள்ளிட்டவற்றை மாணவர்கள் நடத்தி வருகின்றனர். சென்னை, மதுரை, நெல்லை, திருச்சி, கோவை உட்பட தமிழகம் முழுவதும் மாணவர்களின்

இந்தியச் செய்திகள்

போராட்டம் நாளுக்கு நாள் வலுப்பெற்று வருகின்றது. பல இடங்களில் உண்ணாவிரதம் இருந்து வரும் மாணவர்களின் உடல் நிலை பாதிக்கப்பட்டு வருவதால் பலர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு வருகின்றனர்.

மாணவர்களின் இந்த போராட்டத்திற்கு பல்வேறு அரசியல் கட்சிகள் மற்றும் நடிகர்களிடம் இருந்து ஆதரவு வழங்கப்பட்டு வருகின்றது. பல கல்லூரிகளில் நாளை தமிழகம் முழுவதும் உள்ள மாணவர்கள் வகுப்பு புறக்கணிப்புப் போராட்டத்தை நடத்தப்போவதாக தெரிவித்துள்ளதை தொடர்ந்து கல்லூரிகளை மூட தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

தமிழக அரசின் இந்தச் செயலால் எங்களது போராட்டத்தை ஒடுக்க முடியாது என்றும் எங்களது போராட்டம் தொடரும் எனவும் மாணவர்கள் அறிவித்துள்ளனர். அத்துடன் தமிழக அரசு அறிவித்த காலவரையற்ற விடுமுறையைக் கண்டித்து சென்னை எம்.சி.ராஜா விடுதி மாணவர்கள் உள்ளிருப்புப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

# சினிமாவில் நடிக்க திடீர் தடை



பரத் நடித்த யுவன் யுவதி என்ற படத்தில் நாயகியாக நடித்தவர் ரீமா கல்லிங்கல். அதன்பிறகு அவருக்கு தமிழில் புதிய படங்கள் புக்காகவில்லை. அதனால் மீண்டும் மலையாளத்தில் முழுவீச்சில் இறங்கிய ரீமா, தற்போது அங்கு முன்னணி நடிகையாகி விட்டார். கடந்த ஆண்டின் கேரள அரசின் சிறந்த நடிகைக்கான விருது வாங்கியிருக்கிறார். இதனால் அங்கு ரீமாவுக்கு நல்லதொரு கிராக்கி உருவாகியிருக்கிறது. இந்த நிலையில், படங்களில் நடித்துக்கொண்டே தொலைக்காட்சி நிகழ்ச்சியும் தொகுத்து வழங்கிவந்தார். ஆனால் சினிமா நடிகர் - நடிகைகள் யாரும் சின்னத்திரை நிகழ்ச்சிகளில் பங்கேற்கக்கூடாது என்று கேரள சினிமா வர்த்தக சபை சார்பில் கேட்டுக்கொள்ளப்பட்டதாம்.

அதையடுத்து, தொலைக்காட்சியில் முகம் காட்டி வந்த சினிமா நடிகர் - நடிகைகள் நிறுத்தி விட்டார்கள். ஆனால் ரீமா கல்லிங்கல் மட்டும் மிடுக்கி என்றொரு தொலைக்காட்சி நிகழ்ச்சியை தொடர்ந்து தொகுத்து வழங்கி வந்தார். இதனால் தற்போது ரீமா, சினிமாவில் நடிக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது. அதோடு, அவரை புதிய படங்களுக்கு யாரும் ஒப்பந்தம் செய்யக்கூடாது என்றும் மலையாள சினிமா வர்த்தக சபை அதிரடி உத்தரவு போட்டுள்ளது. இந்தத் தடை உத்தரவால் கடும் அதிர்ச்சியில் உறைந்து போயிருக்கிறார் ரீமா. அதோடு, சில முக்கியஸ்தர்களை சந்தித்து சினிமாவில் நடிக்க தனக்கு விதித்துள்ள தடையை விலக்கிக்கொள்ளுமாறும் கேட்டுக்கொண்டு வருகிறார் ரீமா கல்லிங்கல். ஆனால் பலமுறை எச்சரித்தும் ரீமா செவி சாய்க்காமல் சின்னத்திரை நிகழ்ச்சியை தொகுத்து வழங்கி வந்ததால், அவருக்கு உதவி செய்ய யாரும் முன்வர மறுக்கிறார்கள்.

# கடிகாரத்தின் மூலம் பெண்களை ஆபாசமாக படமெடுத்த டாக்டர்

இந்திய வம்சாவளியைச் சேர்ந்த டாவிண்டெர்ஜித் பெயின்ஸ்(வயது 45), இங்கிலாந்தின் ராயல் வூட்டன் பசெட என்ற சிறிய நகரத்தில் பொது மருத்துவராகப் பணிபுரிந்து வந்தார். கடந்த யூன் மாதம் இவரிடம் சிகிச்சைக்கு 19 வயதுடைய பெண் ஒருவர் வந்தார். டாகடரின் நடவடிக்கையில் சந்தேகம அடைந்த அப்பெண், தன்னிடம் பெயின்ஸ் தவறாக நடந்துகொண்டதாகவும், அதனைப்படம் பிடித்தது போல் தனக்குத் தோன்றியதாகவும் கூறி புகார் அளித்தார்.


இப்புகாரைத் தொடர்ந்து மார்க் கரீட் என்ற துப்பறியும் நிபுணர் இதனை ஆராய்ந்ததில், பெயின்ஸ் நடத்திய லீலைகள் வெளிச்சத்துக்கு வந்தன.

அப்போது, இவரிடம் வைத்தியம் பார்க்க வரும் 14 வயதிலிருந்து 51 வயதுடைய பெண் நோயாளிகளின் அந்தரங்கங்களை அவரது ஜேம்ஸ் பாண்டு ஸ்டைல் கைகடிகாரத்தில் உள்ள ரகசிய கமெராவின் மூலம் பதிவுபண்ணி வைத்திருந்த 361 வீடியோ கிளிப்புகள் அம்பலமானது. 2010 யூலை முதல் 2012 மே வரை டாக்டர் இது போன்று பதிவு செய்து வந்துள்ளார்.

# கிளாமருக்கு வர்ஷா ரெடி



பேராண்மை படத்தின் மூலம் அறிமுகமான நடிகை வர்ஷா, கிளாமராக நடிக்க தயாராக இருப்பதாக தெரிவித்துள்ளார். நடிகை வர்ஷா தனது பெயரை வர்ஷா அஸ்வதி.ஆர்.என்று மாற்றியிருக்கிறார். அவர் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில், நாகராஜசோழன் எம்.ஏ.எம்.எல்.ஏ.படத்தில் சிறு வேடங்களில் நடிக்கிறேன். சீனியரகளுடன் நடிப்பதால் வாய்ப்புக் குறையும் என்கிறார்கள். நான் அப்படி நினைக்கவில்லை. என்றென்றும் புன்னகை படத்தில் வினய் ஜோடியாக நடிக்கிறேன். பனி விழும் மலர் வனம் படத்தில் ஆக்ஷன் ஹீரோயின். 5 ஹீரோயின்களில் ஒருவராக அறிமுகமாகி இன்று தனி ஹீரோயினாக வளர்ந்திருக்கிறேன். நான் உத்தரபிரதேசத்தைச் சேர்ந்தவள் என்றாலும் தமிழ்நாட்டில் வளர்ந்தவள். கதைக்கு தேவைப்படும் பட்சத்தில் கிளமராகவும் நடிக்க தயாராக இருக்கிறேன், என்று கூறியுள்ளார்.




# மௌனம் பேசுமா?

(எசாயா 43 : 16 - 23)
(யோவான் 8 : 1 - 11)

மௌனத்தில் தான் மனச்சாட்சி நம்மோடு பேசுகிறது. மௌனத்தில் தான் மனச்சாட்சி நம்முடன் போராடுகிறது.. வார்த்தைக்கில்லாத வலிமை மௌனத்திற்கு இருக்கிறது. யோவான் நற்செய்தியில் வரும் சம்பவத்திலே மூன்று மௌனங்கள் எமது கருத்தை ஈர்க்கின்றன அந்த மௌனங்களைப் பற்றிச் சற்று சிந்தித்துப் பார்ப்போம்.

விபசாரத்தில் பிடிபட்ட பெண்ணின் மௌனம் அவமானத்தால் ஏற்பட்ட மௌனமா? அச்சத்தால் ஏற்பட்ட மௌனமா? குற்ற உணர்வால் ஏற்பட்ட மௌனமா? அல்லது இது எல்லாமே கலந்த மௌனமா? தன்னை மரணத்திற்கு இலக்காக்குவது மட்டுமல்ல தன்னைப்பாவித்து இயேசுவை அவமானத்திற்கும் கண்டனத்திற்கும் இலக்காக்கப்பார்க்கும் பரிசேயரின் கபட நாடகத்தைப் பாாத்து வேதனைப்படும் மௌனமா அந்தப் பெண்ணின் மௌனம்?

இயேசு மௌனம் சாதித்தது மட்டுமல்ல மௌனச் செயற்பாட்டொன்றிலும் ஈடுபடுகின்றார். தனது விரல்களினால் தரையில் எழுதுகின்றார். பெண் மீது விரலை நீட்டுபவர்கள் தங்கள் நெஞ்சு மீது அந்த விரலை நீட்டும்படியாகச் செய்யும் மௌனச் செயல் அல்லவா அது? நாம் அதே பாவம் எங்கள் நெஞ்சுக்குள் ஒளிந்திருப்பதை நாம் உணரவேண்டும். மற்றவர் தான் பாவி நான் இல்லை என்று தீர்ப்பிட எங்களுக்கு எந்த அருகதையுமில்லை என்பதை நாம் உணரவேண்டும். இயேசுவின் மௌனம் எங்கள் ஆன்மாவைச் சோதனைபோடும் மௌனம்.

உங்களில் குற்றமில்லாதவர் முதற்கல்லை எறியட்டும் என்ற இயேசுவின் வார்த்தையைக் கேட்ட பரிசேயர் மௌனம் சாதித்தார்கள், ஒவ்வொருவராய் கல்லைக் கீழே போட்டுவிட்டுக் கலைந்துபோனார்கள்.

நம்மை நாமே கண்டனம் செய்யும் மௌனமே மனச் சத்தியான மௌனம், பிறரைக் கண்டனம் செய்யாத மௌனம் உத்தமமான மௌனம்.

வி.பி.தனேந்திரா.

## வாழ்க வளமுடன்

தினமுரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்

பெயர் : தீ.சபிகேஷன்
முகவரி : மயிலங்காடு, சுன்னாகம்.

அகவை 3 இல்

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்



## வாழ்க வளமுடன்

தினமுரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்

பெயர் : சு.அபிவர்ஷினி (அபி)
முகவரி : நாவல் நகர், கல் மடுநகர், கிளிநொச்சி.

அகவை 5 இல்

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்



## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ..................................
முகவரி : ..................................
பிறந்த ஆண்டு : ..................................
கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும்

..................................
பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

# வளர்ந்த 10 நாடுகளில் இடம் பிடிக்க முடியாத கனடா




கடந்த 1990ஆம் ஆண்டு முதல், வளர்ந்த நாடுகளின் வரிசையில் பத்து இடங்களுக்குள் இருந்து வந்த கனடா இன்று பதினோராம் இடத்துக்கு இறங்கிவிட்டது என்று ஐ.நாவின் அறிக்கை தெரிவிக்கின்றது.சுகாதாரம், கல்வி, வருமானம் ஆகிய துறைகளில் கனடா 11ஆவது இடத்திலும், ஆண் பெண் பேதம் பார்ப்பதில் 18ஆவது இடத்திலும் உள்ளது என்று ஐ.நாவின் அறிக்கை குறிப்பிட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து ஐ.நாவின் மேம்பாட்டுத் திட்டம் தெற்கின் எழுச்சி என்ற தலைப்புடன் வெளியிட்ட ஆய்வறிக்கையில், உலக அளவில் தென்பகுதியிலுள்ள நாடுகளில் பொருளாதார எழுச்சியை விளக்கியுள்ளது. மேலும் ஐ.நா மேம்பாட்டுத் திட்டம் வளர்ந்துவரும் நாடுகளின் முக்கிய மூன்று அம்சங்களை தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

முதலாவதாக தென்பகுதியிலுள்ள நாடுகள் தங்களின் பொதுத் துறை மற்றும் தனியார் துறைகளுக்குத் தேவையான மேம்பாட்டுக் கொள்கைகளை வகுக்கும்பொழுது அவற்றின் பயன்பாடு மற்றும் செயற்பாடு குறித்து அதிகம் கவனம் செலுத்துகிறது. இரண்டாவதாக இந்தத் தெற்கு நாடுகள் உலகச் சந்தைக்கு பொருட்களை விற்பனைக்குக் கொண்டு வந்தன. மூன்றாவதாக சமூக நலத் திட்டங்களில் முதலீடு செய்கின்றன.எனவே தெற்கு நாடுகளின் பிரதிநிதிகளுக்கு இடமளிக்கும் வகையில் சர்வதேச நிறுவனங்கள் தனது விதிமுறைகளை மாற்றியமைக்க வேண்டும் என்று ஐ.நாவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## உலகச் செய்திகள்

# ரோமானியரின் குடியிருப்புகள் அகற்றல்




ரோமா இனத்தவருக்குப் புதுவாழ்வு தருவோம் என்று வாக்குறுதி அளித்து வெற்றிபெற்ற இடதுசாரி அரசு தற்பொழுது ரோமா குடியிருப்புகளை அகற்றுவதில் உறுதியாக இருக்கிறது என்று ரோமா மனித உரிமை அமைப்பைச் சேர்ந்த விக்டோரியா வேஸி தெரிவித்துள்ளார்.

இது குறித்து நேற்றுமுன்தினம் ஊடகத்திற்கு பேட்டியளித்த உள்துறை அமைச்சர் கூறுகையில், சுகாதார கேடு விளைவிப்பதால் ரோமா இனத்தவரின் 400இற்கும் மேற்பட்ட குடியிருப்புகள் அகற்றப்படுவது உறுதி என்றும், இதன் மூன்றில் இரண்டு பங்கு குடியிருப்புகள் பாரிஸைச் சுற்றி உள்ளது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் கூறுகையில், ரோமாவினரின் குடிசைகள் அகற்றப்பட்டாலும் அவர்களுக்கு வீடு மற்றும் வேலைவாய்ப்புக்கு ஆவன செய்யப்படும் என்றும் குழந்தைகளுக்குத் தேவையான கல்வி வசதிகள் செய்துதரப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

# மலை மீது பஸ் மோதியது; தென்னாபிரிக்காவில் 24பேர் பலி

தென்னாபிரிக்காவில் உள்ள கேப்டவுன் நகரில் இருந்து நேற்று முன்தினம் 60 பயணிகளை ஏற்றிக்கொண்டு இரட்டை மாடி பஸ் ஒன்று ஹெக்ஸ் ஆற்றங்கரை பகுதிக்கு சென்று கொணடிருந்தது.வளைவுகள் நிறைந்த குறுகலான மலைப்பாதையில் சென்ற போது "பிரேக்" செயலிழந்ததால், சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த பஸ், மலை மீது மோதி விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் 2 குழந்தைகள் உள்பட 24 பேர் சம்பவ இடத்திலேயே பலியாகினர். 30இற்கும் மேற்பட்ட பயணிகள் பலத்த காயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் பலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் இறந்தோர் எண்ணிக்கை அதிகரிக்கக் கூடும் என அஞ்சப்படுகிறது.





ரஷ்யாவிற்கு சென்ற பாலஸ்தீன அதிபர் மகமுத் அப்பாஸ், மாஸ்கோவில் ரஷ்ய பாரம்பரிய பாப்பரசரை சந்தித்துப் பேசினார்.


# காட்சிகள் அனைத்தையும் தலைகீழாக பார்க்கும் பெண்



சராசரி மனிதர்களின் விழித்திரைகளில் தெரியும் உருவம், தலைகீழாக தான் தோன்றும். அந்த உருவம், மூளைக்கு கொண்டு செல்லப்பட்டு மீண்டும் ஓர் தலைகீழ் மாற்றத்துடன் நேரிய உருவமாக நமது மனத்திரையில் பதிவாகிறது.

ஆனால், செர்பியா நாட்டைச் சேர்ந்த 28 வயதான போஜானா டேனிலோவிக் என்ற பெண்ணின் மூளையில் பதிவாகும் உருவப்பதிவுகளை தலைகீழாக மாற்றும் செயல்பாட்டில் குறைபாடு உள்ளதால், செய்தித் தாள், தொலைக்காட்சி, கணனி ஆகியவற்றை அவர் தலைகீழாக வைத்தே பார்க்க வேண்டியுள்ளது. பிறவியில் இருந்தே தனக்கு இந்தக் குறைபாடு உள்ளதாகவும், வீட்டில் குடும்பத்தினருக்கு ஒரு டி.வி.யும் தனக்கென்று தலைகீழாக பொருத்தப்பட்ட தனித் தொலைக்காட்சியும் இருப்பதாக கூறுகிறார், போஜானர் டேனிலோவிக்.

# பதவியேற்பு விழாவைக் காணும் செலவை தர்ம காரியங்களுக்கு செலவிடுங்கள்



உலகெங்கும் வாழும் ரோமன் கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் 266ஆவது தலைமை மதகுருவாக அர்ஜென்டினா நாட்டைச் சேர்ந்த போப் பிரான்சிஸ் தேர்வு செய்யப்பட்டுள்ளார். வரும் 19ஆம் திகதி புதிய போப்பாக அவர் பதவி ஏற்றுக்கொள்கிறார். தங்கள் நாட்டைச் சேர்ந்த மதகுரு போப்பாக பதவியேற்கும் இனிய நிகழ்வை நேரில் காண பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் ரோம் நகருக்கு செல்வதற்காக தயாராகி வருகின்றனர்.

இந்நிலையில், அர்ஜென்டினாவுக்கான வாடிகன் தூதரை சந்தித்த போப் பிரான்சிஸ், எனது பதவியேற்பு விழாவை நேரில் காண்பதற்காக ரோம் நகருக்கு வரும் பெரிய செலவை மக்கள் ஏற்றுக்கொள்ள வேண்டியதில்லை. இப்படிச்சொல்வதனால் அவர்களின் வருகையை நான் தடை செய்யவில்லை. ஆனால், இந்த பயணத்திற்காக ஆகும் செலவை ஏழைகளுக்கான உதவிகளை செய்து, தர்ம காரியங்களில் என் நாட்டு மக்கள் ஈடுபடுவதையே நான் பெரிதும் விரும்புகிறேன் எனத் தெரிவித்ததாக வாடிகன் அரண்மனையின் செய்தி தொடர்பாளர் பெடரிகோ லொம்பார்டி கூறியுள்ளார்.

# உப்புப் பொருட்களை விரும்பும் ஜேர்மனியர்

ஜேர்மனியர் ஒரு வருடத்துக்கு 32கிலோ சொக்லேட்டும், இனிப்புப் பொருட்கள் சாப்பிட்டு வந்த நிலை மாறி தற்பொழுது உப்பு பிஸ்கட்டுகளை அதிகம் விரும்புகின்றனர் என்று கேக் பிஸ்கட் தொழில் சங்கத்தின் தலைவர் டொய்மார் தெரிவித்துள்ளார்.மேலும் அவர் கூறுகையில், இவர்களின் சுவை மாறியதால் கடந்த வருடம் சொக்லேட் தொழில் 0.3 சதவிதம் சரிவைக் கண்டுள்ளது. இதனால் இங்கு இனிப்பு வகை, சொக்லேட், இனிப்பு பிஸ்கெட்டுகள் போன்றவற்றை விற்க இயலாது என்றும் இவற்றை வெளிநாட்டில் விற்க வழிதேடி வருவதாகவும் கூறியுள்ளார்.

ஆனால் இதிலும் பிரச்சினை இருப்பதாக அவர் கூறுகையில், இங்கு தயாரிக்கப்பட்டவற்றில் ஒரு பங்கு பொருட்களே அயல்நாட்டில் விற்பனை செய்யப்பட்டது. பின்னர் படிப்படியாக பாதிக்குப் பாதி அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்தபொழுது 1.68 மில்லியன் தொன் சொக்லேட் பொருட்கள் மட்டுமே ஏற்றுமதி ஆயிற்று என்றும் இது முந்தைய ஆண்டை விட 4 சதவிகிதம் குறைவாகும் எனவும் விளக்கிக் கூறினார்.

# சாவேசின் ஆட்சியை கவிழ்க்க அமெரிக்கா முயற்சி வெனிசுலா வெளியுறவு அமைச்சர் குற்றச்சாட்டு

மறைந்த அதிபர் ஹியூகோ சாவேஸ் ஆட்சியை கவிழ்க்க, அமெரிக்கா சதி செய்தது என, வெனிசுலா குற்றம் சாட்டியுள்ளது.தென் அமெரிக்க நாடான வெனிசுலாவின் அதிபராக இருந்த, ஹியூகோசாவேஸ், (வயது-58) புற்றுநோயால், கடந்தவாரம், மரணமடைந்தார். இதையடுத்து, அந்நாட்டின் இடைக்கால அதிபராக, நிகோலஸ் மடுரோ தேர்ந்தெடுக்கப்பட்டார்.கடந்த, 5ஆம் திகதி அதிபர் சாவேஸ் மறைந்த செய்தி அறிவிக்கப்படுவதற்கு சற்றுமுன்,வெனிசுலாவில் இருந்து, இரண்டு அமெரிக்க அதிகாரிகள், வெளியேற்றப்பட்டனர்.அதேபோல, சாவேசின் இறுதிச் சடங்கு நடைபெற்ற, 24 மணி நேரத்தில், நியூயோர்க்கில் உள்ள, தூதரகத்தில் பணிபுரிந்த, இரண்டு வெனிசுலா நாட்டு அதிகாரிகளை வெளியேற்றுவதாக, அமெரிக்கா அறிவித்தது.வெனிசுலா நாட்டின் வெளியுறவுத் துறை அமைச்சர் இலியாஸ் ஜாவா கூறியதாவது:

வெனிசுலா அதிகாரிகள் வெளியேற்றப்பட்டதை, அமெரிக்காவின் பதில் நடவடிக்கையாக கருத முடியாது.ஏனெனில், சாவேஸ் அரசை கவிழ்க்க, வெனிசுலா இராணுவ அதிகாரிகளை, அமெரிக்க தூதரக அதிகாரிகள் தொடர்பு கொள்ள முயன்றனர். இது போன்ற நடவடிக்கையில் எங்கள் நாட்டு தூதரக அதிகாரிகள் ஈடுபடவில்லை. என்றார். அமெரிக்காவுக்கு எதிரான கொள்கை கொண்ட, சாவேஸ் அதிபரான பின், 2010இல் இருந்து, இரு நாடுகளும், தூதர்களை நியமிக்கவில்லை என்பது, குறிப்பிடத்தக்கது.

# அரச உத்தியோகத்தர் நட்டஈடு விண்ணப்பிக்கும் காலம் நீடிப்பு

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட அரச உத்தியோகத்தர்கள் நட்ட ஈட்டினைப் பெறுவதற்கு விண்ணப்பிக்கும் கால எல்லை மேலும் நீடிக்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான அறிவித்தல் ஆட்கள், ஆதனங்கள், சொத்துகளின் இழப்பீட்டுக்கான அதிகார சபையினால் உரிய மாவட்டச் செயலகங்களுக்கு உத்தியோகபூர்வமாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும தெரிவித்தார்.

மேற்படி மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட அரச உத்தியோகத்தர்கள் நட்ட ஈட்டினைப் பெறுவதற்கு விண்ணப்பிக்கும் கால எல்லை கடந்த ஜனவரி 31 ஆம் திகதியுடன் முடிவடைந்திருந்தது.

எனினும் இந்தக் கால எல்லை நீடிக்கப்பட்டு கடந்த பெப்ரவரி 28 ஆம் திகதிவரை விண்ணப்பங்கள் கோரப்பட்டன. ஆனால், யுத்தம் மற்றும் மீள் குடியேற்றம் நடந்த இந்த மாவட்டங்களில் உரிய ஆவணங்களைப் பெற்றுக் கொள்வதில் ஏற்பட்ட சிரமங்களால், குறித்த காலப்பகுதியில் விண்ணப்பதாரிகள் தங்கள் விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்ய முடியாதிருப்பதாக பல உத்தியோகத்தர்களும் தம்மிடம் தெரிவித்ததை அடுத்து, புனர்வாழ்வு அமைச்சின் ஆட்கள், ஆதனங்கள், சொத்துகளின் இழப்பீட்டுக்கான அதிகார சபையுடன் தொடர்பு கொண்டு, மேலும் ஒரு மாத கால அவகாசத்தை நீடிக்குமாறு கேட்டுக் கொண்டதையடுத்து, மேலும் ஒரு மாதத்துககு கால நீடிப்புச் செய்யப்பட்டுள்ளது.

இதன்படி மார்ச் 31 ஆம் திகதிவரை நஷ்ட ஈட்டுக்காக விண்ணப்பிக்க முடியும் என்று சந்திரகுமார் எம்.பி. தெரிவித்துள்ளார். (29)

## அமெரிக்கத்...

வேண்டிய நாள் நெருங்கி வருகிறது. 21 ஆம் திகதி தீர்மானம் வாக்கெடுப்புக்கு வருவதால் அதற்கு முன் முடிவு எடுக்க வேண்டும் என்பதால் காங்கிரஸ் மேலிட குழு கூட்டம் டில்லியில் நேற்று அவசரமாகக் கூடியது. கூட்டத்தில் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, பிரதமர் மன்மோகன்சிங் மூத்த மத்திய அமைச்சர்கள் கலந்து கொண்டனர். வெளியுறவுத்துறை அமைச்சர் சல்மான் குர்ஷித் சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்டார்.

கூட்டத்தில் இந்தியாவுக்கு நெருக்கடி ஏற்படுத்தும் வெளிநாட்டு பிரச்சினைகள் குறித்தும் அமெரிக்க தீர்மானம் பற்றியும் ஆலோசிக்கப்பட்டது. அமெரிக்க தீர்மானத்தை ஆதரிக்க தமிழகத்தில் போராட்டம் வலுத்து வருவதால் சொந்த கட்சி மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கும் வகையில் அமெரிக்கத் தீர்மானத்தை இந்தியா ஆதரிப்பது என முடிவு எடுக்கப்பட்டதாக ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

## காணாமற்போன...

தெரிவித்தார். வவுனியா மாவட்ட ஊடகவியலாளர்களுடனான சந்திப்பொன்று வன்னிக் கட்டளைப் பீடமான ஜோசப் முகாமில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

'யுத்தத்தின்போது முல்லைத்தீவு முகாமில் சுமார் 1300 இராணுவத்தினர் காணாமல் போனார்கள். அவர்களது பெற்றோர்கள் கோவில்களுக்கும் பள்ளிகளுக்கும் விகாரைகளுக்கும் போய் தமது பிள்ளைகள் வருவார்கள் வருவார்கள் என வழிபட்டு வருகின்றார்கள். ஆனால் ஒரு வருடத்தின் பின்னர் அவர்கள் வராவிட்டால் இறந்து விட்டதாக கருதுகின்றார்கள்.

யுத்தம் இடம்பெறும்போது இராணுவத்தில் 6000 பேர் வரையில் இறந்தார்கள். அதுபோல் விடுதலைப் புலிகளிலும் தலைவர்கள் உட்பட பலர் இறந்திருக்கின்றார்கள். அவர்களை படம் பிடித்து காட்ட முடியவில்லை.

யுத்தத்தின்போது ஒரு இராணுவ சிப்பாய் இறந்துவிட்டால் அவருக்கு அருகில் இருக்கும் இராணுவ வீரருக்கு அவர் இறந்து விட்டாரா உயிருடன் இருக்கின்றாரா என்பதைக் கூற முடியாது. அதேபோல் விடுதலைப் புலிகளிலும் ஒரு போராளி இறந்துவிட்டால் அவர இறந்துவிட்டாரா இல்லையா என அதன் தலைவர்களுக்கே தெரியும்.

அந்த வகையிலேயே காணாமல் போனவர்கள் எந்த இராணுவ முகாமிலும் இல்லை என்பதை உறுதியாகக் கூற முடியும்.

அத்துடன் மனிதாபிமான இராணுவ நடவடிக்கையின் போது வடக்கில் 3 இலட்சம் மக்கள் வரையில் இடம்பெயர்ந்தார்கள். இவ்வாறு இடம்பெயர்ந்தவர்களை மீள்குடியேற்றவில்லை. அவர்களுக்கு தேவையான வசதிகளை மேற்கொள்ளவில்லை என வெளிநாடுகள் குற்றம் சுமத்தியிருந்தன. ஆனால் நாம் இடம்பெயர்ந்தவர்களை அவர்களது சொந்த இடங்களில் படிப்படியாக மீளக் குடியமர்த்தி வருகிறோம்.

இந்த மீள்குடியேற்றம் தாமதமாவதற்கு காரணமாக இருப்பது கண்ணிவெடிகள் என அவர் மேலும் தெரிவித்தார்.

## கடல்சார்...

பட்டுள்ளது. இருநாடுகளுக்கும் பொதுவான கடல்சார் விவகாரங்களுக்கு காத்திரமான தீர்வு காணும் வகையில், ஒத்துழைப்புகளைத் தரமுயர்த்துவது மற்றும் விரிவாக்குவது குறித்து கல்ந்துரையாடப்பட்டு இணக்கப்பாடு எட்டப்பட்டதாக ஜப்பானிய செய்தி நிறுவனமான கியோடோ தெரிவித்துள்ளது.

கிழக்கு சீனக்கடலில் உள்ள சென்காகு தீவின் இறைமை விவகாரத்தில், சீனாவுடன் முரண்பாடுகளைக் கொண்டுள்ள ஜப்பானுக்கு, இந்தியப் பெருங்கடல் பகுதியில் சீனாவின் ஊடுருவல் அதிகரித்து வருவது பிராந்தியத்தின் பொதுவான கவலையாக மாறியுள்ளது என்று ஜப்பானிய அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

இந்தியப் பெருங்கடலில் உறுதிநிலையை உறுதி செய்து கொள்வதில், இலங்கையும் ஜப்பானும் பொறுப்புகளைப் பகிர்ந்து கொள்வதாகவும் இருநாடுகளின் தலைவர்களும் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை, இலங்கைக்கு 426.2 மில்லியன் டொலரை கடன் அடிப்படையிலும், 28 மில்லியன் டொலரை கொடையாகவும் வழங்க ஜப்பான் இணங்கியுள்ளது.

ஜப்பானுக்கு நான்கு நாள் பயணத்தை மேற்கொண்டிருந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, அந்த நாட்டின் சக்கரவர்த்தி, பிரதமர், வெளிவிவகார அமைச்சர், பாதுகாப்பு அமைச்சர் என அனைத்து மட்டத் தலைவர்களையும் சந்தித்து விட்டு நேற்று அதிகாலை கொழும்பு திரும்பியுள்ளார்.




'டெசோ' சார்பில் இன்று ஒரு நாள் கடையடைப்பு, வேலை நிறுத்தமாம்! நல்லது! அப்படியே கலைஞர் டிவி, இசையருவி, சிரிப்பொலி, சித்திரம்...னு இவங்க சானல்கள் ஒளிபரப்பையும், வருமானத்தையும் ஒரு நாள் நிறுத்தி மற்ற வியாபாரிகளுக்கு முன் மாதிரியாக இருந்து காட்டலாமே..!

நன்றி - தினமணி

## நிரந்தர...

பி.பி.ஸியிடம் தெரிவித்துள்ளார். மேற்குலக நாடுகள் தங்களது நலன்களை மையமாகக் கொண்டே இந்த தீர்மானத்தை கொண்டு வருவதான ஒரு தோற்றப்பாடே இந்த தீர்மானம் குறித்து பெரும்பான்மை சிங்கள மக்கள் மத்தியில் உள்ளது. ஆனால் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் மத்தியில் இந்த தீர்மானம் ஒரு தீர்வுக்கு வழி செய்யுமானால் பரவாயில்லை என்ற நிலைப்பாடு காணப்படுகிறது.

இலங்கை அரசாங்கத்தை ஒரு சிங்கள அரசாங்கமாக பார்க்கின்ற தமிழ், முஸ்லிம் மக்கள், உள்ளூரில் ஒரு நிரந்தரமான தீர்வை அந்த அரசு தரவில்லை என்ற காரணத்தினால், இத்தகைய ஒரு வெளி அழுத்தம் ஒரு நியாயமான தீர்வுக்கு வழி செய்யுமாக இருந்தால் அதனை வரவேற்கத் தக்கதாகப் பார்க்கிறார்கள்.

அதேவேளை, இந்த ஜெனிவா நிகழ்வுகள் குறித்து சிங்கள மக்களுக்கும், சிறுபான்மையின மக்களுக்கும் இடையே இருக்கும் கருத்து வேறுபாடுகள் அங்கு ஏற்கனவே இருக்கின்ற இரு தரப்புக்கும் இடையிலான இடைவெளியை மேலும் அதிகரித்துவிடக்கூடாது.

குற்றச்செயல்களில் ஈடுபட்டவருக்கான தண்டனை என்பது அதில் சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினருக்குமான தண்டனை என்று இல்லாவிட்டால், அதுவும் மக்கள் மத்தியில் நிலைமையை மோசமாக்கி விடும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# தென்பகுதி வியாபாரிகளால் உள்ளூர் வியாபாரிகள் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)


தென்பகுதியிலிருந்து யாழ். நகரின் சில பகுதிகளில் மேற்கொள்ளப்படும் நடமாடும் மரக்கறி வியாபார நடவடிக்கைகளால் உள்ளூர் மரக்கறி வியாபாரிகள் பாதிக்கப்படுவதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாக தென்பகுதி வியாபாரிகளினால் யாழ். நகர் மற்றும் புறநகர்ப் பகுதிகளில் இவ்வாறு வாகனங்களில் மரக்கறிகள் உள்ளிட்ட பல்வேறு வகைப் பொருட்கள் எடுத்துவரப்பட்டு சந்திகளிலும் வீதியோரங்களிலும் வைத்து விற்பனை செய்யப்படுகின்றது.

இதனால் மரக்கறி விற்பனை செய்யும் கடைகள் மற்றும் பல சரக்குக் கடைகளுக்கு பாதிப்பு ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்படும் அதேவேளை விலைகளிலும் ஏற்றத்தாழ்வுகள் காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதன்காரணமாக எமது உள்ளூர் உற்பத்திப் பொருட்களின் நுகர்வு வீதமும் குறைந்துவருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே இந்த விடயத்தில் சம்பந்தப்பட்ட தரப்பினர் தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் உள்ளூர் வியாபாரிகளினால் கோரிக்கை முன்வைக்கப்பட்டிருக்கிறது. தற்சமயம் மரக்கறி மற்றும் உப உணவுப் பொருட்கள் என்பவற்றின் விலைகள் அதிகரித்த நிலையிலேயே காணப்படுகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. (பா)

# புத்தூர் கிழக்கில் வீடு கையளிப்பு



இராணுவத்தின் 511 ஆவது பிரிகேட்டின் 5 ஆவது படைப் பிரிவினரால் புத்தூர் கிழக்கு பகுதியில் நிர்மாணிக்கப்பட்ட வீடு நேற்று கையளிக்கப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை 11.00 மணிக்கு நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக யாழ். பாதுகாப்பு படைப்பிரிவின் கட்டளைத்தளபதி மகிந்த ஹத்துருசிங்க கலந்துகொண்டு வீட்டைக் கையளித்தார். 511 ஆவது பிரிகேட்டின் 5 ஆவது படைப்பிரிவினரால் 5 இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட இந்த வீடு ஒரு மாத காலத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் 511 ஆவது பிரிகேட்டின் தளபதி சந்தன குணவர்த்தன, 512 ஆவது பிரிகேட்டின் தளபதி பல்லேகல மற்றும் படையதிகாரிகள், கோப்பாய் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (02)

## இறுதி...

அறிக்கை நிறைவேற்றம் தொடர்பில் அரசாங்கம் திருப்தி அடைவதாகக் குறிப்பிட்டுள்ளார். அகில கால மீளாய்வு அறிக்கை சமர்ப்பிக்கப்படும் போது சிக்கல் நிலைமைகள் ஏற்படக்கூடுமென தெரிவிக்கப்பட்ட போதிலும், எவ்விதமான எதிர்புக்களும் இன்றி ஏகமனதாக அறிக்கை நிறைவேறறப்பட்டது என அவர் தெரிவித்துள்ளார்.

## மேற்குலக...

பல தசாப்தங்களாக நாட்டுக்குள் பிரவேசிக்காத பலர் தற்போது நாட்டுக்கு வருவதாகவும், சிலர் இங்கேயே தங்கிவிட விரும்புவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## தமிழகத்தில்...

7 பேர் உடல் நிலை கவலைக்கிடமாக உள்ளது. இதனால் அவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். 3 மாணவர்கள் 6 ஆவது நாளாக உண்ணாவிரதத்தை தொடர்ந்தும் மேற்கொண்டுள்ளனர். இவர்களுடன் மேலும் 8 மாணவர்கள் இணைந்திருக்கின்றனர்.

சென்னை நந்தனம் கல்லூரி மாணவர்கள் தொடர்ந்து 2 ஆவது நாளாக உண்ணாவிரதப் போராட்டத்தை தொடர்கின்றனர். நந்தன் கல்லூரிதான் சென்னை மாணவர்களுக்கு இப்போது மைய போராட்ட களமாக மாறி வருகிறது. உண்ணாவிரதம் இருக்கும் மாணவர்களுக்கு ஆதரவாக பல கல்லூரிகளைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான மாணவர்கள் இங்கு குவிந்துள்ளனர்.

திருச்சியிலும் பல்வேறு கல்லூரிகளைச் சேர்ந்த மாணவர்கள் தொடர்ந்து உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டு வருகின்றனர். கோயம்புத்தூரில் பொறியியல் மற்றும் மருத்துவ மாணவர்களும் ஈழத் தமிழருக்காக போராட்டக் களத்தில் குதித்துள்ளனர்.

இதேபோல் கோவையில் மாநகராட்சி பள்ளிக் கூட மாணவர்கள் சாலை மறியலில் ஈடுபட்டு கைதாகியிருக்கின்றனர். கோவை ஒண்டிப்புதூரில் ஈழத் தமிழருக்கு ஆதரவாக சாலை மறியல் போராட்டம் நடத்தியதற்காக 38 மாணவர்கள் கைது செய்யப்பட்டனர். கோவை ம.தி.மு.க. அலுவலகத்தில் 6 ஆவது நாளாக தொடர் உண்ணாவிரதம் இருந்து வரும் கோவை சட்டக் கல்லூரி மாணவர்களுக்கு ஆதரவாக சட்ட மாணவிகள் போராட்டத்தை நடத்தினர்.

திருநெல்வேலியில் சித்த மருத்துவ மாணவ, மாணவியர் ஒரு நாள் உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டனர். சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகம், கடலூர், விருதாசலம் மாணவர்களும் இந்தப் போராட்டத்தை தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றனர்.

# வெளிநாட்டு கண்காணிப்பாளர்களை இலங்கைக்கு அனுப்பவே பிரேரணை

## என்கிறார் அமைச்சர் ராஜித

(கொழும்பு)

அமெரிக்கா, ஐரோப்பிய் நாடுகள் என சில நாடுகள் இலங் கைக்கு எதிராக கொண்டு வரும் யோசனையின் நோக்கம், வெளிநாட்டு கண்காணிப்பாளர் களை இலங்கைக்குள் அனுப்பி வைப்பதற்காகவே என அமைச் சர் ராஜித சேனாரத்ன தெரிவித் துள்ளார்.

அதேவேளை சில மத்திய கிழக்கு நாடுகள் இந்த வாக் கெடுப்பில் எவ்வாறான நிலைப் பாடுகளை எடுக்கும் என்பதை உறுதியாகக் கூறமுடியாது. இம்முறை வாக்கெடுப்பு இலங் கைக்கு சாதகமாக அமையும் சந்தர்ப்பங்கள் குறைவாக இருப் பதாகவும் அமைச்சர் கூறி யுள்ளார்.

குறிப்பாக அமெரிக்கா போன்ற நாடுகள் இலங்கைக்கு சாதகமான நிலைமை இல்லாத நிலையில் இப்படியான யோச னையை கொண்டு வருவது பொருத்தமற்றது.

மத்திய கிழக்கை சேர்ந்த நாடுகள் சில இலங்கை தொட ர்பான அமெரிக்காவின் யோச னைதொடர்பில் காட்டிய மௌ னம் இலங்கைக்கு பாதகமாக அமைய வாய்ப்புள்ளது எனவும் அமைச்சர் மேலும் தெரிவித் துள்ளார்

இதேவேளை இலங்கைக்கு எதிரான ஜெனிவா மனித உரிமை பேரவையில் சமர்பிக்கப்பட உள்ள யோசனை தொடர்பாக அடுத்த வாரம் நடத்தப்பட உள்ள வாக்கெடுப்பில் இலங்கை தோல்வியடைந்தால், வெளி நாட்டு கண்காணிப்பாளர்கள்



குழு இலங்கைக்கு செல்வதை தடுக்க முடியாது என ராஜதந்திர தரப்புத் தகவல்கள் தெரிவிக் கின்றன.

வாக்கெடுப்பில் இலங்கை தோல்வியடைந்தால், வெளி நாட்டு கண்காணிப்பாளர்கள் இலங்கைக்குள் செல்வதற்கு சட்டரீதியான சந்தர்ப்பம் கிடைக் கும் எனவும் தெரியவருகிறது.

# மத்திய அரசில் தொடராது தி.மு.க. வெருட்டுகிறார் கருணாநிதி

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையில் அமெரிக்காவினால் கொண்டு வரப்படும் தீர்மானத்தில் இலங் கைக்கு எதிராக சர்வதேச விசா ரணை ஒன்று நடத்தப்பட வேண்டும் என்ற நிபந்தனையை இணைக்க இந்தியா உரிய நட வடிக்கைகளை எடுக்காவிட்டால், திராவிட முன்னேற்றக் கழகம், இந்திய மத்திய அரசில் தொட ராது என்று அதன் தலைவரான கலைஞர் மு.கருணாநிதி எச் சரித்துள்ளார்.

இது தொடர்பாக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள அவர் அதில் மேலும் கூறியுள்ள தாவது,

அமெரிக்கா கொண்டுவர விருக்கும் தீர்மானங்கள் குறித்து பல கருத்துக்கள் பரப்பப்படும் சூழலில், அந்தத் தீர்மானத்தில் இலங்கையில் அண்மைக் காலத்தில் நடைபெற்ற படு கொலை குறித்தும், அந்தப் படு கொலைக்கு காரணமான போர்க் குற்றவாளிகளை அடையாளம் காட்டுவது குறித்தும், அப்படி அடையாளம் காட்டப்படுபவர்கள்



மீது சுதந்திரமான சர்வதேச விசாரணை நடத்தி குறிப்பிட்ட காலவரையறைக்குள் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்ற திருத்தத்தை அமெரிக்க அரசின் தீர்மானத்தில் சேர்ப்பதற்கான முயற்சியினை எந்த அய்யப்பாட்டிற்கும் இடம் கொடுக்காத வகையில் இந்திய அரசு மேற்கொள்ள வேண்டு மென்று தி.மு.க.வின் சார்பில் வலியுறுத்துகின்றோம்.

அத்தகைய கோரிக்கை நிறைவேற்றப்படாத பட்சத்தில் தி.மு.க இந்திய அரசின் அமைச் சரவையிலே இனி மேலும் நீடிப் பதென்பது அர்த்தமற்றதாகி விடும் என்பதை உறுதிபடத் தெரிவித்துக் கொள்வதாக கரு ணாநிதி மேலும் கூறுகிறார்.

# மேற்குலகின் குற்றச்சாட்டு நிராகரித்தார் ஜனாதிபதி



(கொழும்பு)

ஐ.நா.வின் மனித உரிமைப் பேரவையின் கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிராக மேற்கு லக நாடுகள் சுமத்தும் மனித உரிமை மீறல் தொடர்பான குற் றச்சாட்டுக்கள் அடிப்படையற் றவை என்பதுடன் ஒரு தலைப் பட்சமானதுமென ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள ளார்.

ஜப்பானுக்கான நான்கு நாள் பயணத்தை மேற்கொண்டிருந்த ஜனாதிபதி என்.எச்.கே. தொலை க்காட்சிக்கு அளித்த பேட்டியி லேயே அவர் இவ்வாறு தெரி வித்தார். அந்தப் பேட்டியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

போர் நடைபெற்ற காலத்தில் இராணுவத்தினரால் மனித உரிமைகள் மீறப்பட்டது என சுமத்தப்படும் குற்றச்சாட்டுக் களை முற்றாக நிராகரிக்கின் றேன்.

எவ்விதமான ஏற்றுக்கொள்ள கூடிய சாட்சியங்கள் இல்லாது முன்வைக்கும் அறிக்கை குறித்து நம்பிக்கை கொள்ள முடியாது. அத்துடன் அது பக்கசார்பான அறிக்கை என கருத வேண்டும்.

போருக்குப் பின்னர் இலங்கை படிப்படியாக முன்னேறி வரு கிறது எனவும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மேலும் தெரி வித்துள்ளார்.

# 204 பரிந்துரைகளில் 91 ஐ நிராகரித்தது அரசு

(கொழும்பு)

ஐ.நா. மனித உரிமைப் பேர வையில் இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்பட்ட 204 பரிந்து ரைகளில் 110 பரிந்துரைகளை ஏற்றுகொண்டுள்ளதாகவும் 91 பரிந்துரைகளை நிராகரித்துள் ளதாகவும் அமைச்சர் சமரசிங்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை, 3 பரிந்துரை கள் தொடர்பில் பரிசீலனைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் முன்னேற்றம் தொடர்பில் சீனா, ரஷ்யா உள் ளடங்கலாக பல நாடுகள் தமது பாராட்டுகளைத் தெரிவித்துள்ள அதேவேளை, பிரிட்டன், மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகள் இலங்கையில் இழைக்கப்பட்ட தாகக் கூறப்படும் யுத்தக் குற்றங் கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் உடனடி சுயாதீன விசாரணைகளை முன் னெடுக்குமாறு கூறியுள்ளன.

ஜெனிவாவில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற ஐக்கிய நாடு கள் சபையின் மனித உரிமை கள் பேரவையில் நேற்று முன் தினம் இடம்பெற்ற இலங்கை தொடர்பிலான மீளாய்வின் போதே இத்தீர்மானங்கள் வலி யுறுத்தப்பட்டுள்ளன.

இம் மீளாய்வின் போது, ஓமான், பாகிஸ்தான், வெனி சுலா, சூடான், ஐக்கிய அரபு இரா ஜ்ஜியம், சீனா மற்றும் வியட் நாம் ஆகிய நாடுகள் இலங்கை யின் மனித உரிமை முன்னேற் றங்கள் தொடர்பில் தமது பாரா ட்டுகளை வழங்கியுள்ளன.

இம்மீளாய்வின் போது, ரஷ்யா மற்றும் சீனா ஆகிய நாடுகள் இலங்கையில் மேற் கொள்ளப்பட்டு வரும் அபி விருத்தி நடவடிக்கைகள் மற்றும் மனித உரிமை முன்னேற்றங்கள் தொடர்பில் தமது பாராட்டுகளை தெரிவித்துள்ளன.

# புத்தரை பச்சை குத்திய பிரிட்டன் பிரஜை நாடுகடத்தல்

புத்தர் உருவத்தை பச்சை குத்திய பிரித்தானிய பிரஜை ஒருவரை குடிவரவு குடியகல்வு திணைக்கள அதிகாரிகள் நாடு கடத்தியுள்ளனர். விடுமுறையை கழிப்பதற்காக இலங்கைக்கு வருகைதந்த சுற்றுலாப் பயணியே இவ்வாறு நாடு கடத்தப் பட்டுள்ளார்.

உடல் முழுவதிலும் புத்தரின் உருவத்தை பச்சை குத்தியிருந் ததாக இவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலயத்தின் ஊடாக நாட்டுக்குள் பிரவேசிக்க முயற்சித்த குறித்த பிரஜை, நாட்டுக்குள் பிரவேசிக்க அனுமதிக்கப் படவில்லை.

உடலில் பச்சை குத்திக் கொள்வது தனது தனிப்பட்ட உரிமையும் விருப்பமும் என குறித்த பிரித்தானிய பிரஜை, இலங்கை அதிகாரிகளுக்கு விளக்கமளித்துள்ளார்.

# ஜெனிவா பிரேரணைக்கு எதிர்ப்பு; மன்னாரில் ஆர்ப்பாட்டப் பேரணி

(மன்னார்)

ஜெனிவா பிரேரணைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், ஜனா திபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவு தெரிவித்தும் நேற்றுக் காலை மன்னாரில் ஆர்ப்பாட் டம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

மன்னார் வாழ் தமிழ் பேசும் மக்கள் என்ற பெயரில் குறித்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டுள்ளது.

காலை 11 மணியளவில் மன் னார் பிரதான பாலத்திற்கு அரு காமையில் குறித்த ஆர்ப்பாட்ட பேரணி ஆரம்பமானது.

இதனைத் தொடர்ந்து பஸார் வீதியூடாக சென்று மாவட்டச் செயலகத்தை சென்றடைந்தது.

பின் கோரிக்கை அடங்கிய மகஜர் ஒன்றை ஏற்பாட்டுக் குழுவினர் மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு மதி ஸ்ரான்லி டி மெல்லிடம் கையளித்தனர்.

குறித்த ஆர்ப்பாட்டப் பேரணி யின் போது நூற்றுக்கணக்கான வர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# புதிய சட்டமூலங்களுக்கு எதிராக உயர் நீதிமன்றில் மனுத்தாக்கல்

(கொழும்பு)

நாடாளுமன்றத்துக்கு கொண்டுவரப்படவுள்ள 11 சட்டமூலங்கள், அரசியலமைப்புக்கு முரணானது எனத்தெரிவித்து அவற்றை எதிர்க்கும் 15 மனுக்கள் உயர்நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இறை முகாமைத்துவ பொறுப்புடைமை (திருத்தம்) எனும் பொருளிலான இந்த சட்டமூலத்தை எதிர்க்கும் மனுக்கள், மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் மற்றும் வை.எம்.புஞ்சிபண்டா ரவினால் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இந்தச் சட்டமூலங்கள் தொடர்பில் உயர்நீதிமன்றம் விசேட தீர்மானம் ஒன்றை வழங்க வேண்டும் என மனுதாரர்கள் கேட்டுள் ளனர்.

பெரும்பாலும் புதிய வரிமுறை தொடர்பான சட்டமூலங்கள் பதினொன்றை மார்ச் 8 ஆம் திகதி அவையின் தலைவரினால் நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# இனக்குழப்பத்தில் பொதுபலசேனா? மறுக்கிறார் அத்தஞானசார தேரர்

(கொழும்பு)

இலங்கையில் மீண்டும் இனக்குழப்பத்தை ஏற்படுத்தும் முயற்சிகளை மேற்கொள் ளவில்லை என்று பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்த ஞானசார தேரர் தெரிவித்துள் ளார்.

நேற்றுமுன்தினம் வரகா பொல பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய மொழி மற்றும் சமூக ஒருமைப் பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயகார, பொது பல சேனா அமைப்பு நாட்டில் மீண்டும் இனக் குழப்பத்தை ஏற்படுத்த முனைவதாக குற்றஞ்சாட்டி யிருக்கிறார்.

இனக்குழப்பத்தை ஏற்படுத் தும் முயற்சியை பொதுபல சேனா அமைப்பினர் வேண்டு மென்றே செய்கிறார்களா என் பது குறித்து அறியாத போதும், அவர்களின் செயற்பாடுகள் இனக்குழப்பத்தை நோக்கி இலங்கையை நகர்த்துவதாக உள்ளது என அவர் தெரிவித் தார்.

தற்போது சர்வதேச ரீதியாக இலங்கை அரசாங்கம் நெருக் கடிக்கு முகம் கொடுக்கின்ற நிலையில், பொதுபல சேனா வின் செயற்பாடுகள் மேலும் பிரச்சினையை ஏற்படுத்தும் என்றும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த கலகொட அத்தே ஞானசார தேரர், வாசுதேவ நாணயகார போன்றோர், சிறு பான்மையினரின் உரிமை களுக்காக செயற்பட்டு சிங் களவர்களை மறந்துவிட்டனர்.

சிங்கள மக்களின் வாக்கு களால் அமைக்கப்பெற்ற அர சாங்கத்தில் அமைச்சுப் பொறுப் புக்களை வகித்துக் கொண்டு, சிங்களத்துக்குஎதிராக செயற்ப டுகின்றனர்.

எவ்வாறாயினும் பொது பல சேனா அமைப்புக்கு நாட்டில் இனக்கலவரத்தை தூண்டும் எண்ணம் இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 மார்ச் 17 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.